

# ஞானச்சுடர்

ஆனி

2010



ஸ்ரீ

முருகா


வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்

எறுபோல் பீடு நடை.

பொருள் : கற்புடைய மனையாளை உடையரில்லாதவர் பகைவன் முன் பெருமிதமாக நடக்கமுடியாது (59)

மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு.

பொருள் : மனைவியின் நற்குண நற்செய்கைகளே ஒருவனுக்கு மங்கலமென்றும், நல்ல மக்களைப் பெறுதல் அம்மங்கலத் துக்கு அழகு என்றும் அறிவுடையோர் கூறுவர் (60)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### திருத்தாண்டகம் - 6

ஊதிய மாவதும் நீயே உயிருக் குறுதுணை நீயே
நீதி யதிபதி நீயே நேற்றின் றாவதும் நீயே
ஒதி யுணர்வதும் நீயே உத்தமர் சித்தமும் நீயே
சாதி சமயமும் நீயே தானென்னை யாண்டதும் நீயே 6

எல்லாப் பொருள்களும் நீயே ஏந்திழை பங்கனும் நீயே
வல்லமை யுள்ளதும் நீயே வாழ்நாட்க ளாவதும் நீயே
பல்லோர் புகழ்வதும் நீயே பரிமேல் வந்ததும் நீயே
நல்லோர் உள்ளமும் நீயே நானா யிருப்பதும் நீயே 7

ஏற்றில் வருவதும் நீயே என்புக லாவதும் நீயே
கூற்றை யுதைத்ததும் நீயே குருவாய் வருவதும் நீயே
சாற்ற வரியதும் நீயே தானா யிருப்பதும் நீயே
போற்ற வரியதும் நீயே புத்தியி லுள்ளதும் நீயே 8

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

2010 ஆனி

ஞானச்சுடர் மலர்



# ஞானச்சுடர் மலர்

# 2010

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 150

## 2010 ஆனி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆச்சிரமம் அழைக்கிறது | கே.எஸ். சிவஞானராஜா | 1 - 2 |
| வாழ்த்துப்பாமாலை | இ. ஸ்ரீதரன் | 3 |
| நம்பிக்கையின் வெளிப்... | எஸ்.ரி. குமரன் | 4 - 8 |
| வாராந்த நிகழ்வின்... | - | 9 - 12 |
| தினம் தினம் ஆனந்தமே | ஜக்கி வாசுதேவ் | 13 - 15 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 16 - 22 |
| பெறுதற்கரிய மானுடப்... | பு. கதிரித்தம்பி | 23 - 24 |
| ஆசாரக்கோவை | - | 25 - 26 |
| சிறுவர் கதைகள் | - | 27 - 28 |
| நித்திய அன்னப்பணி | - | 29 - 30 |
| "நமனும் நரகமும் | வாரியார் சுவாமிகள் | 31 - 32 |
| சிவபுராணம் | சு. அருளம்பலவனார் | 33 - 35 |
| புதுமையிலும்... | கவிமணி அன்னைதாஸன் | 36 |
| மழை யாருக்காகப்... | இரா. செல்வவடிவேல் | 37 - 41 |
| பெரியாழ்வார் திருமொழிப்... | ச. லலீசன் | 42 - 46 |
| தவமுனிவனின்... | சிவ மகாலிங்கம் | 47 - 51 |
| ஆலயம் தொழுவது.. | தி. பொன்னம்பலவாணர் | 52 - 53 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 54 - 55 |
| திருக்காளத்தியப்பர்... | திருமதி ல. கவிதா | 56 - 59 |
| வருடாந்த வைகாசிப்... | - | 60 - 61 |
| அருட்கவி. சீ. விநாசித்தம்பி | செல்வி. தி. வரதவாணி | 62 - 63 |
| கற்புக்கரசி | S.S. றஜீந்திரன் | 64 - 66 |
| பற்றித் தொடரும்..... | வ. குமாரசாமி | 67 - 71 |
| திடமாக உறையும்... | செ. பாலச்சந்திரன் | 72 - 77 |
| நூற்றைம்பதாவது.... | காரை. எம்.பி. அருளானந்தம் | 78 |
| செய்திச் சிதறல்கள் | - | 79 |
| ஒரு திருமுருகன் வந்தான் | ஐ. சண்முகலிங்கம் | 80 - 83 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 84 - 85 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 86 - 92 |


**அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா**


**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 3219599

Web Site : WWW. Sannithiyan.org

பதிவு இல. Q.D/46/NEWS/2010

அச்சகம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு



# ஞானச்சுடர்
# வைகாசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை -**

வைகாசிமாத மலருக்கான வெளியீட்டுரையை ஆச்சிரமத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவரும், கிராம சேவையாளருமாகிய திரு. சி. சிவபாலசிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் தொண்டைமானாற்றங்கரையில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வேலவனின் திருவருளால் ஞானச்சுடர் மலரானது தொடர்ந்து வெளிவருவதோடு சைவசமயத்தவர்களுடைய ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தும் நோக்கமாக இந்நூல் வெளிவருகிறது.

சந்நிதி வேலவனின் திருவருளால் 149 ஆவது மலராக வெளிவந்த ஞானக் குழந்தைக்கு வெளியீட்டுரையை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என்று கூறி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை-**

ஞானச்சுடர் 149 மலருக்கான மதிப்பீட்டுரையை திரு. துரை கணேசமூர்த்தி ஆசிரியர் (யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்கள் நிகழ்த்தினார்கள்

அவர் தனது உரையில் ஞானச்சுடர் மலரானது சிறந்த ஆன்மீகக் கட்டுரைகளைத் தாங்கி வருவதோடு, மாதாமாதம் தவறாது வெளிவருகின்ற ஒரு சஞ்சிகையாக மிளிர்கின்றது.

மேலும் இந்நூலானது கடும் மழை, போர்ச்சூழல் போன்ற இயற்கை அனர்த்த காலத்திலும் சரி தனது ஒழுங்கை மாறாத ஒரு நூலாக விளங்குகின்றது. இந்நூலில் இடம்பெற்ற கட்டுரைகள் யாவும் தரம் மிக்கவை.

இனி தொடர்ந்து வரும் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது எல்லோருக்கும் ஞான அறிவை ஊட்டும் என உறுதி கூறிக்கொண்டு, நான் இம்மலருக்கான மதிப்பீட்டுரையை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.




நமது மனதை சுத்தமாக வைத்திருப்பதற்கு எம்மால் மேற்கொள்ளப்படும் சேவைகள் ஒரு காரணமாக அமைகின்றன. அந்த வகையில் எம்மைப் பீடித்துள்ள அகங்காரங்கள் அகன்று எவ்வுயிரையும் தன்னுயிர்போல் மதிக்கும் பெருநிலைக்கு நாம் ஆளாகின்றோம்.


சேவை என்பது தொண்டினையே குறிக்கும். தொண்டானது பிரதியுபகாரம் கருதாமல் தெளிந்த மனத்துடன் மனம் விரும்பிச் செய்வதாகும். ஆன்மீகத் தொண்டு, அறத்தொண்டு, சமூகத்தொண்டு என்று தொண்டு பல வகைப்படும். ஆன்மீகத் தொண்டு செய்வதற்கு மூல காரணமாக அமைவது தெய்வ சிந்தனையாகும். அதனடிப்படையில் ஆன்மீக நாட்டம்ஏற்படுகிறது. அது இல்லாதவர்கள் கடவுளுக்கோ அல்லது இறையடியார்களுக்கோ தொண்டு செய்வது கடினம்.

ஆனால் மக்களுக்குச் செய்யப்படும் சேவை, தொண்டு இறைவனுக்குச் செய்யப்படும் சேவையாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு மனிதரிடத்தும் இறைவன் உறைகின்றான் என்னும் அடிப்படையில் மக்கள் சேவை மகேசன் சேவை என்று ஆகின்றது. அடுத்தவனும் மனிதன் தான் எனும் உணர்வுடன் அவனுக்கு உதவுவதன் மூலமும், தொண்டு செய்வதன் மூலமும் இறைவனுக்கு தொண்டு செய்வது போலாகிறது. மக்கள் தொண்டு செய்பவனுக்கு மனத்தூய்மையும் பிறர் நலன் பேணும் மனப் பாங்கும், மனப்பக்குவமும் இன்றியமையாதவை.

தன்னலம் கருதாது, பிரதி உபகாரம் எதிர்பார்க்காது தூய்மையான மனத்துடன் நலிந்து போனவர்களுக்கு உதவுபவனும் பணிவிடை செய்பவனுமே உண்மையான தொண்டன். சேவையாளன். நாம் எம்மைச் சார்ந்த சமூகத்துக்கு உளப்பூர்வமாக உண்மையாக தொண்டாற்றும் போது அதன்மூலம் நாம் பெருவாழ்வினை அடையலாம். மனிதாபிமானம் மனித நேயம் உள்ள எவரும் அடுத்தவனுக்கு உதவும் தொண்டு செய்யும் இயல்புடையவனே அவ்வியல்புடன் உண்மையும் நேர்மையும் சேர்ந்தாலே அவன் தொண்டனாவான். அடுத்தவன் துன்பத்தை தான் அனுபவிப்பதுபோல் உணர்ந்தவனால் மட்டுமே முழுமையான தொண்டு செய்ய இயலும்.

ஆனாலும் இன்றைய காலத்தில் சமூகத் தொண்டு செய்யப் புறப்படுபவர்களில் கணிசமானோர் பிறர் நலன் பேணுவதைவிட சுயநலன் பேணுவதற்கு முயல்வதையே காணமுடிகிறது. தமது புகழ் பதவிகளைப் பேணுவதற்கு மக்களுக்குச் செய்யும், செய்து கொண்டு இருக்கும் தொண்டை விளம்பரப்படுத்தி தமது நிலையை திடப்படுத்திக் கொள்கிறார்கள். நல்ல தொண்டன் தான் செய்யும் பணியைத் தனக்குப் புகழ் சேர்க்கப் பயன்படுத்தமாட்டான். ஆகையால் நாம் உளப்பூர்வமாக தொண்டு செய்யும் போது உள்ளம் பெருங் கோயிலாகும். அக்கோயிலுள் இறைவன் உறைவான் என்பது திண்ணம்.

# ஆண்டு 13 சந்நிதியான் ஆச்சிரமச் சபையரின் திங்கள் மலர் ஞானச்சுடர் மலர்



உலகிலே யொருசுடர் ஞானச்சுடர் – சந்நிதி
உத்தமன் முருகன்கை யேந்துஞ்சுடர்
அளவின்றி மூலத்தானம் ஆடுஞ்சுடர் – ஐயன்
அருளாடத் தானாடும் அன்புச் சுடர்

காலை நீல வானியெழுஞ் சுடருமல்ல – மேற்கில்
கதிர்மதியாய் தோன்றி எழுஞ் சுடருமல்ல
சோலைசூழ் சந்நிதியாச் சிரமத்திலெழும்
சுவாமிநாதன் பெயரால் வரும் திங்கள் சுடர்

சீலச் சைவ கலைப்பண்பாட்டுச் சபை
செல்வச்சந் நிதியான் அன்னப் பணியோடு
பாலனென ஞானச்சுடர் பதித்துலகில்
பதின்மூன்றாம் ஆண்டிலும் நடையைப் பழகுகிறான்

அருளாளர் மயில்வாகனம் முகப்பாக – தோகை
ஆடுமயில் முருகேசன் அலங்கரிக்க
பொருளாக வேலாயுதம் பிறங்கி நிற்க – மாதமாதம்
பெருஞானச் சுடர் உல பிரகாசிக்கும்

திங்கள்தொறும் பூத்துவரும் அம்மலரில்
பிறப்பிப்போர் வெளியிடுவோர் வாங்குவோர்கள்
தங்கமென சுடர்தரும் பெரும் தகவலுடன்
சான்றாக கணக்குகளும் தனிவருமே

ஆச்சிரமச் சுவாமிகளின் அருள் நிலைகள் – சந்நிதியின்
அப்பனது அருளாட்சி ஆடல்வரும்
பாத்திரமாய் அன்பர்கட் டுரை கவிதை
பழைய சந்த ஆசாரக் கோவையும் வருமே

உளந்தூய்மை வாய்மையினால் உயர்வுற்றார் – தமது
உற்றார் போல் யாவரையும் பற்றாகவே
வளஞ்சேரும் கட்டுரைகள் வரைவோர் எல்லாம்
வற்றாது என்று மொன்றாய் நன்று வாழ்கவே

புலவர் மணி
வை.க. சிற்றம்பலவனார் அவர்கள்

உ

# ஆனி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**அ. பரமநாதன்**
(சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்)

**திரு செ. தவேந்திரநாதன்**
(கணபதி வெதுப்பகம், உரும்பராய்)

**திரு பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**திரு ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**திரு கந்தையா ஏகாம்பரம்**
(புறாடிலேன், அரியாலை)

**திரு த. ஜெகரெத்தினம்**
(விஜிதா ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

**திரு தம்பையா புவனேந்திரன்**
(முகாமையாளர், இலங்கை வங்கி, அச்சுவேலி)

**திரு சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**திரு சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)

**திரு ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**செல்வி S. ஐடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**திரு அ. கணேசமூர்த்தி**
(உரும்பராய் வடக்கு, உரும்பராய்)

**திரு வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**உரிமையாளர்**
(குகன் ஸ்ரோர்ஸ், ஊரெழு மேற்கு)

**திருமதி செ. தவமணி**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**தலைவர் / செயலாளர்**
(அளவெட்டி ப.நோ.கூ. சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)
**உரிமையாளர்**
(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)
**திரு கு. சோதிராசா**
(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)
**உரிமையாளர்**
(பேபி போட்டோ, கந்தர்மடம்)
**திரு ப. இராசலிங்கம்**
(செட்டியமடம், வட்டுக்கோட்டை)
**திரு மு. வைகுந்தவாசன்**
(இலங்கைவங்கி, அச்சுவேலி)
**திரு S. விக்னேஸ்வரராசா**
(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)
**திரு சி. இராமகிருஸ்ணா ஆசிரியர்**
(வடமராட்சி கணிதக் கல்வி மூலவள நிலையம், கரணவாய்)
**திரு இ. சண்முகலிங்கம் J.P**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**திரு மு. இராசேந்திரா**
(தும்பளை, பருத்தித்துறை)
**திருமதி இராஜேஸ்வரி பத்மதேவா**
(இளை. ஆசிரியை, மீசாலை)
**திரு பொ. வெங்கடேஸ்வரன்**
(நகரசபை, பருத்தித்துறை)
**வே. சிவகுமார்**
(மண்டான், கரவெட்டி)
**திரு வ. பாலசிங்கம்**
(கிராம சேவையாளர், கரணவாய்)
**திரு ம. ஸ்ரீஸ்கந்தராசா**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**உரிமையாளர்**
(வேலழகன் இரும்புக் களஞ்சியம், சுன்னாகம்)
**திரு இ. சரவணபவன்**
(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)
**உரிமையாளர்**
(அம்பிகாபதி பான்ஸ் கூட், யாழ்ப்பாணம்)
**திரு கோ. யோகலிங்கம்**
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
**திரு சி. நவரெத்தினம்**
(துவாரகை, கரணவாய்)

**திருமதி அ. குணநாயகம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**திரு ப. சிவராசா**
(தூதாவளை, கரணவாய்)
**திரு செ. சிவானந்தம்**
(கிராம சேவையாளர், புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**திருமதி அருள்நங்கை சண்முகநாதன்**
(புதிய உயர்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம்)
**திரு சி. தங்கராசா**
(ஆவரங்கால், புத்தூர்)
**திரு மார்க்கண்டு கருணாநிதி**
(நடராசா புடவைக்கடை, அச்சுவேலி)
**திரு S. குணராசா**
( தாளையடிலேன், திருநெல்வேலி)
**திரு உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)
**திரு பா. அமிர்தலிங்கம்**
(அமிர்தா தொலைத்தொடர்பகம், ஊரெழு கிழக்கு)
**திரு கந்தையா நடராசா**
(இடைக்காடு, அச்சுவேலி)
**திரு அருந்தவசீலன்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**திரு வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ. சங்கம்)
**திருமதி கற்பகமலர் இரத்தினசிங்கம்**
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)
**திரு பொ. பாஸ்கரன் J.P**
(சோமசுந்தரம்வீதி, ஆனைக்கோட்டை)
**திரு கு. சிவபாலராஜா**
(பொது சுகாதாரப் பரிசோதகர், நல்லூர்)
**திரு இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
**திரு A. விமலதாஸ்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**திரு L.S ஜெகநாதன்**
(நாதஸ்வர வித்துவான், உடுப்பிட்டி)
**திரு க. ஆனந்தராசா**
(வதிரி, கரவெட்டி)
**திரு இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)

**திரு செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)
**திரு க. கந்தவனம்**
(ஜெயமலர் அகம், கப்பூது, கரவெட்டி)
**திரு செல்லத்துரை தங்கராஜா**
(அன்னை இல்லம், உரும்பராய்)
**திரு வே. கணபதிப்பிள்ளை**
(குலானை, கரவெட்டி)
**திரு S. நேசன்**
(கேணியடி, யாழ்ப்பாணம்)
**திருமதி இராசரத்தினம் அருந்ததி**
(போதராமடம், துன்னாலை)
**திரு Dr V. கணேசவேல்**
(சுந்தரவேல் வைத்தியசாலை, அல்வாய்)
**திருமதி T. நடராஜா**
(சந்தனத்தரை, உடுப்பிட்டி)
**திருமதி சிதம்பரநாதன் சரஸ்வதி**
(குமுளடி, அல்வாய்)
**திரு சி. ஆனந்தராசா**
(ஆலடி, பொலிகண்டி)
**திரு சி. சிறீகாந்தன்**
(கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்)
**திரு ஆ. சோமசுந்தரம்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**திரு நடராசா செல்வேன்**
(தணிகை, நெல்லியடி)
**திரு க. பூலோகரட்ணம்**
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
**திரு நா. வடிவேஸ்வரன்**
(தும்பளை பருத்தித்துறை)
**திரு சு. கிருபானந்தன்**
(கே.கே.எஸ் றோட், இணுவில்)
**திரு ஆ. சிவராசா**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)
**திரு செ. மகேந்திரவர்ணன்**
(கற்பகப் பிள்ளையார் கோவில்லேன், உரும்பராய்)
**அதிபர்**
(மத்திய கல்லூரி, அச்சுவேலி)

உ

**- கே. எஸ். சிவஞானராஜா அவர்கள் -**




ஆச்சிரமம் என்ற சொல் கேள்விப்பட்டதுமே, சட்டென்று முன்வந்து எம்மை உச்சாடனம் செய்வித்துச் செல்வது சந்நிதியரன் ஆச்சிரமம் ஒன்றே ஆகும். அதில் இருக்கும் ஆனந்தமே ஒரு பேரானந்தம். எவ்வாறெனில் அது சாதனைகளின் உறைவிடம். ஆம்! சந்நிதி முருகன் எதை எதையெல்லாம் செய்ய எண்ணிய மாத்திரத்திலேயே அதையதையெல்லாம் செய்யும் வண்ணம் ஆச்சிரமம் தயாராகிறது. குறிப்பாக சிறார்களின் அறிவுத் தானம் தொடக்கம், நாளாந்த அன்னதானம், வசதி குறைந்தவர்களுக்கான பொருளாதார, தொழில், மருத்துவ, உயர் கல்வி மேம்பாட்டு உதவிகள் வரை, பல நோக்கங்களை வியாபித்து, பக்குவமாக, பவ்வியமாக, பரோபகார சிந்தையோடு, பரபரப்பின்றி, பலன் கருதாது, பதவி கருதாது, பட்டம் கருதாது ஒரு படிந்த நேரசூசிக்கமைவாக, ஒரு சமயபீடமாக நின்று சாதித்து வருகிறதென்றால் அது முருகன் விரும்பிய வழியாக, யாவுமவன் செயலாகவே அங்கு கைகூடுகிறது. "நான்" - மாறினால் நாடு தானாகவே மாறும் என்ற தாற்பரியத்திற்கு அமைவாக நான் என்ற மமதை, நான் என்ற எண்ணம் எள்ளளவும் அங்கில்லை எனலாம். இந்த விடயம் எமது கல்வியிலும் சரி, ஆன்மீகத்திலும் சரி உணரப்படுமாயின், கல்வியும், ஆன்மீகமும் எங்கேயோ சென்று பூத்துக் காய்த்து இந்த மண் உயிர் பிழைத்திருக்கும். குடும்பத்திலும், கூடங்களிலும், நிறுவனங்களிலும், தோல்விகளிலும், வெற்றிகளிலும் "நாம்" என்ற உணர்வு வெல்லப்பட வேண்டும். மாறாக நான் வெல்லப்படுமாயின் ஆணவமே வெல்லும். அஃது நிரந்தரமுமல்ல. நிச்சயமுமல்ல!

சந்நிதியான் ஆச்சிரமத்தில் முருகனின் நாமமே முதன்மை பெறுகிறது. "எல்லாம் அவன் நடாத்துகின்றான்" என்று ஆச்சிரம சுவாமிகள் அடிக்கடி சொல்லிய

வண்ணம் இருப்பார். நான் யார்? நாம் யார்? எல்லாமே அவன் தான்! இது ஒரு ஆச்சிரமத்தின் மந்திரமாக இருப்பது ஆன்மீக வாசல் என்று கூடச் சொல்லலாம். இன்னுமொருபடி மேலாக இலவசமான - மருத்துவ சேவையும் நடைபெறுகிறது. ஆம்! அரச மருத்துவ மனைகளிலும் பார்க்க, தரமான மருந்துகளான ரொனிக், ஊட்டச்சத்து, நோய்த் தடுப்பு வகைகளையும் நோயாளிகள் பெற்று, குணமடைந்தவர்களாய் முருகனைப் போற்றி, ஆச்சிரமத்தையும் வாழ்த்துகிறார்கள். இன்னும் சொல்வதானால் தகைமை யான ஆளணியும், தகுதியான முகாமைத்துவமும் அங்கு வெல்லப்பட்டு வருகிறது. அல்லாமலும் ஞானச்சுடர் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு, உயிரோட்ட மாக்கப்பட்டு வருகிறது. அத்தோடு, சித்தர்களும், முனிவர்களும், ஞானிகளும் ஆசிகள் தரக் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் ஆன்மீக தரிசனம் செய்வதற்கான ஒரு வாசலாக, எளிதான ஒரு பீடமாக ஆச்சிரமம் யாவரையும் அழைக்கிறது. செல்வோமா? வாருங்கள்....!

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021- 2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் இருக்கவேண்டும்.



வாராந்த நிகழ்வில் கலந்து கொண்டோரைக் கௌரவிக்கும் நிகழ்வில் திரு ஆறுதிருமுருகன் அவர்கட்கு ஆச்சிரம சுவாமி அவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் அவர்களும் காணப்படுகின்றார்கள்.



மேற்படிநிகழ்வில் இளைப்பாறிய ஆசிரியரும் எழுத்தாளருமாகிய ஐ.சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகம்) அவர்களுக்கு பேரவையின் தலைவர் இளைப்பாறிய தபாலதிபர் க.சிவக்கொழுந்து நினைவுக்கேடயம் வழங்கும் நிகழ்வு.

# வாழ்த்துப்பாமாலை

- சிவநெறிக் கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்** -

நல்ல பல கட்டுரையும் நயக்க நல்ல கவிதைகளும்
சொல்ல வல்ல தாற்பரியமும் சுவைக்க நல்ல ஆக்கங்களும்
மெல்ல வந்து எம் கரங்களில் வெள்ளிக்கிழமை நாளினிலே
இல்லமது சிறந்திடவே இனிதாய்த் தவழும் "ஞானச்சுடரே!"

கருத்தாழம் மிக்க பல கட்டுரைகளைத் தாங்கி வந்தே
விருத்தாந்தம் பேசி விடயங்களை நாம் சுவைத்திடவே
பொருத்தாமல் பொருத்தி மிக்க புகழோடு எங்கும் ஒளி வீசி
பெருத்தாங்கு ஜெயம் பெறவே வாழ்ந்திடு நீ பல்லாண்டு!

அன்னப்பணி செய்யும் ஆச்சிரம வெளியீடாய் - நல்ல
வண்ணப் பதிப்பாய் நீ வலம் வரும் நல்லழகைக் கண்டு
கன்னத்தில் விரல்தட்டி நீ கண்ணியமாய் ஒளிவீச
என்னிதயங் குளிர வாழ்த்துகிறேன் நீ வாழிய பல்லாண்டே!

ஆற்றங்கரையான் அந்த ஆறுமுகன் நல்லருளாலே
மாற்றங்கள் பல பெற்று மங்களகரமாய் நீ வெளிவந்து
ஏற்றங்களுடனே எம் கரங்களில் தவழும் நற்புத்தகமே!
சீற்றங் கொள்ளாது நீ சிறப்புடன் வாழிய பல்லாண்டே!

கண்ணியமாய் விளக்கந்தரும் கட்டுரைகள் பல தாங்கி
புண்ணியமே நாம் செய்திடப் புத்தி புகட்டும் பெட்டகமாய்
எண்ணிய கருமம் யாவும் ஏற்றமுடன் நீ புரிந்து - இந்த
மண்ணினிலே மங்களமாய் வாழ்ந்திடு நீ பல்லாண்டே!

"நலந்தரும் ஞானச்சுடரே! நீ பலம் மிகப்பெற்று வாழியவே"

---

**மனத்தூய்மை இல்லாமல் காரியத்தைச் சாதிக்கமுடியாது.**

# நம்பிக்கையின் வெளிப்பாடே சடங்கு

**எஸ். ரி. குமரன் B.A. Hons. அவர்கள்**

சடங்குகள் மனித வரலாற்றுடன் இணைந்தவையாகும். பண்டைய தமிழ்ச் சமூகத்தில் ஆற்றுகை செய்யப்பட்ட கலை வடிவங்கள் சடங்குகள் சார்ந்தவையாக அமைந்துள்ளன. சடங்கின் அடியாகவே நாடகம் தோற்றம் பெற்றது என்ற கருத்தும் அறிஞர்களிடையே நிலவுகின்றது. ஆதி காலத்தில் வாழ்ந்த மனிதன் இறை சிந்தனையோடு வாழ்வதற்காகவும் தங்களுடைய அச்ச உணர்வைப் போக்குவதற்காகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காகவும் தொழில்களை செய்யும்போது சடங்குகளை மேற்கொண்டான். நாகரிகம் வளர வளர சடங்கு முறைகள் பல்வேறு நிலைகளிலும் வளர்ச்சியடைந்தன. இச் சடங்குகள் இன்றும் கூட கிராமிய மக்களிடையே பயிலப்பட்டு வருகின்றன.

சடங்கானது சமூக பொருளாதார வாழ்க்கை முறையுடன் ஒன்றித்ததாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித் தன்மை கொண்ட சடங்கு உண்டு. சடங்கின் தன்மை செயல் சார்ந்ததாக உள்ளது. சடங்கானது புனிதம் சார்ந்ததாக நிலைமாற்றம் அருளைப் பெறுவதாக உள்ளது. சடங்கானது சமூக ஒன்றுகூடலுக்கும் நம்பிக்கைக்கும் உரியதாக விளங்குகின்றது.

***தோற்றம் :***

உலகம் தோன்றி மக்கள் தோன்றி அவர்கள் வேடுவர்களாகத் திரிந்து பின்னர் தமக்கான வாழ்விடங்களை அமைத்து குலக்குழும வாழ்வை வாழத் தொடங்கினர். இந்நிலையில் வாழ்வாதார தொழிலாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் வாழ்வது உணவுக்காக என்று வாழ்ந்தவன் பின்னர் சிந்திக்கத் தொடங்கினான். தனக்கு இடையூறாக இருக்கும் இயற்கைச் சக்திகளை இனம் கண்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும், அம்மேலான சக்திகளுக்கு வழிபாடியற்றுவதன் மூலம் அவைதரும் அழிவிலிருந்து தப்பமுடியும் என நினைத்தான். அதற்காக அவன் சில காரியங்களை புனித

மாகச் செய்ய ஆரம்பித்தான் இதன் விளைவாக சடங்குகள் பிறந்தது.

மனிதனால் புனிதத்தன்மை என்னும் பிரமத்தை தோற்றுவித்து அதன் மூலம் சமயம் என்னும் முறையை ஏற்படுத்திய நிகழ்வின் இரண்டாம் கட்டமாக சடங்குகள் ஏற்படுத்தப்பட்டன. இச்சடங்குகள் புனிதத் தன்மையின் பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தை கோலங்களின் தொகுப்பாகும்.

அடுத்த கட்டத்தில் புனிதத் தன்மையை மக்கள் இறைவன் என்னும் பெயரால் மனித உருவமாக்கியோ (anthropomophism) மனித உணர்வுகளாக்கியோ (anthropopathism) வழிபட முற்பட்டதால் இறைவனுக்கும் மனமுண்டு என எண்ணி இறைவனின் மனதை நிறைவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படும் செயல்களே சடங்குகளாயின.

இச்சடங்கானது காலத்திற்குக் காலம் அவனது சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கமைய மாறுபட்டு மாற்றங்களுக்குட்பட்டது. அதன் விளைவாக ஒரு பொதுமையை மையப்படுத்திக் கொண்டு நெகிழ்வுடன் வளர்ந்து இதுவரை நிகழ்ந்தேறி வருகின்றது.

### *சடங்கு யாரால் ஏன் செய்யப்படுகின்றது?*

சடங்கானது பண்டைய ஐதீகங்கள், நம்பிக்கைகளின் அடிப்படையாக ஆற்றப்படுகின்றது. நம்பிக்கையை வேண்டி நிற்கும் மக்களிற்காகவும் நேர்த்திக் கடனை வைத்த மக்களிற்காகவும் இச்சடங்கானது ஆற்றப்படுகின்றது. சடங்கானது சமூக ஒன்று கூடலுக்கான சாதனமாக சமூக பிரச்சனையைத் தீர்க்கும் கருவியாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.

கடவுளருடைய கட்டளையைப் பெற்றே சடங்கானது மேற்கொள்ளப்படுகிறது. சடங்கு வழிபாட்டு முறைகள் ஆகமம் சாரா முறையில் வழிபாடியற்றப்படுகிறது. சடங்கானது தொழில் விருத்திக்காகவும் நோய் நொடியற்ற வாழ்க்கை நடாத்துவதற்காகவும் வருடாவருடம் நிகழ்த்தப்படுகிறது. உதாரணமாக தீ மிதிப்பு சடங்கின் பொழுது ஒருவரிடம் ஏன் செய்யப்படுகின்றது எனக் கேட்டபொழுது அவர் “தம்பி என்னுடைய பிள்ளைக்கு தீராத வருத்தமாக இருந்தது. மருந்து எல்லாம் எடுத்துப் பார்த்தும் சரிவரவில்லை. பிறகு எங்கட வைரவருக்கு நேர்த்தி வைச்ச பிறகுதான் மாறினது” எனக் கூறினார். இச்சடங்கானது பிரச்சனையான மனநிலையில் இருப்பவர் விடுதலை பெற உதவுகின்றது.

சடங்கானது இறைவனை சாந்திப்படுத்துவதற்காகவும் உரிய காலப்பகுதியில் சடங்கை ஆற்றாதுவிட்டால் இறைவனின் தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் மழைவளம், நாடு செழிக்க வேண்டியும் மேற்கொள்ளப்படுகின்றது.

### *சடங்கு எவ்வாறு ஆற்றுகை செய்யப்படுகின்றது*

சடங்கு நடைபெறப் போகின்றது

என்றால் சடங்கினை நடாத்தும் சமூகத்த வர்கள் அனைவரும் கூடி சடங்கை செய் வது பற்றி தீர்மானிப்பார்கள். சடங்குக்கு உரிய ஒழுங்குகள் எல்லாவற்றையும் சமூகத்தவர் தாமாகவே முன்வந்து ஏற்று செய்கின்ற நிலை காணப்படுகின்றது.

சடங்கில் ஒழுங்கமைத்தல் என் பது முக்கியம் பெறுகின்றது. சடங்கை ஒழுங்கமைப்பவர்கள் ஆலயச் சூழலை துப்புரவு செய்தல் வேண்டிய பொருட்கள் பணம் முதலியவற்றை சமூகத்தவரிடம் இருந்து பெறல் என்பன இடம்பெறும். சடங்கு பற்றி பறை அடித்து அறிவிக்கும் பண்பு ஆரம்ப காலங்களில் காணப்பட் டது. தற்போது துண்டுப் பிரசுரம் அடித்து அறிவித்தல் காணப்படுகின்றது.

சடங்கு நிகழ்த்தப்படும் ஆலயச் சூழலானது ஒதுக்குப் புறமானதாகவும் இயற்கையான மரங்கள் சூழ்ந்ததாகவும் அம்மரத்தில் ஒன்றே தெய்வத்தின் மூல உற்பத்தி ஸ்தானமாகவும் காணப்படு கின்றது. சடங்கை வழிப்படுத்துபவர் தலை மைப் பூசாரியாவார். குறித்த சமூகத்தின் வழிவந்தவராகவும் பரம்பரையாக பூசை செய்பவராகவும் பங்கு பற்றுவோரை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத் துள்ளவராகவும் காணப்படுகின்றார்.

சடங்கானது தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பே விளக்கு வைத்தல் என்பது இடம்பெறுகின்றது. விளக்கு வைத்தல் என்பது சடங்கின் தொடக்க நாள் ஆகும். விளக்கு வைத்து 7ஆம் நாள் பெரும் சடங்கு நடைபெறுகின்றது.

***தயார்ப்படுத்தல் (பயிற்சி)***

சடங்கிற்கான ஆயத்தங்களை செய் தல் தயார்ப்படுத்தல் என்பதாகும். இச் சடங்கு பரம்பரையாக எமது சந்ததியால் ஆற்றப்படுகின்றது. இச்சடங்கினை ஆற்று வதற்கு பூசாரி மட்டும் தயார் நிலையில் இருந்தால் போதாது. சடங்கினை ஆற்று கின்ற சமூகத்தவர்கள் சடங்கிற்கான ஒவ் வொரு பொறுப்புக்கும் உரியவர்களாய் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். இச் செயற்பாட்டிற்கான பயிற்சியை சமூ கத்தின் முன்னோர் செய்த செயற்பாட்டின் ஊடாகப் பெறுகின்றனர்.

சடங்கு நிகழும் ஆலயச் சூழலை துப்புரவு செய்து ஆயத்தப்படுத்தல் சடங் கிற்கு தேவையான பொருட்களை வாங் குதல் சடங்கிற்குரிய பொறுப்புக்களை ஏற்றல் அதனை திட்டமிட்டு உரிய தினத் தில் செய்தல் போன்றவற்றுக்கான ஆயத் தங்களுக்கு குறிப்பிட்ட சமூகம் தன்னை தயார்ப்படுத்துகின்றது. இந்தத் தயார்ப் படுத்தலின் ஊடாக ஒழுங்காக பிழை இன்றி சடங்கை திட்டமிட்டவாறு நிகழ்த்த முடிகின்றது.

பூசாரியாக வழி நடத்துபவர் சந் ததி வழிவந்தவராக காணப்படுவர். சடங்கை நிகழ்த்துவதற்கான தயார்ப்படுத்தல் பரம்பரை ஊடாக பெற்ற அவதானத்தின் ஊடாகவும் சடங்கிற்கான மந்திரம் போன்ற வற்றை செவிவழியாகவும் கற்றுக் கொள் கின்றான்.

**சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.**

*சடங்கு பற்றிய மதிப்பீடு*

சடங்கில் தெய்வம் என்ற நிலையில் சக்தி எல்லாவற்றையும் இணைத்து செயற்படுத்துகின்றது. சடங்கு நம்பிக்கையின் அடித்தளத்தில் இடம்பெறுகின்றது. பூசாரியை நம்புகிறோம். அதில் நடப்பவற்றை நம்புகிறோம். சடங்கு சமூகத்தின் நம்பிக்கை சார்ந்த ஒன்றாக இருக்கின்றது. பிரச்சனையில் இருந்து விடுபட சடங்கு உதவுகின்றது. நோயினைத் தீர்க்கவும் எதிர கால நம்பிக்கையை கட்டியெழுப்பவும் வாழ்வை வளமுடன் வாழவும் உதவுகின்றது. இதனால் மக்கள் மனதில் நம்பிக்கை ஏற்படுவதன் ஊடாக இதனை ஆற்றுபவர் மீதும் மதிப்பு ஏற்படுகின்றது. சடங்கினை நிகழ்த்துவோரை தெய்வநிலையில் வைத்து எண்ணுகின்ற பண்பும் காணப்படுகின்றது.

சடங்கினூடாக கூட்டொருமைத் தன்மை ஏற்படுகின்றது. இங்கு சடங்கினை வழிப்படுத்துபவர், வாத்தியக்காரர்கள் (பறை, மேளம், உடுக்கு, தப்பு, சங்கு, சேமக் கலம் வாசிப்போர்) வெள்ளை கட்டுபவர். சடங்கில் பங்கு பற்றுபவர்கள் குறிப் பிட்ட சமூகம் சார்ந்தோர், வெவ்வேறு சமூகத் துறை சார்ந்தோர் ஒன்றிணைகின்றனர். சடங்கு செயல் சார்ந்தன. செய்து காட்டப்படுகின்றன.

சடங்கினில் நிலை மாற்றம் ஏற்படுகின்றது. உண்மைத் தன்மை, நம்பிக்கை அடிப்படையில் இந்த நிலை மாற்றம் ஏற்படுகின்றது. ஓர்நிலையில் இருந்து இன்னோர் நிலைக்கு (தெய்வீக நிலைக்கு) போவதற்கு இசைக் கருவிகள் துணை புரிகின்றன. சடங்கில் பங்கு பற்றுபவர் நான் என்ற நிலையில் இருந்து விடுபடும்போது நிலை மாற்றம் ஏற்படுகின்றது. நிலை மாற்றத்தின்போது பிரச்சனையை இனம்காணக் கூடியதாக உள்ளது. கட்டுப்படுத்துகின்ற புறச்சூழல் நிலைமைகளை மறந்து பிரச்சனையை மனம் விட்டுப் பேசி பிரச்சனைகளில் இருந்து விடுபட வழி சமைக்கின்றது. இங்கு பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பிரச்சனையை இன்னொருவரிடம் (சடங்கினை நடாத்துபவர்) சொல்கின்றனர்.

***சடங்கினை அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கலாம்***

01. மதகுருவே தெய்வமாக அபிநயித்து ஆடுகின்ற சமயச் சடங்கு

02. மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக அபிநயித்து ஆடுகின்ற சமயச் சடங்கு.

03. ஐதீகக் கதைகளை உள்ளடக்கிய சமயச் சடங்கு

04. நாடக நிகழ்ச்சிகள் தனியாகப் பிரியத் தொடங்கிய சமயச் சடங்கு.

மதகுருவே தெய்வமாக ஆடும் சமயச் சடங்குகளை நோக்கும் பொழுது இங்கு தெய்வத்திற்கென தனிப்பட்ட கோயில்கள் கிடையாது. கிராமத்தின் அல்லது காட்டின் மத்தியிலுள்ள குறிப்பிட்ட மரம் ஒன்றே கோயிலுக்குரிய நிலையமாகும்.

மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக ஆடிய சமயச் சடங்கு என்பது

*வெற்றி எண்ணத்தைப் பொறுத்தே இருக்கிறது.*

வேட்டையாடிய சமூகத்தினர் வேளாண்மை செய்து வாழ்ந்த காலத்தில் அவர்களின் தேவையைக் கருதி செய்யும் சடங்காக வும் காணப்படுகின்றது.

ஐதீகக் கதைகளை உள்ளடக் கிய சமயச் சடங்கு என்னும்போது மக் களுக்கு நல்வாழ்வையும் பாதுகாப்பை யும் வேண்டி நோய்களைத் தீர்க்கும் தெய் வங்களாக வழிபடப்படுகின்றது. இங்கு சடங்கு தெய்வங்களை மகிழ்ச்சிப்படுத்து வனவாக காணப்படுகின்றது.

நாடக நிகழ்ச்சிகள் தனியாக பிரி யத் தொடங்கிய சமயச் சடங்கு என்னும் போது இயக்குபவன் வேறாகவும் நடிகன் வேறாகவும் பிரியும் முறையும் ஐதீகக் கதைகள் அபிநயிக்கப்படுவதும் சேர்ந்தத னால் நாடகம் தனி ஒரு கலையாகப் பிரி யும் தன்மை ஏற்படுகின்றது. சமயக் கரணங் கள் சார்ந்த நாடகங்கள் என்னும் போது பெருந் தெய்வக் கோவில்களில் நடை பெறும் சூரன்போர், இயமசங்காரம், கம்சன் போர் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

சடங்குகள் பிரதேசத்துக்கு பிர தேசம் வேறுபாடு கொண்டதாயினும் அது பின் வரும் பொது இயல்புகளை கொண்டி ருப்பதை அவதானிக்கலாம். ஒரு குடும் பம், சாதி என்பனவற்றுக்கு மட்டும் உரிய தாகவும், பிராமணர் அல்லாதோரால் பூசை செய்யப்படுவதாகவும், உயிர்ப்பலியினை பெரிதும் ஏற்பதாகவும், நித்திய வழிபாடற்ற தாகவும் காணப்படுகின்றது. சடங்குகளா னவை உத்தரவு பெற்றே நிகழ்த்தப்படு கின்றன. ஆசாரங்கள் பெரிதும் அற்றதாக வும் பெரிதும் மந்திரங்களில் உச்சாடனம் செய்யப்படுவதாயும் பகைமையை அழிக்கும் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது.

சடங்குசார் வழிபாட்டு தெய்வங் களாக அம்மன், காளி, மாரியம்மன், பேச்சி அம்மன், கடல்நாச்சியம்மன், கண்ணகி, கொத்தி முதலான பெண் தெய்வங்களும் வைரவர், ஐயனார், வதனமார், அண்ண மார், பெரியதம்பிரான், வீரபத்திரர் முத லான ஆண் தெய்வங்களும் வழிபடு தெய் வங்களாக உள்ளது.

சடங்குசார் நிகழ்வுகளிலே சடங்கு களை நிகழ்த்துபவர்கள் ஆற்றுப்படுத்து வோர் எனப்படுகின்றனர். பிரதேச ரீதியாக இவர்களால் ஆற்றப்படும் சடங்குகள்சார் வழிபாட்டு முறைகளை நோக்குவோம்.

01. பூசாரிமார் வழிபாட்டு முறை
02. கட்டாடிமார் வழிபாட்டு முறை
03. கப்புகனார் வழிபாட்டு முறை
04. ஆதிக்குடிகள் வழிபாட்டு முறை
05. வேறு வழிபாட்டு முறைகள் என்பன வாகும்.

***முடிவுரை***

சடங்குகள் பற்றிய மதிப்பீட்டின் ஊடாக சடங்கு என்பது ஒரு குழுமம் சார்ந்தது. ஒவ்வோர் சமூகங்களுக்கு இடை யிலும் ஆற்றப்படும் சடங்குகள் அதன் தன்மை உள்ளடக்கம் என்பவற்றை பொறுத்து வேறுபடுகின்றது. சடங்கானது நம்பிக்கை யின் அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்டது.

*மன அமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.*

## படங்கள் தரும் பதிவுகள்

### வாராந்த நிகழ்வின் வரிசையில் கௌரவிக்கப்பட்டோர் (31.01.2010)



அதிபர் ஆ. சிவநாதன் அவர்கட்கு ஆச்சிரமத்து சுவாமி அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்த நிகழ்வு....



ஆச்சிரம வாராந்த நிகழ்வின்போது தொடர் சொற்பொழிவாற்றிய பட்டப்படிப்புக் கல்லூரியின் விரிவுரையாளர் திரு அ. குமாரவேல் அவர்கட்கு நீர்வை க. தியாகராஜசர்மா அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு...

ஒருவரின் பேச்சிலிருந்து உள்ளன்பை அறியலாம்.




தைமாத சிறப்பு பிரதி பெறும் நிகழ்வில்யாழ். மாவட்ட மக்கள் வங்கி பிராந்திய காரியாலய முகாமையாளர் திரு சி. பத்மநாதன் அவர்கள் திரு ஆறுதிருமுருகனிடம் இருந்து மலரினைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு...



கௌரவிக்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த பிரம்மஸ்ரீ க. தியாகராஜ சர்மா (நீர்வைமணி) அவர்கள் சிறப்புரை ஆற்றும் நிகழ்வு.

உயிருக்கு அறிவைத் தருவது திருவருள்.



வாராந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த ஆசிரியர் சிவநாவலர் பாலமுரளி அவர்களுக்கு
கேடயம் வழங்கி கௌரவிக்கும் காட்சி...



செல்வி சிவயோகராணி கதிரவேலு அவர்கட்கு
பொன்னாடை போர்த்தி நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு....

வாராந்த நிகழ்வில் பங்குபற்றிய
திரு சி. சரவணபவன் அவர்கட்கு
நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு...





இளைப்பாறிய ஆசிரியை திருமதி
புனிதவதி சண்முகலிங்கம் அவர்கட்கு
ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்
அவர்கள் பொன்னாடை போர்க்கும் நிகழ்வு
அருகில் பேரவை உறுப்பினர்
க. அருணகிரிநாதனும்
காணப்படுகின்றார்.

விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.

உ


# தினம் தினம் ஆனந்தமே....

-- சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்--

வாழ்க்கை, ஒவ்வொரு கணத்திலும் உங்களுக்கு ஓர் ஆழமான ஆனந்த உணர்வினை ஊட்டிக்கொண்டே இருக்கின்றது. நீங்கள் வாழ்வின் மூலத்தோடு ஐக்கியமாகி இருந்தால், உங்களைச் சுற்றி நடக்கும் எந்த விஷயமும் உங்களைப் பாதிக்காது. ஆனால் இப்போது நீங்கள் மேலோட்டமாக வாழ்வதால், சுற்றி நடக்கும் ஒவ்வொரு விஷயமும் சூழ்நிலையும் உங்களை மோசமாக பாதிக்கிறது.

## இதுதான் வாழ்க்கை

இப்படி உங்களைச் சுற்றி நடக்கும் விஷயங்களை ஓரளவிற்குத்தான் நீங்கள் தீர்மானிக்க முடியும். சில விஷயங்கள் நீங்கள் விரும்பியபடி நடக்கும்; பல விஷயங்களில் உங்கள் விருப்பம் ஒன்றாக இருந்தாலும், அது வேறுவிதமாகத்தான் நடக்கும். வாழ்க்கையின் இயல்பே இப்படித்தான். எல்லாவற்றையும் உங்கள் விருப்பப்படி, நீங்கள் நினைத்தபடி மாற்றிவிட முடியாது. அப்படி மாற்றி அமைப்பது சாத்தியம் என்றாகி விட்டால். அதன்பிறகு உங்களுக்கு வாழ்க்கையே பிடிக்காமல் போய் விடும் ஆபத்து உண்டு!



### ஆனந்தத்தின் அடையாளம்

விரும்பியபடி ஒரே ஒரு விஷயம் நடக்காமல் போய்விட்டாலும்.

அன்பைவிட வலியசக்தி உலகில் எங்கும் இல்லை.

உடனே நீங்கள் துக்கத்தில் ஆழ்ந்து விடுகிறீர்கள் இல்லையா? நீங்கள் இயல்பாகவே ஆனந்தமாக இருக்கும்போது, உங்களைச் சுற்றி எது நடந்தாலும் அல்லது நடக்காவிட்டாலும் நீங்கள் பாதிப்புக்கு ஆளாவதில்லை. உங்கள் மனம் சோர்ந்து போவதில்லை. தொடர்ந்து சுறுசுறுப்பாக உங்கள் செயல்களைப் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். பலனைப் பற்றிக் கவலைப்படாமல் உங்கள் செயல்களில் முழுமையான ஈடுபாட்டை வெளிப்படுத்துவீர்கள் அல்லவா?

இது ஏதோ பெரிய துறவு நிலை அல்ல; நீங்கள் ஆனந்தமாக இருப்பதன் அடையாளம்தான் இது.

நீங்கள் ஒரு செயலைச் செய்வதே ஆனந்தமாக இருக்கத்தான். நீங்கள் ஆனந்தமாகவே செயலாற்றத் தொடங்கிவிட்டால், ஒரு செயலைத் தொடங்கும்போதே அதனுடைய பலனிலிருந்து நீங்கள் விடுவிக்கப்படுகிறீர்கள். ஆனால் ஆனந்தத்தை உங்கள் வாழ்வின் தன்மையாக உணராவிட்டால், செயலின் பலனில் இருந்து நீங்கள் ஒரு போதும் தப்பிக்க முடியாது.

### உங்கள் சேமிப்பே உங்கள் சிறை!

வாழ்க்கை முழுவதும் எல்லோருமே சேமித்துக்கொண்டே இருக்கிறீர்கள். ஒருவர் பொருள் சேமிக்கிறார்; இன்னொருவர் உறவுகளைச் சேமிக்கிறார்; மற்றொருவரோ அறிவைச் சேமிக்கிறார். அவரவருக்கு விருப்பமான ஏதோ ஒன்றை சேமிப்பதை பொதுவாக அனைவருமே செய்கிறார்கள்.

இப்படி நீங்கள் சேமித்ததைத்தான், "நான்" என்று உணர்கிறீர்கள். பிரச்சினை இங்குதான் எழுகிறது. நீங்கள் சேமித்ததோடு உங்களையும் அடையாளப்படுத்தி விட்டீர்கள். அதனால் உங்களது இயல்பான அடையாளம் கரைந்து போய்விட்டது.

சேமிப்பு உங்கள் வாழ்வை வளமாக்குகிறது என்பது உண்மைதான்; அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை. உங்களில் யார் செல்வந்தர்? அதிகம் சேமித்தவர் தானே! ஆனால் இப்போது என்ன சிக்கல் என்றால், நீங்கள் சேமித்த பொருட்களோடு உங்களையும் அடையாளப்படுத்திக் கொண்டு, நீங்களும் ஒரு பொருளாக மாறிவிட்டீர்கள். உங்களது உயிர்ப்பு அந்த நிமிடமே காணாமல் போய்விடுகிறது.

நீங்கள் உறவுகளாக, நட்புகளாக மனிதர்களையும் சேமிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவர்களையும் பொருட்களைப் போலத்தானே நீங்கள் பயன்படுத்துகிறீர்கள்? அவர்கள் உங்கள் உடைமைகள் தானே? உங்கள் கணவன் அல்லது மனைவி, குழந்தைகள் அனைவரும் உங்கள் சொத்துதானே? உயிரற்ற பொருட்களைச் சேமித்துப் பார்த்து, அதில் திருப்தி ஏற்படாதபோது உயிருள்ளவற்றையும் சேமிக்க ஆரம்பிக்கிறீர்கள். அப்படித்தானே?

### எல்லாம் பொருள்தான்?

சேமிப்பதை தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அவற்றோடு உங்களை அடையாளப் படுத்திக் கொண்டதால், உங்கள் உயிரின் தன்மையான ஆனந்தத்தை இப்போது உங்களால் உணர முடியாமல் போய்விட்டது. இப்போதைக்கு உங்களது அனுபவத்தில் உள்ளவை எல்லாமே

நல்ல அறிவு வளர சிறந்த ஆசான் இருக்கவேண்டும்.

பொருட்கள்தான். உயிரை, வாழ்வை நீங்கள் உணராததால், நீங்களும் ஏதோ ஒரு பொருளாகவே வாழ்கிறீர்கள்.

இந்த உலகத்தில் ஏதோ ஒரு பொருளோடு முதலில் உங்களை அடையாளப் படுத்திக் கொண்டீர்கள். பிறகு அதுவாகவே ஆனீர்கள். சிறிது கால ... ன்றபின் அது உங்களுக்குப் போது ... க இல்லை என உணர்ந்தீர்கள். அதனால் இன்னொன்றையும் சேர்த்துக் கொண்டீர்கள்.

உங்கள் அடையாளம் மாறியது. சில காலம் நன்றாகப் போனது. பிறகு அதுவும் உங்களுக்குப் போதவில்லை. மீண்டும் இன்னொன்றை சேர்த்தீர்கள். பிறகு ஒன்று, பிறகு மற்றொன்று! இப்படியே இந்தப் பிரபஞ்சம் முழுவதையுமே உங்களுடையதாக்கினாலும், நீங்கள் நிறைவடைய மாட்டீர்கள்.

### ஏன் இப்படி?

உங்களுக்குள் இருக்கும் உயிர்த் தன்மை இதுபோன்ற சின்னச்சின்ன விஷயங்களில் திருப்தியடைந்து விடுவதில்லை. அதனுடைய இயல்பும், இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவனுடைய இயல்பும் ஒன்றே. இரண்டுமே எல்லையற்றது. உங்களுக்குள் இருக்கும் படைப்பின் மூலமான உயிர்த் தன்மையை எந்த அடையாளங்களுக்குள்ளும் சுருக்கிவிட முடியாது.

எதனோடு நீங்கள் அதை அடையாளப்படுத்தினாலும், அது கஷ்டப்படுகிறது; இருப்புக் கொள்ளாமல் தவிக்கிறது. அந்த அடையாளங்களில் இருந்து விடுபட முயற்சிக்கிறது. எல்லையற்ற அதன் சுபாவத்தை ஒரு எல்லைக்குள் அடையாளப் படுத்த நீங்கள் முயன்றால், அது போராடும். அந்தப் போராட்டம்தான் நீங்கள் அனுபவிக்கும் துயரம்.

பலவிதமான அடையாளங்களில் உங்களை நீங்களே கட்டிப்போட்டு வைத்திருக்கிறீர்கள். இந்தக் கட்டுகளை அவிழ்த்தாலே போதும். ஆனந்தத்தைத் தேடி எங்கும் அலைய வேண்டாம். ஆனந்தம் உங்கள் காலடியில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கும்!

(ஆனந்தம் இன்னும் வரும்....)

# ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி:.

மூன்று வகைத் துக்கங்களிலிருந்து சாந்தி பெறுவதைக் குறிப்பிடுவதே ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி என்ற ஜெபம். துக்கங்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதில் முதலாவது அதியாத்மிக துக்கம். உடல் சம்பந்தப்பட்டதும், நோய்களினாலும் உண்டாகும் துக்கம். இந்த வகை இரண்டாவது அதிபௌதிக துக்கம். தீய பிராணிகள், திருடன், வஞ்சகன், பகைவன் என்பவரால் உண்டாவது இவ்வகைத் துக்கம். மூன்றாவது அதி தெய்வீக துக்கம். இயற்கைகளின் கோபங்கள் மற்றும் பிரதிகூல சூழ்நிலைகளால் உண்டாவதே மூன்றாவதும் கடைசியுமான துக்கம். இந்த மூன்று துக்கங்களிலிருந்தும் விடுதலையடையவே ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி:. என்று ஜெபியுங்கள்.

உ

(தொடர்ச்சி...

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

தம்பிரான் தோழர் என அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் தோழமையுடன் இறைவனிடம் செய்த வேண்டுதல்கள் சற்று வித்தியாசமானவை எனப் பார்த்தோம். இவரும் ஏனைய சமய குரவர்கள் போன்று மற்றவர்களின் நலனுக்காகவும் அவர்களது துயரைத் தீர்க்கவும் இறைவனிடம் வேண்டுதல்கள் செய்துள்ளார்.

சுந்தரர், சேரமான் பெருமாளைக் காணவிரும்பி அவரிடம் சென்றுகொண்டிருந்த போது திருப்புக்கொளியூர் என்னுமிடத்தைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. இவ் விடத்தை அவிநாசி என்றும் கூறுவர்.

அவ்வூர் வீதிவழியே செல்லும்போது ஒரு வீட்டில் மங்கல ஒலி கேட்டது. அதற்கு எதிர் வீட்டில் அழுகையொலி கேட்டது. சுந்தரர் அதற்கான காரணத்தை விசாரித்தார்.

"சென்ற ஆண்டில் இரு வீட்டுப் பிள்ளைகளும் மடுவிலே குளிக்கச் சென்றனர். ஒருவனை முதலை விழுங்கிவிட்டது. மற்றவன் தப்பி வந்துவிட்டான். அவனுக்கு அன்று உபநயனம் நடைபெறுவதால் அவனது வீட்டிலே மங்கல ஒலி கேட்கிறது. முதலையுண்ட பிள்ளை வீட்டினர் அவனை எண்ணி அழுகின்றனர்" என அவருக்கு விளக்கமளிக்கப்பட்டது. சுந்தரர் முதலையுண்ட பிள்ளையை மீட்கவேண்டுமெனத் தீர்மானித்து இறைவனை வேண்டி "எற்றான் மறக்கேன்" என ஆரம்பிக்கும் பதிகத்தைப் பாடினார். இப்பதிகத்தின் நான்காவது பாடலைப் பாடியதும் முதலை அப்பிள்ளையைக் கரையிலே கொணர்ந்து சேர்த்தது. அவன் ஓராண்டிற்குரிய வளர்ச்சியுடன் காணப்பட்டான்.

**உரைப்பார் உரைஉகந்து உள்கவல்**
**வார்தங்கள் உச்சியாய்**
**அரைக்கு ஆடு அரவா ஆதியும்**
**அந்தமும் ஆயினாய்**
**புரைக்காடு சோலைப் புக்கொளி**
**யூர்அவி நாசியே**
**கரைக்கால் முதலையைப் பிள்ளை**
**தரச்சொல்லு காலனையே**

- என்பதே

பதிகத்தின் நான்காவது தேவாரமாகும். இதிலும் அவரது நட்புறவுக் குரல் ஓங்கி ஒலிக்கிறது. "காலனையும் முதலையையும் பிள்ளையைத் தரச் சொல்லு" என மிகுந்த உரிமையுடன் கேட்கிறார்.

**அறத்தை விளங்க வைப்பது அன்பு.**

இதே பதிகத்தில் அவர் "உனை வேண்டிக்கொள்வேன் பிறவாமையே" என்றும் "நந்தி உனை வேண்டிக்கொள்வேன் நரகம் புகாமையே" என்றும் வேண்டுவதையுங் கூடக் காணலாம்.

எனவே நட்புறவு பாராட்டி, அதிகாரத் தொனியில் மனைவிக்கு நெல் கொண்டு வருமாறும், பொருளைக் கள்வரிடமிருந்து மீட்டுத் தருமாறும் கேட்பது மட்டுமே அவரது வேண்டுதல்கள் எனக் கூறமுடியாது.

கன ளையிழந்து வருத்தமுற்று திருமுல்லை வாயில் சென்றபோது "திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள்" என்று எண்ணியிருப்பதாகப் பதிகத்தின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டு பாடிய தேவாரந்தோறும் "அடியேன் படுதுயர் களையாய் பாசுபதா பரஞ்சுடரே" என வேண்டி நிற்கின்றார்.

**பொய்த்தன்மைத் தாய மாயப்**
**போர்வையை மெய்யென்று எண்ணும்**
**வித்தகத் தாய வாழ்வு**
**வேண்டிநான் விரும்பகில்லேன்**

என்ற தேவாரத்தில் இவ்வுலக வாழ்வு பொய்த்தன்மையுடையது. மாய வாழ்வு, இதை மெய்யென்று எண்ணி அதனை வேண்டி விரும்பமாட்டேன் என உறுதிபடக் கூறுகிறார்.

"கல்லாய் அகிலும்" எனத் தொடங்கும் பதிகத்தில் இந்த மாயவாழ்வை விட்டு இறைவனடி சேர வழிகூறுமாறு வேண்டி நிற்கின்றார். "நீதான் இந்த நிலையற்ற உலகில் என்னை மனிதனாகப் படைத்தாய். இந்த ஐம்பொறிகளையும் போரிட்டு அடக்கி உன் பதங்களை அடைய வழியைச் சொல்" என்னும் பொருள்பட

**வறிதேநிலை யாதஇம் மண்ணுலகில்**
**நரனாக வகுத்தனை நானிலையேன்**
**பொறிவாயில் இவ்ஐந் தினையும் அவியப்**
**பொருதுன் அடிபுகும் சூழல்சொல்லே**

என்றும்

**அற்றார் பிறவிக் கடல்நீந்தி யேறி**
**அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே**

என்றும் இன்னும் பலவாறும் இப்பதிகம் முழுவதும் இறைஞ்சுகிறார்.

இத்தகைய அவரது வேண்டுதல்களுக்கும், இறைவன் அருள்புரிந்தான். கைலை யங்கிரியில் வீற்றிருக்கும் சிவபிரான் சுந்தரரை வெள்ளையானையில் ஏற்றிக் கொண்டு வருமாறு தேவர்களைப் பணிக்க அவர்கள் வந்து சுந்தரமூர்த்தி நாயனாரை வெள்ளை

*கொள்கையைக் கைவிடாதவன் நேர்மையாளன்.*

யானையிலேற்றிக் கொண்டு சென்றனர். அவரது நண்பரான சேரமான் பெருமாளும் தம் குதிரையிலேறிக் கைலை சென்றார். அவ்வேளையில் பிள்ளையாருக்குப் பூசை செய்து கொண்டிருந்த ஔவையார் அவர்களுடன் செல்வதற்காக அவசரமாக அதனைச் செய்ய, ஆனைமுகன் ஆறுதலாகப் பூசை செய்யுமாறு கூறி அவர் பூசையை நிறைவேற்றியதும் தன் தும்பிக்கையால் தூக்கி ஔவையாரை அவர்களுக்கு முன்னதாக கைலாயம் சேர்த்தார்.

வெள்ளை யானையிலேறிச் செல்லும்போது சுந்தரமூர்த்தி நாயனார் "தானெனை முன்படைத்தான்" என்னும் பதிகத்தைப் பாடியவாறு சென்றார். அப்பதிகத்தில் அவர் தான் மனைவாழ்க்கையை விரும்பியதையும் அதை மாற்றி, இன்று தேவர்கள் புடைசூழ வெள்ளை யானையில் செல்லக்கூடியதாகச் சிவபெருமான் அருள்செய்ததைப் பாடிப் பரவசமடைவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

"மந்திரம் ஒன்றறியேன்
மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால்
துரிசே செயும் தொண்டன்"

எனத் தன்னைப்பற்றி ஒரு தேவாரத்திலே கூறும் சுந்தரர் மற்றதிலே

வாழ்வை உகந்த நெஞ்சே
மடவார்தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்த என்னை
அதுமாற்றி அமரர் எல்லாம்
சூழ அருள்புரிந்து
தொண்டனேன் பரம் அல்லதொரு
வேழம் அருள்புரிந்தான்
நொடித்தான்மலை உத்தமனே

எனப் பாடியுள்ளார். வாழ்வை விரும்பிய என்று கூறியது போதாது என எண்ணிப் போலும் 'ஆழ முகந்த என்னை' என்று பாடி மடவார்களின் கொடும்வினையில் மூழ்கி முகந்திருந்ததை நினைவு கூருகின்றார். இறைவன் அதை மாற்றி அவரை உய்வித்துவிட்டதைத் "தலைக்குத் தலைமாலை" என்னும் பதிகத்திலும் பார்க்கலாம். அதில் ஒரு தேவாரத்தில் "வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழித்தேன்" எனப் பாடியுள்ளதிலிருந்து அவர் துறவு நிலைக்கு உய்வு பெற்றது புலப்படுகிறது.


இவ்வாறு சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வேண்டுதலையேற்று இறைவன் அவரைத் தன்பால் ஈர்த்து இணைத்தும் அருள்புரிந்தார். இதனைப் புலப்படுத்தும் பல தேவாரங்களை அவர் பாடியுள்ளார்.

---

முயற்சி இல்லாத மனிதனை பிணம் என்று கருதவேண்டும்.



வறுமைக் கோட்டிற்குட்பட்ட பாடசாலை மாணவியொருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வில் வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை, ஐ.சண்முகலிங்கம், இரா.செல்வவடிவேல் இசைமணி வ.செல்லத்துரை ஆகியோர் காணப்படுகின்றனர்.



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் நடாத்தப்பட்டுவரும் சமூகப் பணிகளின் வரிசையில் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட உடல் ஊனமுற்றவருக்காகிய மூன்று சில்லு சைக்கிளை பேரவை உறுப்பினர்களாகிய சி.பத்மநாதன், ஆ.அருணாசலம் பயனாளிக்கு வழங்கிய நிகழ்வில் காணப்படுகின்றனர்.

பாரத நாட்டின் அரும்பெரும் பொக்கிஷங்களாகவும் நம் பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் ஆணிவேராகவும் விளங்குவது நமது புராண நூல்கள். ஆனால் புராணங்களும் இதிகாசங்களும் புனையப்பட்ட கதைகள் என்றே பலர் கருதுவது துரதிர்ஷ்டவசமானது. நம் நாட்டின் இரு பெரும் இதிகாசங்களாக விளங்குபவை இராமா யணம், மகாபாரதம். இவற்றில் இந்தியப் பண்பாட்டின் தூணாக விளங்குவது மகாபாரதம்!

கதை வடிவில் அமைந்த, முழுக்க முழுக்க நடந்த உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு மகாபாரதம். அது ஒரு வரலாற்றுக்காவியம். அந்நாளைய வரலாற்று நிகழ்வு களை ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தும் இன்றும் நமக்குக் காட்டும் காலக் கண்ணாடியாக அது விளங்குகிறது.

மகாபாரதம் நிகழ்ந்த காலம் பலராலும் ஆராயப்பட்டு வருகிறது. ஆயினும் என்னால் இயன்ற வரையில் பாரதத்திலும் அதன் உரை நூல்களிலும் காணப்படும் குறிப்புக்களைக் கொண்டு பாரதத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நடந்திருக்கக்கூடிய காலகட்டத்தைக் கணித்துள்ளேன். இது குறித்து நான் கண்டறிந்தவற்றை ஓரளவு சுருக்கமாக இங்கு வழங்கியுள்ளேன்.

மகாபாரதத்தின் காலத்தை அறிய, கலியுகத் தின் துவக்கத்தை அறிவது அவசியமாகிறது. ஏனெனில், 5,100 ஆண்டுகளுக்கு முந் தைய இந்த வரலாறு, கலியுகத் தின் துவக்கத்தில் முடிவடை கிறது. கலியுகத்தின் துவக்க காலம் நிர்ணயிக்கப்பட்டால், மற்ற



# மகாபாரத யுத்தம் நடந்த வருடம் கி.மு. 3139

## ஆச்சரியமூட்டும் ஒரு கணிப்பு

தேதிகளையும் வருடங்களையும் எளிதாகக் கணக்கிடலாம்.

நமது நாட்டு ஜோதிட முறைப்படி கலியுகம் துவங்கியது கி.மு. 3102 இல் என்று அறிய முடிகிறது. திருக்கோயில் வழிபாட்டு முறைப்படியும், கர்மாக்களில் செய்யப்படும் சங்கல்ப்பங்களின்படியும் இந்த வருடம் உறுதி செய்யப்படுகிறது. மேலும் இன்று வழக்கத்தில் இருக்கும் வட இந்திய - தென் இந்திய பஞ்சாங்கங்கள், நடக்கும் இந்த வருடத்தை கலியுகம் 5,105 என்று குறிப்பிடுகின்றன.

தவிர, இந்தியாவின் வானியல் மற்றும் கணிதமேதை ஆரியபட்டர், தான் இயற்றிய ஆரியபட்டீயம் எனும் நூலின் வாயிலாகவும் கலியுகம் துவங்கிய வருடம் கி.மு. 3,102 என்பதை உறுதிசெய்கிறார்.

கண்ணபிரான் இவ்வுலகைவிட்டு மறைந்ததும் கலியுகம் தோன்றியதாக மகாபாரதம் கூறுகிறது. கலியுகம் தோன்றியதும் பாண்டவர்கள் ஐவரும் தங்கள் வாழ்வை முடித்துக் கொள்கின்றனர். அதன்படி கண்ணனும் பாண்டவர்களும் மறைந்த வருடம் கி.மு. 3,102.

இனி பாண்டவர்களின் ஆயுளையும் அவர்கள் வாழ்ந்த காலத்தையும் பார்ப்போம். மகாபாரத நூல் கூறும் தகவல்களை ஆராய்ந்ததில்,

**தர்மன் பிறந்தது** : பிரஜோத்பத்தி வருடம், ஐப்பசி மாதம்
**பீமன்** : ஆங்கீரஸ வருடம், ஐப்பசி மாதம்
**அர்ஜுனன்** : ஸ்ரீமுக வருடம், பங்குனி
**நகுலன், சகாதேவன்** : பவ வருடம், பங்குனி
**ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரம்** : ஸ்ரீமுக வருடம், ஆவணி மாதம்

ஆக, தர்மனின் ஆயுள் 127 வருடம் + மூன்று மாதம் முடிந்து (இங்கு கணக்கில் வராத சில நாட்களும் சேர்த்து)= 128 வருடம்.

| **தர்மரின் ஆயுள்** | **வருடம்** | **மாதம்** |
|---|---|---|
| பாண்டவர்களின் தந்தை பாண்டு மறைந்தபோது தர்மரின் வயது | 16 | 6 |
| துரோணரிடம் கல்வி கற்றல் | 13 | |
| பாஞ்சால அரசனுடன் போர் | 1 | |
| இளவரசனாக முடிசூடுதல் | 1 | 4 |
| அஸ்தினாபுரத்தில் வாழ்ந்தது | 5 | 4 |
| அரக்கு மாளிகை தீக்குப் பின் தப்பிச் சென்று, கடோத்கஜன் பிறப்புவரை | 0 | 7 |
| சாலிஹோத்ர ஆஸ்ரமத்தில் | 0 | 6 |
| ஏகசக்ரபுரம் (பகாசுரன் கொல்லப்படுதல்) | 0 | 7 |
| பாஞ்சால மன்னன் அரண்மனையில் தங்கியது (திரௌபதி திருமணம் முடிந்து) | 1 | 0 |

| | வருடம் | மாதம் |
|---|---|---|
| மீண்டும் அஸ்தினாபுரத்தில் (இந்திரப்பிரஸ்தம் கட்டப்படுதல்) | 5 | 6 |
| இந்திரப்பிரஸ்த மன்னனாக ஆண்டது | 31 | |
| சூதில் தோற்று வனவாசம் | 12 | |
| அஞ்ஞாதவாசம் | 1 | |
| அபிமன்யு திருமணம், கண்ணனின் தூது, பாரதப் போர் | 1 | 3 |
| பாரதப் போருக்குப் பின் மீண்டும் ஆட்சி புரிந்தது | 36 | 2 |
| கண்ணனின் மறைவுக்குப் பிறகு பாண்டவர்கள் உயிர் துறத்தல் | 0 | 6 |

60 வருடங்கள் கழித்து மீண்டும் வரும் சுழற்சி முறையில் நாம் பாண்டவர்களின் ஆயுளைக் கணக்கிடலாம்.

தர்மன் பிறந்த வருடம் : பிரஜோத்பத்தி. இதற்கு அடுத்து 60 வருடம் கழித்து வந்த பிரஜோத்பத்தி வருடத்தில் அவன் மயனின் சபையில் அரியணை ஏறியதாகவும், இதன் பின்னர் வந்த சுபகிருது வருடம் பாரதப் போரில் வென்று மன்னனாக முடிசூடியதாக வும், பிறகு பல வருடங்கள் நாட்டை ஆண்டு பிரமாதி வருடம் கலியுகம் துவங்கியதும் பாண்டவர்கள் உலக வாழ்வை நீத்ததாகவும் அறிகிறோம் (மேலே சொன்ன விபரமான வாழ்க்கை நிகழ்ச்சிகள் பார்க்க)

ஆக, தருமர் பிறந்த பிரஜோத்பத்தி முதல் மயன்சபை புகுந்த பிரஜோத்பத்தி வரை 60 ஆண்டுகள். மயன்சபை புகுந்த பிரஜோத்பத்தி முதல் போருக்குப் பின் மன்னனாக அடுத்த பிரஜோத்பத்தியில் தொடர்தல் என்பது வரை 60 ஆண்டுகள். ஆக, இந்த பிரஜோத்பத்தி முதல் கலியுகம் துவங்கிய பிரமாதி வரை 8 ஆண்டுகள் மொத்தம் 128 ஆண்டுகள்.

எனவே, மேற்கூறிய இண்டு முறைகளின்படியும் கணக்கிடும்போது, தர்மரின் ஆயுட்காலம் 128 வருடங்கள் என்பது தெரிகிறது.

தர்மனைவிட பீமன் 1 ஆண்டு இளையவன். பீமனுக்கு அர்ஜுனன் 1 ஆண்டு நான்கு மாதம் இளையவன். அர்ஜுனனுக்கு நகுலனும் சகாதேவனும் ஓராண்டு இளையவர்கள்.

தர்மனைவிட கர்ணன் 16 ஆண்டு மூத்தவன். பகவான் கிருஷ்ணர் தர்மனைவிட 1 வருடம் 10 மாதம் இளையவர்.

| | |
|---|---|
| எனவே, தர்மரது காலம் | கி.மு. 3230 - 3102 |
| பீமன் | கி.மு. 3229 - 3102 |
| அர்ஜுனன் | கி.மு. 3227 - 3102 |
| நகுலன் - சகாதேவன் | கி.மு. 3226 - 3102 |
| பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் | கி.மு. 3228 - 3102 |

இந்த அடிப்படையில் மகாபாரதத்தின் சில முக்கிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்த வருடங்களைக் காண்போம். (சித்திரையிலிருந்து பங்குனி வரையிலான இந்திய வருடங்களின் அடிப்படையில் கணிக்கப்படுவதால் ஓரிரு வருடங்கள் முன்பின்னாக அமைய வாய்ப்புள்ளது).


| | |
|---|---|
| கி.மு. 3230 | தர்மர் பிறப்பு |
| கி.மு. 3229 | பீமன், துரியோதனன் பிறப்பு |
| கி.மு. 3228 | ஸ்ரீ கிருஷ்ணன் அவதரித்தல் |
| கி.மு. 3227 | அர்ஜுனன் பிறப்பு |
| கி.மு. 3226 | நகுலன் - சகாதேவன் பிறப்பு |
| கி.மு. 3213 | பாண்டு - மாத்ரி இறப்பு |
| கி.மு. 3199 | தர்மர் இளவரசனாக முடிசூடுதல் |
| கி.மு. 3193 | அரக்குமாளிகையில் தீவைத்தல் |
| கி.மு. 3190 | திரௌபதி சுயம்வரம் |
| கி.மு. 3184 | இந்திரப்பிரஸ்த மன்னனாக தர்மன் முடிசூடுதல் |
| கி.மு. 3171 | அர்ஜுனன் - சுபத்ரா திருமணம் |
| கி.மு. 3171 | அபிமன்யு பிறப்பு, அர்ஜுனன் காண்டவ வனத்தை எரித்தல் |
| கி.மு. 3170 | மயன் சபை உருவாதல் |
| கி.மு. 3154 | ஜராசந்தனை பீமன் கொல்லுதல் |
| கி.மு. 3153 | பாண்டவர்கள் ராஜசூய யாகம் செய்தல், பாண்டவர்கள் சூதாடி தோற்றல், திரௌபதி துகிலுரியப்படுதல், திரௌபதி சபதம். |
| கி.மு. 3153 - 3141 | பாண்டவர்களின் வனவாசம் |
| கி.மு. 3141 - 3140 | விராடதேசத்தில் அஞ்ஞாதவாசம் |
| கி.மு. 3139 | பாரத யுத்தம் நடைபெறுதல். பகவத் கீதையை ஸ்ரீ கிருஷ்ணன் மொழிதல் |
| கி.மு. 3138 | தர்மர் அரசனாக முடிசூடுதல் |
| கி.மு. 3102 | பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பூவுலக வாழ்வை விடுத்தல். பாண்டவர்கள் வடக்கு நோக்கி நடந்து உயிர் துறத்தல் |

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா கடந்த 2001ஆம் ஆண்டு கிருஷ்ண ஜயந்தியின் போது தனது உரையில், 'ஸ்ரீ கிருஷ்ணர் கி.மு. 3228ஆம் ஆண்டு ஜுலை 20ஆம் தேதி அன்று பிறந்தார்' என்று சொன்னார். மேற்கூறிய கருத்துக்களுக்கு இது வலு சேர்க்கிறது.

மகாபாரத யுத்தம் இன்றிலிருந்து 5,143 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்திருக்கிறது.

**நன்றி: சக்தி விகடன்**

உ



# பெறுதற்கரிய மானுடப் பிறவிக்கு ஆலயம் மிக அவசியம்

- பு. கதிரித்தம்பி அவர்கள் -

இறைவன் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உயிரினங்களைப் படைத்து, இவ் வினைகள் முடியும்வரை காத்து, திரும்பவும் தனது திருவடியில் அழித்து அருளுகின்றான். இந்த உயிரினங்களில் ஆறறிவுள்ள மனிதப் பிறவி அரிதென்றும், கூன், குருடு, பேடு செவிடு நீங்கிப் பிறந்த மனிதன் அதிலும் அரிதென்றும், ஞானமும் கல்வியும் பெற்ற மனிதன் அரிதிலும் அரிதென்றும் ஒளவைப்பிராட்டியார் கூறியதை நாம் அறிவோம். இந்தவகையில் ஒருமையுடன் திருமலரடி நினைக்கின்ற மனிதனுக்கு ஆலயம் அமுதமாகத் தித்திக்கின்றது.

எங்கும் வியாபித்திருக்கும் இறைவன், கருங்கல்லினாலோ ஐம்பொன்னினாலோ உருவமைக்கப்பட்டு, பிரதிட்டை செய்யப்பட்டு வேதமுறைப்படி, ஒழுங்காக பூசை நடைபெறுகின்ற ஆலயங்களில் இறைவன் எழுந்தருளி அருள்புரிவதை அறிகின்றோம். பசுவின் உடம்பெங்கும் பால் இருந்தாலும் அதன் முலையிலிருந்து பால் சுரக்கின்றது. அதுபோல இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும் கோவிலாகிய முலையிலிருந்து அருள் பொழிகின்றான்.

இறைவனுக்கு மேல் இன்னொரு இறைவன் இல்லையென்பதை பட்டணத்தடிகள் "வில்லால் அடிக்க, செருப்பால் உதைக்க, வெகுண்டொருவன் கல்லால் எறிய, பிரம்பால் அடிக்க...... அன்னை பிதா இல்லாததாலல்லவோ இறைவா கச்சி ஏகம்பனே" என்னும் பாடல் மூலம் விளக்கியுள்ளார். எமது இறைவனுக்கு அன்னை பிதாவிருந்தால் இப்படி நடக்குமா என்ற வினாவைத் தொடுத்து, இறைவனுக்கு மேல் இன்னொரு

இறைவன் இல்லையென்பதை மானுடனுக்கு அறிய வைத்தார்.

ஆலயம் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாமென்று ஔவைப்பிராட்டியும், கோவிலில்லாவூர் அடவிகாடே என்பதை "திருக்கோயிலில்லா திருவிலூரும்.... அவை எல்லாம் ஊரல்ல அடவிகாடே" என்னும் பாடல் மூலம் அருளியுள்ளார். கோவிலில், பிறந்த மனிதன் செய்யவேண்டிய கடமைகளை தனது மனத்திற்கு எடுத்துக் கூறுவது போல் நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீ வா நித்தலும் எம்பிரானுடைய கோவில்புக்கு புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு...... ஆரூரான்றென்றே அலறா நில்லே" என்னும் பதிகம் மூலம் இயம்பியுள்ளார்.

பிராரத்த வினைகளை அனுபவிக்க பூமியில் பிறந்த மனிதன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் வலையில் சிக்குண்டு ஓடி அலைகின்றான். பகுத்தறிவைவிட்டு ஐம்புலன் வழி சென்று அல்லல்படும் மனிதனுக்கு ஆலயம் நல்வழிகாட்டும். நாவலர் பெருமான் கூறிய முறைப்படி ஆலயம் சென்று வழிபட்டுவர மலங்கள் நீங்கி நற்பேறடைவான். ஆலயங்களில் திருமுறைப் பாடல்களைப் பாடி வீதிவலம் வரலாம். திருமுறைப்பாடல் தெரியாதவர்கள் "சிவாயநம" என்னும் பஞ்சாக் கிரத்தை ஓதிக்கொண்டு இறைவனை வழிபடலாம். கல்வியறிவு இல்லாத நாரத முனிவரும் பஞ்சாக்கிர மந்திரத்தை தினமும் ஓதி ஞானம் பெற்று, திரிலோக நாயகனான பதவியைப் பெற்றார் என்பது, வரலாறு கூறும் உண்மையாகும். இன்னும் நான்கு நாயன்மார்களும், அறுபத்திமூன்று சைவசமயக் குரவர்களும், சந்தான குரவர்களும், ஏனைய அடியவர்களும் கோவிலுக்குச் சென்று வழிபட்டு இறைவனடி சேர்ந்தார்கள்.

ஆகையால் மனிதன் தான் எடுத்த பிறவியின் பயனை அடைவதற்கும், நெறிப்பட்ட வாழ்க்கையை அமைப்பதற்கும் உதவுவது ஆலயம் என்பது வெள்ளிடை மலை. எனவே மானுடப்பிறவியெடுத்த ஒவ்வொரு மனிதனும், தூய மனதுடன் ஆலயம் சென்று, இறைவனை மனதில் இருத்தி பூசித்தால் இறையருள் கிட்டுமென்பது திண்ணம்.

கலியுகத்தில் கலியுகவரதனாக விளங்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம் சென்று வழிபட்டு ஈடேறுவோமாக.

---

***ஒருவன் கீழே விழுந்தால் உலகமே அவன்மீது ஓடத் தொடங்கும்.***

உ

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக் கோவை

*95. பொன் போலப் போற்ற வேண்டியவை*

தன் உடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கு என்று
உன்னித்து வைத்த பொருளோடு இவை நான்கும்
பொன்னினைப் போல் போற்றிக் காத்துய்க்க
உய்க்காக்கால்
மன்னிய ஏதம் தரும்.

தன்னுடைய உடல் நலம், தன்னுடைய மனைவியின் சுகம், காப்பாக வைக்கப்பட்ட அடைக்கலப் பொருள், தனக்குப் பின்நாளில் உதவும் என்று கருதிச் சேர்த்து வைத்த செல்வம்; - ஆகிய நான்கும் பொன்னைப் போல் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியவை ஆகும். அப்படிப் பாதுகாத்து வைத்துக் கொள்ளாவிட்டால், அந்த தவறு, மிகப் பெரும் துன்பத்தைக் கொடுக்கும்.

உன்னி - எண்ணி; காத்துய்க்க - காப்பாற்றிக் கொள்க; மன்னிய - மிகுந்த; ஏதம் - துன்பம்

*96. உழைப்பே உயர்வு*

நந்தெறும்பு தூக்கணம் புள் காக்கை என்று
இவைபோல்
தம் கருமம் நல்ல கடைப்பிடித்துத் தம் கருமம்
அப்பெற்றியாக முயல்பவர்க்கு ஆசாரம்
எப்பெற்றி யாயினும் படும்.

ஆக்கமுடைய எறும்பு, அயராது உழைத்து உணவு தேடிக் கொள்வதைப் போலவும்; தூக்கணங்குருவி, விடாமுயற்சியோடு, பாதுகாப்பாகக் கூடு கட்டி வாழ்வது போலவும்; காக்கை தனது இனத்தைக் கூவி அழைத்து உண்பது போலவும், தன்னுடைய செயல்களில் ஊக்கம், விடாமுயற்சி, ஒப்புரவைக் கடைப்பிடித்து எறும்பு, தூக்கணங்குருவி, காக்கை போலப் பணியாற்ற முயல்பவர்களுக்கு, வாழ்வின் ஒழுக்கம் எப்படியும் உயரும் - வளரும்

நந்தம் - ஆக்கம்; படும் - வளரும்.

---

**ஓர் அவமானத்தைப் பொறுத்துக்கொள்வது அதற்குப் பழிவாங்குவதைவிட மேலானது.**

***97. வாய் பொத்தித் தொழுது தொடர்க பேச்சை***

தொழுதானும் வாய் புதைத்தானும் அ∴து அன்றிப்
பெரியார்முன் யாதும் உரையார் பழியவர்
கண்ணுள்ளே நோக்கி உரை.

பெரியாரிடம் ஒன்றைப் பற்றிப் பேசும்போது வணங்கி, வாய்பொத்திக் கொள்ளாமல் எதையும் அறிவுடையோர் சொல்லமாட்டார். அப்படிச் செய்யாதது, அதாவது வணங்கி வாய் பொத்தாமல் பேசுவது குற்றமாகும். எனவே பெரியோர் முன் வணங்கி வாய்பொத்தியே பேசுக.

வாய்புதைத்து - கையால் வாயை மூடிக்கொண்டு.

***98. போகாத இடம் தேடிப் போகாதீர்***

சூதர் கழகம் அரவம் அறாக்களம்
பேதைகள் அல்லார் புகாஅர் புகுபவேல்
ஏதம் பலவும் தரும்

சூதாடும் இடத்திலும், ஆரவார ஒலி நீங்காது இருக்கிற - இரைச்சல் - மிகுந்த இடத்திலும், அறிவற்ற முட்டாள்களே அல்லாமல்; மற்றவர்கள் நுழையமாட்டார்கள். நுழைந்தால் பலவாறு துன்பப்பட நேரும்.

சூதர் கழகம் - சூதாடும் இடம்; அரவம் - ஓசை; அறா - நீங்காத; களம் - இடம்

***99. பார்க்காதே, போகாதே***

உரற்களத்தும் அட்டிலும் பெண்டிர்கள் மேலும்
நடுக்கற்ற காட்சியார் நோக்கார் எடுத்திசையார்
இல்லம் புகாஅர் விடல்

ஆரவாரம் மிகுந்த இடத்தையும், சோறு சமைக்கும் இடத்தையும், பெண்கள் இருக்கும் இடங்களையும் தெளிந்த அறிவுடைய பெரியோர் பார்க்க மாட்டார்கள். அவைபற்றிப் பேசவும் மாட்டார்கள். அவ்விடங்களுக்குள் நுழையவும் மாட்டார்கள். எனவே அதையே மற்றவரும் செய்க.

உரற்களம் - ஆரவாரம் உள்ள இடம்; அட்டில் - சமையல் கட்டு.

***100. ஒழுக்க நெறி இவர்களுக்கு விலக்கு***


அறியாத தேயத்தான் ஆதுலன் மூத்தான்
இளையான் உயிர் இழந்தான் அஞ்சினான் உண்பான்
அரசர் தொழில் தலைவைத்தான் மணாளன் என்று
ஒன்பதின்மர் கண்டீர் உரைக்குங்கால் மெய்யான ஆசாரம் வீடு பெற்றார்.

அறிமுகமில்லாத நாட்டைச் சேர்ந்தவன், பிச்சைக்காரன், வயதில் மூத்தவன், சிறியவன், உயிரற்றவன், பயந்தவன், உணவு உண்பவன், அரசன் ஆணையை மேற்கொண்டு இருப்பவன், மணம் முடிக்கப் போகிறவன்; ஆகிய ஒன்பது பேரும்; பொது ஒழுக்க நெறியினின்றும் விலக்குப் பெறத்தக்கவர் ஆவர்.

தேயம் - நாடு; ஆதுலன் - வறியவன்.

**ஒருவரின் பேச்சிலிருந்து உள்ளப் பண்பை அறியலாம்.**

உ




## 02. ஓடிப்போன வேடர்கள்

அது ஒருசிறிய கிராமம், அந்த கிராமத்தில் சில வீடுகளே இருந்தன. அந்த கிராமத்திற்கு மத்தியில் ஒரு பெரிய கோயில் இருந்தது. அந்தக் கோயிற் கோபுரத்தில் ஏராளமாய் புறாக்கள் வசித்து வந்தன.

அந்தக் கோயிலுக்கு வெளியே ஒரு பெரிய அரசமரம் இருந்தது. அந்த அரச மரத்தில் சில காகங்கள் கூடுகட்டி வசித்து வந்தன.

அன்று காலை கோயிலை ஒட்டியிருந்த ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண்மணி காகத்தைக் கூவி அழைத்து பழைய சாதத்தை தெருவில் கொட்டினாள். இதைக் கவனித்த ஒரு காகம் உடனே குரல் கொடுத்தது. காகத்தின் குரலைக் கேட்டதும் நான்கு திசைகளிலிருந்தும் காகங்கள் அங்கே வந்தன.




எல்லாக் காகங்களும் ஒன்றாய் சேர்ந்து கிடைத்த உணவைப் பங்கு போட்டுச் சாப்பிட்டன.

இதை அந்தப் பகுதியில் இருந்த ஒரு புறா கவனித்துக் கொண்டிருந்தது.

உணவைச் சாப்பிட்டு மரத்தில் அமர்ந்திருந்த காகத்திடம் அந்தப் புறா சென்றது.

“ஆமா, எல்லாரும் எப்பவும் ஏன் ஒண்ணாவே சாப்பிட நீங்க, யாருக்கு கிடைக்குதோ அவங்க மட்டும் சாப்பிட்டுட்டு மீதியிருந்தா பத்திரப்படுத்தி வைச்சிருந்து அப்புறமா சாப்பிடலாமில்லியா?”

“கிடைக்கிற உணவைப் பங்கு போட்டு சாப்பிடுறதுதான் எப்பவும் நல்லது. அப்பதான் நமக்குள்ளே அன்பும் ஒற்றுமை உணர்ச்சியும் வளரும்”.

ஆனால், காகம் சொன்ன இந்தக் கருத்தை அந்தப் புறா ஏற்றுக்கொள்ளவில்லை.

“சரி, கொஞ்சமா கிடைச்சா என்ன பண்ணுவீங்க.”

“எவ்வளவு கொஞ்சமா கிடைச்சாலும் சரி, கிடைச்சதை நாங்க எல்லாரும் சமமா பங்கு போட்டு சாப்பிடுவோம். நிறையக் கிடைச்சாலும் அதையும் சமமா பங்கு போட்டு

மனஅமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.

சாப்பிடுவோம்".

சில நாட்கள் சென்றன.

அந்தக் கிராமத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊரிலிருந்து சில வேடர்கள் வந்தார்கள். 'உண்டிவில்'லால் அவர்கள் கோயில் மதிற் சுவரின் பொந்துக்குள் இருந்த புறாக் களை நோக்கி கற்களால் அடிக்க ஆரம்பித்தார்கள். அனுபவம் வாய்ந்த வேடர்களின் குறி தப்பவில்லை. உண்டிவில்லிலிருந்து புறப்பட்ட கற்கள் புறாக்களைத் தாக்கின. அதில் இரண்டு புறாக்கள் அடிபட்டுக் கீழே விழுந்தன. அவர்கள் உண்டிவில் மூலம் எறிந்த கல் ஒரு காகத்தின் மீது பட்டு அதுவும் கீழே விழுந்தது.

இதைக் கவனித்த மற்றொரு காகம் உடனே குரல் கொடுத்தது. அதன் குர லைக் கேட்டு அந்த பகுதியிலிருந்து அனைத்து காகங்களும் அங்கே உடனே வந்தன.



அடிபட்டு கீழே கிடந்த காகத் தைப் பார்த்து அவை கோபமடைந்தன. அவை ஆக்ரோஷமாக அந்த வேடர் களை சூழ்ந்து கொண்டு அவர்களைக் கொத்த ஆரம்பித்தன. காகங்களின் தாக்குதலை சமாளிக்க முடியாத அந்த வேடர்கள் வலியால் கத்திக் கொண்டே அந்த இடத்தில் இருந்து ஓடிப் போனார் கள்.

காகங்களின் இந்தச் செயலால் புறாக்கள் தப்பித்தன. அடிபட்டுக்கீழே விழுந்த புறாக்களை மற்றப் புறாக்கள் காப்பாற்றின.

இப்போது கூட்டத்திலிருந்த அந்தப் புறா காகத்திடம் அன்பான குர லில் பேசியது.


"ஒற்றுமை எவ்வளவு சக்தி வாய்ந்ததுன்னு இன்னைக்கு நான் உங்க மூலமா புரிஞ்சிகிட்டேன். அன் னைக்கு நீ சொன்னது சரிதான். இனி நான் கூட மற்றப் புறாக்கள்கிட்டே ஒற்றுமையைப் பத்தி எடுத்துச் சொல்கிறேன்".

இதைக் கேட்ட காகம் மகிழ்ச்சி அடைந்தது.

அன்பாயிரு ஆனால் அடிமையாயிராதே.



2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் பரிசில் வழங்கும் நிகழ்வு.



வாசகர் போட்டிக்குரிய பரிசில் வழங்கும் நிகழ்வில் ஆச்சிரமத்தின் சுவாமி அவர்கள் உரையாற்றும் நிகழ்வில் திருமதி. நாச்சியார் செல்வநாயகம், திருமதி. புனிதவதி சண்முகலிங்கமும் மேடையில் அமர்ந்திருக்கும் காட்சி.

உ

# 2010 ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| திருமதி லோகநாயகி கதிர்காமநாதன் | | | 1,500.00 |
| S. தவநேசன் | இணுவில் (சுவிஸ்) | | 10,000.00 |
| திரு. ரகுநாதன் | திருநெல்வேலி | | 10,000.00 |
| திரு. தேவகரன் ஹற்றன் | ஆவரங்கால் | 1 மூடை அரிசி | 10,000.00 |
| திரு. சதீஸ் ஆனந் | வத்தளை | | 10,000.00 |
| S. நிமலன் | C/O சதாசிவம் அந்திரான் கரவெட்டி | | 5,000.00 |
| குமாரசாமி புலேந்திரன் கனடா | | | 2,000.00 |
| சற்குணராசா கலைச்செல்வி ஆனைக்கோட்டை | | | 3,000.00 |
| த. ஜெயராஜ் | வல்வெட்டித்துறை, வவுனியா | | 30,000.00 |
| ஆ. இராசரெத்தினம் | கொழும்பு | | 500.00 |
| நடராசா சிவரூபன் | குப்பிளான் | | 6,000.00 |
| திருமதி பொ. இரத்தினசோதி புலோலி | | | 3,000.00 |
| அமரர் ஆனந்த கிருஸ்ணன் நினைவு சண்டிலிப்பாய் | | | 500.00 |
| திரு. ஜெயக்குமார் குடும்பம்(லண்டன்) சுண்டுக்குளி | | | 2,000.00 |
| மயில்வாகனம் அன்னபூரணம் மகேந்திரம் மூலம் ஊரெழு | | | 10,000.00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் நினைவு பத்தமேனி | | | 1,000.00 |
| கந்தஞானி கணேசன் | | | 5,000.00 |
| S. ஈஸ்வரன் | டச்சுவீதி, சித்தங்கேணி | | 5,000.00 |
| சி. தர்மலிங்கம் மூலம் யமுனா வர்ணன் (பிரான்ஸ்) சித்தங்கேணி | | | 10,000.00 |
| க. இரத்தினசிங்கம் | கே.கே.எஸ். வீதி. | | 3,000.00 |
| செ. சிவசுப்பிரமணியம் | மல்லாகம் | | 1,000.00 |
| திரு. திருமதி ஸ்ரீஸ்கந்தராசா மல்லாகம் | | | 5,000.00 |
| வல்லிபுரம் லக்ஷிமி நினைவாக சிவாஜினி உடுப்பிட்டி | | | 1,500.00 |
| K.S. பொன்னம்பலம் | கொழும்பு | 1 மூடை அரிசி, மரக்கறிவகை | |
| இரத்தினம் குடும்பம் | சாவகச்சேரி | | 5,000.00 |
| T. வசந்தகுமார் | 42ஆவது லேன், வெள்ளவத்தை (கனடா) | | 5,000.00 |
| நடராசா மனோகர் | தும்பளை மேற்கு | | 5,000.00 |
| திரு. கார்த்திகேசு ஆசிரியர் முறிகண்டி | | | 10,000.00 |
| V.M. நேரு குடும்பம் | கொழும்பு (ஆவரங்கால்) | | 5,000.00 |
| திரு. அருணாசலம் | கொழும்பு | | 2,000.00 |

**புத்திசாலி எதையும் உபயோகமில்லாததாக நினைப்பதில்லை.**

| | | | |
|---|---|---|---|
| செ. சூரியகுமார் | இன்பர்சிட்டி | | 4,500.00 |
| N. கருணாநிதி குடும்பம் | இலண்டன் | | 5,000.00 |
| த. வேலுச்சாமி | இன்பர்சிட்டி | | 1,000.00 |
| பொ. கந்தையா குடும்பம் | அரியாலை | 1 மூடை அரிசி, மரக்கறி | 1,000.00 |
| விஸ்வலிங்கம் செந்தில்நாத் | திக்கம் | 2 மூடை அரிசி, | 2,000.00 |
| இராசேந்திரம் லவநேசன் | காரைநகர் | 1 மூடை அரிசி | |
| நல்லையா குலராசா சுதாகரன் | கொடிகாமம் வடக்கு | | 5,000.00 |
| Dr. சி. இராசலிங்கம் | இளை. வைத்திய பொறுப்பதிகாரி அச்சுவேலி | | 1,000.00 |
| ஆ. சுரேஸ் | உடுப்பிட்டி | | 2,000.00 |
| அருளானந்தம் கணேஸ்வரி | கல்வயல் சாவகச்சேரி | | 11,750.00 |
| திருமதி சதாசிவம் | கோண்டாவில் | | 500.00 |
| அ. தனுஷாந் | அருத்துசா லேன், கொழும்பு | | 500.00 |
| சேயோன் சரவணபவன் | உரும்பராய் வடக்கு | | 2,000.00 |
| பா. அனுஷா | 33ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை | | 1,000.00 |
| பாக்கியம் சரவணமுத்து | லண்டன் | | 2,000.00 |
| கணபதி ஐஸ்வின் | நோர்வே | 1 மூடை அரிசி, மரக்கறி வகை | |
| சங்கர் குமார் | கனடா | | 5,000.00 |
| நடராசா வரதராசா மூளாய் | தெற்கு, மூளாய் | | 15,000.00 |
| கை. துர்க்கா லக்ஷிமி | உவர்மலை, திருமலை | | 10,000.00 |
| வே. கைலாயபிள்ளை குடும்பம் | உவர்மலை | | 10,000.00 |
| க. தியாகராஜா P.M. | காரைநகர், யாழ். | | 2,000.00 |
| திருமதி கணேசபிள்ளை | கொய்யாத்தோட்டம், இருபாலை | | 2,500.00 |
| S. ரவீந்திரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | | 10,000.00 |
| கனகசுந்தரம் செல்லப்பா | | | 16,000.00 |
| சி. புரந்திரதாசன் | இணுவில் | | 1,000.00 |
| Dr. R. இராமச்சந்திரன் | மாவட்ட வைத்தியசாலை, வட்டவல | | 5,000.00 |
| க. பரணிதரன் | ஆனந்தா ஸ்ரோர்ஸ், உயிலங்குளம் | | 2,000.00 |
| ஆ. சிவானந்தன் | சுதுமலை வடக்கு, மானிப்பாய் | | 4,000.00 |
| ந. கமல்ராஜ் | லீலா வெதுப்பகம், சீரணி | | 1,000.00 |
| திரு. தம்பி ஐயா | துன்னாலை மத்தி | | 15,000.00 |
| சண்முகநாதன் சஞ்சீவன் | கனடா | | 5,000.00 |
| ப. வல்லிபுரநாதன் | புலவர் இல்லம், உடுப்பிட்டி | | 5,000.00 |
| திரு. ராசன் | கனடா | | 15,000.00 |
| அ. வீரேந்திரன் | பிரான்ஸ் | | 5,000.00 |

அற்பனுக்கு பணம் வந்தால் வைக்க இடம் அறியான்.

# "நமனும் நரகமும்"



- வாரியார் சுவாமிகள் -

**மோகமுடைய வெகுமாதர் கூட்டமும்:**

ஒருவன் ஒரு மனைவியோடு வாழ வேண்டும். மனிதநெறியும் அதுதான்; ஒருத்திக்கு ஒருவன் என்பதுபோல், ஒருவனுக்கும் ஒருத்திதான்.இந்தச் சிறந்த நெறியை அறவேயிகழ்ந்து, பல பெண்டிர்களைப் புணர்ந்து ஆவியும் ஆக்கையும் ஆக்கமும் அவமாக்குவர் பலர். அவ்வாறு பலப்பல மாதரொடு வாழ்ந்தவர் மாண்டு ஒழியின் அவர்பால் மோகமுடைய மாதர் பலர் கூடிக் கண்ணீர் இறைத்து இரங்கியழுவர். இது எத்துணைப் பரிதாபம்! அந்தோ!

**ஏது கருமமிவர் சாவெனா:**

இறந்தவர் வீட்டிற்கு வருபவர், "எவ்வாறு மாண்டு போயினார்? என்னநோய்? கடைசிவரை நினைவு இருந்ததா? என்று வினாவுவார்.

**சிலர் கூழு நடவும் இடுகாடெனா:**

சிலர் ஒன்று சேர்ந்து, "ஏன் இன்னுந் தாமதம்? போனவன் போனாலும் இருக்கின்றவர்களுடைய நலத்தைக் கவனிக்க வேண்டாவோ? சீக்கிரம் எடும்; மயானத்திற்குச் செல்லும்" என்று துரிதப்படுத்துவர்.

**ஏழு நரகினிடை வீழ்மெனா:**

நரகம் என்பது பாவிகள் பூத சரீரத்துடன் சென்று தத்தந் தீவினைப் பயன் களைத் துய்க்கும் இடமாகும். நரகங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக ஒவ்வொன்று தொண்ணூறு இலட்சம் யோசனை அளவுடைய முப்பத்து மூன்று தளங்களும், தனித்தனியே ஒரு இலட்சம் யோசனையளவுடைய முப்பத்திரண்டு இடைவெளியும் உடையனவாயுள்ளன. இந்த நரகங்கள் நான்கு வகைப்படும். அவை நரகம் - மாநரகம் - இராசநரகம் -இராசராசேச்சுர நரகம் என்பனவாம்.

இனி, நரக உலகம் ஒன்று உளதோ? என்றும், அவ்வுலகில் பாவிகளைத் தண்டிக்கும் தொழில் பூண்ட தலைவன் நமன் என்பான் ஒருவனும் உளனோ? என்று ஐயுறுவாரும், இல்லவேயில்லை. என்றுபுறக்கணிப்பாரும்உண்டு.

*உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண*
*அண்ணாத்தல் செய்யா தளறு*

அளறு - நரகம்

**வளமுடன் வாழும் நண்பர்கள் உன்னை அறிவர்.**

*அடக்க மமருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும்.*

இருள் - நரகம்

*கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட் டவர்க்கு*

கூற்றம் - இயமன் - திருவள்ளுவர்

"கூற்றுவன் நரகிடை வீழ்த்திக் குண்டர்களைக் கொண்டு தண்டனை புரிவான் இது சத்தியம்" என்று கந்தரந்தாதியில் எம் அருணகிரிப் பெருந்தகை கூறுகின்றார்.

**"எரிவாய் நரகக் குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவன் ஊர்க்குச் செல்லும் வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே"**

- அலங்காரம்

**"நமன் வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்"**

- அருணகிரியார்

**கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லிடிக் காரர் வலிக்கயிற் றால்கட்டிச்**
**செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை**
**நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே.** - திருமூலர்

**"காலன் வருமுன்னே"** - பட்டினத்தார்

**"காலனையும் வென்றோம்"** - காரைக்கால் அம்மையார்

**"வஞ்சநமன் வாத னைக்கும்"** - தாயுமானவர்

**"செல்பவந் நரகந் தன்னுள் தீவினைத் தேர்க ளூர்ந்தே"**

- திருத்தக்கதேவர்

**"எரிவாய் நரகத்து வீழ்வர்"** - நாலடியார்

**"கணிச்சுக் கூர்ம்படை கடுந்திற லொருவன் பிணிக்குங் காலை இரங்குவீர்"**

- புறநானூறு

**"புலை நரகத் துய்ப்பிக்கும்"** - வளையாபதி

**"அக்கா லரைக்கண் டஞ்சாமுன்"** - காளமேகம்

இன்னோரன்ன ஆன்றோர் பலரும், பழைய இலக்கியங்களும் கூறும் நரகையும் நமனையும் நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்பது அறியாமையின் சிகரமன்றோ? ஆன்றோர் வழிவந்த நாம் அவ் ஆன்றோர் திருவாக்குகளைப் பொன்போல் போற்ற வேண்டாவோ? ஆன்றோரது அரிய கருத்தை உடன்படாது தம்மைத்தாமே அறிவு டையர் என்று கருதுவது எத்துணைப் பேதமை? பரம்பரையாக வருவது அன்றோ அறிவுடைமை, "தாய் தந்தையர் எற்றுக்கு? யாமே பிறப்போம். எமது பிறப்புக்கு அவர் வேண்டா" எனவுரைக்குந் தான்தோன்றிகளாகக் கூடாது.

**பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்.**

உ

திருவாசக ஆராய்ச்சியுரை — தொடர்ச்சி



# சிவபுராணம்

- சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -

**ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்**
**ஆக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்**
**போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்**
**நாற்றத்தி னேரியாய்ச் சேயாய் நணியானே**
**மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே**
**கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்**
**சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று**
**பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்**

***பதவுரை:*** ஆக்கம் அளவு இறுதி இல்லாய் - தோற்றமும் நிலை பேற்றின் அளவும் முடிவும் இல்லாதவனே, அனைத்து உலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய் - எல்லா உலகங்களையும் நீயே படைப்பாய் பாதுகாப்பாய், அவை களை ஒடுக்குவாய் முடிவில் உயிர்கட்கு அருளையும் தருகுவாய்; என்னை போக்கு வாய் - என்னை அப்பல்வகைப் பிறவிகளிற் செலுத்திப் போகங்களில் முழுகச் செய்வாய்; நின் தொழும்பில் புகுவிப்பாய் - பின்னர் அப்போகங்களில் உவர்ப்புண்டாய விடத்து என்னை நினது திருவடித் தொண்டில் புகும்படி அருள்செய்வாய்; நாற்றத்தின் நேரியாய் - பூவில் மணம்போல அன்பருள்ளத்தில் இசைந்திருப்பவனே; சேயாய் - அன்பரல்லாதவர் உணராமையின் தூரத்திலிருப்பவனே; நணியானே - அன்பராயினார் உணருதலின் அணுகி இருப்பவனே; மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே - சொல் லும் நினைவும் அளவிட முடியாது நீங்க அப்பாற்பட்டுள்ள மறைபொருளாயுள்ளவனே; கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போல - பசுவிற் கறந்த புதிய பால் சர்க்கரை யும் தேனும் கலந்துழிமிக்க இனிமை தந்தாற்போல, அடியார் சிந்தனையுள் சிறந்து

***தனக்குச் சரிப்படாத எதையும் அசட்டுத்தனம் என்று சொல்வதுதான் உலகவழக்கு.***

தேன் ஊறி நின்று - அடியவர்களது உள்ளத்திலே மிகுந்து தேன்போல இனிமை ஊற்றெடுக்குமாறு நிலைபெற்றுத் தங்கி, பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான் - அவ்வடியவரது எடுத்த பிறவியை நீக்கும் எங்கள் பெருமானே.

(ஆ-ரை) ஆக்கம் அளவு இறுதி இல்லாதவனே அனைத்துலகங்களையும் ஆக்கு தல், காத்தல் அழித்தல் செய்ய வல்லவனாவான் என்பது போதர 'ஆக்கமள விறுதி யில்லாய்' என்றார்.

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் போக்குவாய் நின்தொழும்பில் புகுவிப்பாய் அருள்தருவாய் என இயைத்து எல்லாத் தனுகரணபுவன போகங்களையும் நீயே படைத்து அவற்றில் என்னைச் சேர்ப்பாய்; பாதுகாப்பாய்; அழிப்பாய்; போகங்களில் முழுகச் செய்து மறைப்பாய்; போகங்களில் உவர்ப்புண்டாய விடத்துநினது திருத் தொண்டில் புகும்படி செய்து பக்குவமுண்டாயபோது மலக்கட்டினைக் கெடுத்து நித்திய இன்ப நிலையை அருளுவாய் எனக் கொள்க.

அனைத்துலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய் எனப் படைத் தல், காத்தல், அழித்தல், அருளல் என்னும் நான்கு தொழில்கள் கூறப்படினும் இவற் றிடையே நிகழும் மறைத்தற்றொழில் காத்தற்றொழிற் கண் அடங்கும். ஆகவே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்பவன் இறைவன் என்க. ஐந்தொழிலும் இறைவன் அருட்செயல்களேயாதல்.

"அழிப்பிளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம்வீடு பார்த்திடின் அருளே யெல்லாம்"

சூ. 1:37

என்னும் சிவஞானசித்தியார் திருவிருத்தத்தானுமறிக.

ஆக்குதல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பதே ஐந்தொழில் முறைமையாயினும் போக்குவாய் என உலக போகங்களில் அமிழ்ந்துமாறு பிறவிக் கண் போகச் செய்தலைப் பின்னர் கூறியது அப்பிறவிகளிற் புக்குக் போகங்களில் உவர்ப்புண்டாயவிடத்து இறைவன் தொழும்பில் புகுவிக்கும் இயைபுபற்றியாகும்.

என்னை என்பது மத்திப தீபமாக நின்று என்னைப் போக்குவாய் எனவும், என்னைப் புகுவிப்பாய் எனவும் இயையும், போக்குதல் - பக்குவமுண்டாகும் பொருட்டுப் பலவகைப் பிறவிகளிலும் போகச் செய்தல்.

---

*அன்பின் முதற்பாடம் செல்வத்தை அனைவருக்கும் வழங்குவது.*

தொழும்பில் புகுவித்தல் - அப்பிறவிகளினாற் பக்குவமுண்டாயவிடத்து என்னைத் தனது திருவடித்தொண்டில் புகுமாறு அணுகச் செய்தல். தொழும்பு - தொண்டு.

நாற்றம் தாண்பற்றிய பொருள்களில் எங்கும் நிறைந்து அதற்கப்பாலும் நுட்பமாய் இருப்பதுபோல, இறைவன் உலகு உயிர் எங்கும் நிறைந்து அதற்கப்பாலுமாய் நுட்ப மாயுள்ளான் என்பது நாற்றத்தின் நேரியாய், என்பதனாற் போந்தபொருள். அங்ஙன மாயின் நாற்றம் புலப்படுவதுபோல இறைவன் புலப்பட வேண்டுமேயெனின் அவன் அன்பாகிய பொறியில்லாதவர்க்குச் சேயனாய்ப் புலப்படாமலும், அதனையுடையார்க்கு அணியனாய்ப் புலப்படுதலுமுடையனாகலின் 'சேயாய் நணியானே' என்றார்.

**"மெய்யடிவர்கட் கண்மையனே யென்றுஞ் சேயாய்**
**பிறர்க்கு" நீத் 22.**

**"ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்**
**சேயானை" அம் 7.**

**"அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே**
**ஒப்பாக வொப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்**
**அப்பாலைக் கப்பாலை" அம் 11.**

என அடிகள் அருளியமை காண்க.

வாக்கும் மனமும் அளவிட முடியாது நீங்கிப் போக அப்பாற்பட்டு நிற்றலின் 'மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே' என்றார். 'வாக்கு மனாதீதன்' என்பதும் இப் பொருள் பற்றியாகும். "சொற்பதங் கடந்த தொல்லோன்" (அண்ட. 111) "சொற்பதங் கடந்த அப்பன்" (அச்சப் 6) எனவருவனவும் ஈண்டறியற்பாலன. இறைநூல்கள் இறை வன் இயல்பினைக் **'கு.'.யாதி கு.'.யம்'** எனக் கூறுதலின் 'மறையோனே' என்றார்.

கறந்தபால் - பசுவிற் கறந்த புதியபால், கன்னல் - சருக்கரை. "கட்டியும் விசய மும் குளமும் கன்னலும், ஒட்டிய பாகும் அக்காரமும் சருக்கரை" என்பது திவாகரம். நெய் - தேனெய். "தேனெய்யொடு கிழங்கு மாறியோர்" (பொருந 214) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. தானே இனிமைதருவதாய பால், கன்னலும் தேனும் கலந்தவழி மிக்க இனிமை தருதலிற் 'கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல' என்றார். சிறந்து - மிகுந்து. சிறந்து நின்று என இயையும். தேன் - இனிமை. நின்று எனக் கூறினும் இறைவன் புலப்படுதலும் புலப்படாதிருத்தலுமாகிய நிலைமையினின்றும் நீங்கி, என்றும் புலப்பட்டு நின்று என்பது பொருளாகக் காண்க. பிறந்த பிறப்பு அறுத்தல் - அவ்வடியவர் எடுத்த பிறப்பை நீக்குதல்.

---


*அறிவின் முதற்பாடம் செல்வத்தை வெறுப்பது.*

உ

# புதுமையிலும் புதுமையிதே

கவிமணி அன்னைதாஸன் - ஊரெழு.

தத்துவங் கலாச்சாரம் தகமைசேர் நல்லொழுக்கம்
பத்தி மிகு பாடல்கள் பல வர்ணப் படப் பதிவு
தித்திக்கும் வண்ணம் சிறியோர் முதல் பெரியோர் வரை
அத்தனை பேருக்கும் அறிவளிக்கும் “ஞானச்சுடர்”




மலருக்கு ஆக்கங்கள் மன்றாடிக் கேட்காது
சிலருக்குப் பின்னாலே சிறைப்பட்டு நிற்காது
பலருக்கு வாய்ப்பளிக்கும் பாங்கான மலராக
வலம் வர வைப்பது எம் வடிவேலன் அருளன்றோ

ஆற்றங்கரையானின் அற்புதங்கள் கூறும்
நூற்றி ஐம்பதாவது மலர் தோற்றிடும் இவ்வேளை
நாற்றிசையோருக்கும் ஞானச் சுடராகும் உன்னை
போற்றியே மகிழ்கிறோம் புதுமையிலும் புதுமையிதே!

அன்றோடு அருள்பொன்றிடவில்லை யென்று
இன்றைக்கும் அருளிங்கே பொங்கி வழிகின்றதென
நன்றாக நாமுரைக்க நமக்கருளும் வேலனிவன்
என்றைக்கும் எமக்கேது குறை இவன் ஏழைகளின் முருகனன்றோ

வெந்தழிந்து நீறாகி விடிவிற்காய் ஏங்கியழும்
நந்தமிழர் இதயங்களிற்கு நல்லதோர் ஔடதமாய்
செந்தமிழ்க் கடவுளென சிறப்பாக நாம் போற்றும்
சந்நிதியானின் நீறுதரும் தனித்துவ மலரன்றோ

இத்தனைக்கும் காரணம் என்னவென்று நாம்பார்த்தால்
முத்தான முருகனிவன் குரு மோகனதாஸர் பின்னால்
சத்தாக நின்று சந்நிதியான் ஆச்சிரமந்தன்னில்
சொத்தாக எம்மை ஏற்று சோக்காக எழுதலன்றோ

உ

# மழை யாருக்காகப் பெய்கிறது?

- "செஞ்சொல்வாணர்" **இரா. செல்வவடிவேல் அவர்கள்** -

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று** (குறள் - 11)

தன்னை அருந்தும் உயிரை அழியாமல் காப்பது அமிழ்தமே ஆகும். அதுபோல, தன்னைப் பருகிய உயிரையும் தான் நிலையாகக் காப்பதால், உயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற அமிழ்தம் இம் மழைநீரே ஆகும்.

மழையின் பெருமையையும் இன்றியமையாமையையும் உலகத்திலே எல்லா மக்களும் அறிருந்திருக்கிறார்கள். மழையின் சிறப்பை ஏனையோர் அறிந்ததை விட மிக நன்றாக அறிந்தவர் தமிழரே. ஏனென்றால், தமிழ் வேதம் எழுதியருளிய ஐயன் திருவள்ளுவர் "வான் சிறப்பு" என்னும் ஓர் அதிகாரம் வகுத்து அதில் மழையின் சிறப்பை எழுதியுள்ளார். சிலப்பதிகாரம் என்னும் ஆதித் தமிழ்க் காவியத்தை எழுதிய இளங்கோ அடிகள்,

**"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாம நீர் வேலி யுலகிற் கவனளிபோல்**
**மேனின்று தான் சுரத்த லான்"**

என்று மழையைப் போற்றினார். இவ்வாறு மழையைப் போற்றிச் சிறப்பித்தவர் தமிழரைத் தவிர வேறு யாருளர்?

பறவை, விலங்கு, மக்கள் முதலிய எல்லா உயிர்களும் உலகத்திலே உயிர்வாழ வேண்டுமானால், புல்பூண்டு செடி, கொடி, மரம் ஆகிய தாவரங்கள் உலகத்தில் செழித்து வளர வேண்டும்.

---

**அறவழியில் வராத செல்வம் தேய்ந்துவிடும்.**

ஓரறிவுயிராகிய மரம்செடி புல் பூண்டுகள் இல்லையானால், ஈரறிவுயிர் முதல் ஆற றிவுயிர் வரையில் எந்த உயிரும் உல கத்தில் உயிர் வாழ முடியாது. உல கம் முழுவதிலும் உள்ள தாவரங்களை ஒரே நாளில் அழித்து விடுவோமானால், அப்பொழுதே உலகத்தில் வாழும் ஏனைய உயிர்கள் எல்லாம் மாய்ந்து உலகத்தில் உயிர்களே இல் லாமற்போகும். எனவே ஓரறிவுயிராகிய தாவரங்களை அடிப்படையாகக் கொண்டி ருக்கிறது ஏனைய உயிரகளின் வாழ்க்கை; எல்லா உயிரகளுக்கும் ஆதரவாக உள்ள தாவரங்களை உண்டாக்கி அவற்றை நிலைபெறச் செய்வது மழை. இதனால் அன்றோ,

**விசும்பின் துளி வீழின் அல்லால், மற்று ஆங்கே**
**பசும்புல் தலை காண்பு அரிது - குறள் - 16**

என்றும்,

**விண் இன்று பொய்ப்பின், விரிநீர் வியன் உலகத்து**
**உள் நின்று உடற்றும் பசி - குறள் - 13**

என்றும் திருவள்ளுவர் கூறினார். அன்றியும், தாவரங்களை உண்டாக்கி அவற் றின் மூலம் உயிர்களுக்கு உணவைக் கொடுப்பது மட்டுமல்லாமல் உயிர்களுக்குத் தானே உணவாகவும் இருப்பது மழை (நீர்).

**துப்பார்க்குத் துப்புஆய துப்பு ஆக்கி, துப்பார்க்குத்**
**துப்பு ஆயதூஉம் மழை குறள் - 12**

உண்பதற்குரிய பிற உணவுப் பொருள்களையும் தான் உண்டாக்கித் தன்னை உண்போர்க்குத் தானே ஒரு உணவாகவும் (தண்ணீராகவும்) பயன் படும் சிறப்பினை உடையது மழையே ஆகும் - என்று அழகாகக் கூறினார். தொன்று தொட்டு நமது நாட்டின் முக்கிய தொழி லாக உள்ளதும் நாட்டின் முதுகெலும்பு போன்றதும் உழவுத் தொழில் ஆகும். ஆகவே, நம்மவர் மழையின் இன்றியமை யாமையை நன்கறிவர். ஆனால், மழை எப்படிப் பெய்கிறது என்பதை அறியார் நமது நாட்டில் மட்டுமல்ல; ஏனைய நாட் டிலும் பண்டைக்காலத்தில் இருந்தவர் மழை பெய்வதன் காரணத்தை அறிந் திலர். இந்திரன் என்னும் தெய்வம் மழை யைப் பெய்யச் செய்கிறது என்றும், வரு ணன் என்னும் கடல் தெய்வம் மழையை அனுப்புகிறது என்றும் அவர்கள் கருதி வந்தனர்.

நமது நாட்டுப் பண்டைப் பெரி யோர் மழை எப்படிப் பெய்கிறது என்று கருதினார்கள் என்பதைப் பார்ப்போம். அர சரும், மகளிரும், முனிவரும், அந்தணரும் மழை பெய்வதற்கும் பெய்யாமல் இருப் பதற்கும் காரணம் ஆவர் என்று அவர்கள் கருதினார்கள். மகளிர் கற்புடன் இருந்தால் மழை பெய்யும், கற்புத் தவறி னால் மழை பெய்யாது என்றும், அரசர் செங்கோல் செலுத்தினால் மழை பெய்யும்;

கொடுங்கோல் செலுத்தினால் மழை பெய்யாது என்றும்; துறவிகளாகிய முனிவர் ஒழுக்கம் பிழையாமல் தவம் செய்தால் மழை பெய்யும்; நெறி தவறினால் மழை பெய்யாது என்றும்; அந்தணர் வேதநெறி ஒழுகின் மழை பெய்யும்; வேதநெறி தவறின் மழை பெய்யாது என்றும் அவர்கள் கருதி வந்தார்கள்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தை அரசாண்ட இணங்கிள்ளி என்னும் அரசன் காலத்தில் மழை பெய்யாமல் நாட்டில் வறுமை ஏற்பட்டது. அப்போது மணிமேகலையார் அந்த நகரத்திற்கு வந்தார். வந்தவரை அரசன் வரவேற்றான். வரவேற்று மழையில்லாமல் நாடு அல்லற்படுவதன் காரணத்தைக் கூறுகின்றான்:

**"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ**
**கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ**
**நலத்தகை நல்லாய்! நன்னா டெல்லாம்**
**அலத்தற் காலை யாகிய தறியேன்"** - **மணிமேகலை**

அரசன் செங்கோல் செலுத்தினால் மழை பெய்யும்; கொடுங்கோல் செலுத்தினால் மழை பெய்யாது என்பதை தெய்வப் புலவர் கூறினார்.

**இயல் புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளும் தொக்கு** - குறள் 545

என்றும்,

**முறைகோடி மன்னவன் செய்யின், உறைகோடி**
**ஒல்லாது, வானம் பெயல்** - குறள் 559

என்றும் கூறியது காண்க.

கற்புடைய மங்கையரால் நாட்டில் மழை பெய்கிறது என்பதையும் திருவள்ளுவர் கூறுகிறார்:

**தெய்வம் தொழாஅள்கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய் எனப் பெய்யும் மழை** - குறள் 55

**"வறனோடிகள் வையகத்து வான் தருங்கற்பினாள்"**

என்பது கலித்தொகை

**"புண்ணியமுட்டாள், பொழிமழை தரு உம்**
**அரும் பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிர்"**

என்பது மணிமேகலைக் கூற்று.

**"நாடு மூவரும் நனி புகழ்ந் தேத்தலும்**
**பீடுறும் மழை பெய்கெனப் பெய்தலும்**

**கூடலாற்றவர் நல்லது கூறுங்காற்**
**பாடுசான்மிகு பத்தினிக் காவதே"**

என்பது வளையாபதிச் செய்யுள்.

**"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது**
**நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது**
**பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"** - சிலம்பு

கற்புடைய பெண்கள் இருக்கும் நாட்டில் மழை தவறாமல் பெய்து நாடு வளம் பெறும் என்றும், அரசனுடைய ஆட்சியும் செங்கோலாக நடைபெறும் என்றும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுவார்.

தவசிகள் தவம் செய்யாவிட்டால் மழை பெய்யாது என்று நான் மணிக்கடிகை என்னும் நூல் கூறுகிறது.

**"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை, மழையும்**
**தவமிலார் இல்வழி இல்லைத் தவமும்**
**அரசிலார் இல்வழியில்லை, யரசனும்**
**இல் வாழ்வாள் இல்வழி இல்"** (நான்மணிக் கடிகை 48)

இவையன்றி **அந்தணர்** - பாப்பனர் அழல் ஓம்புதலினாலேயும் மழை பெய்கிறது என்னும் கருத்தும் பண்டைக் காலத்தில் இருந்தது. இதனை **"மழை வளந்தரு உம் அழவோம்பாளன்"** என்னும் மணிமேகலையினால் அறியலாம்.

இவர்களாலேதான் பண்டைக் காலத்தில் மாதம் மும்மாரி பெய்தது என்றும் பிற்காலத்து நூலாகிய விவேக சிந்தாமணி கூறுகிறது.

**"வேதமோதிய வேதியர்க் கோர் மழை**
**நீதி மன்னர் நெறியினுக் கோர் மழை**
**காதல் மங்கையர் கற்பினுக் கோர் மழை**
**மாத மூன்று மழையெனப் பெய்யுமே"** என்பது அது.

மாதம் மும்மாரி பெய்தது எந்தக் காலத்தில் என்பது தெரியவில்லை. ஆனால் வேதியரும், மன்னரும், மங்கையரும் தத்தம் அறநெறியிலிருந்து தவறியபடியால், ஆண்டில் மூன்று மழை பொய்த்தது என்று அந்நூலே கூறுகின்றது.

**"அரசி விற்றிடும் அந்தணர்க் கோர் மழை**
**வரிசை தப்பிய மன்னருக் கோர் மழை**
**புருடாணக் கொன்ற பூவையர்க் கோர் மழை**
**வருடம் மூன்று மழையெனப் பெய்யுமே"** - என்கிறது.

---

***மனிதனைக் கெடுப்பது ஆசை, கோபம்.***

அந்தக் காலத்தில் மழை பெய்தமைக்கும், இந்தக் காலத்தில் மழை பெய்யாமைக்கும் தவம், அரசு, கற்பு, வேதியர் எனும் நால்வரின் நடத்தையே காரணம் என்பது முடிவு.

மேற்குறிப்பிட்ட தவசியர், அரசன், மகளிர், அந்தணர் எனும் நால்வகையினரும் தமது கடமையை செவ்வனச் செய்யின் அவர்கள் மழையின் பெருமையை அடைவர் என்பது உட்பொருளாக இருக்கலாம்.

கலியுகத்தில் துறவியர் பெயரில் கயவர்: அரசன் பெயரில் கொள்ளையர்: மகளிர் பெயரில் அரக்கியர்: அந்தணர் பெயரில் இறை துரோகிகள் வந்து விட்ட காரணத்தினால் தானே மழை பொய்யத்தது என எண்ணத் தோன்றுகிறது.

மழை எவ்வாறு தோன்றியது என்பதனை காவியப்புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். வெண் மேகங்கள் சென்று கடலில் படிந்து வயிறு நிறைய நீரைக் குடித்துக் கருமேகமாகி வானத்திலே வந்து மழையாகப் பெய்கிறது. வெயிலின் சூட்டினாலே நீர் நிலைகளில் உள்ள நீர் ஆவியாகச் சென்று ஆகாயத்திலே மேகமாகி மழையாகப் பெய்கிறது என்கிறது **"விஞ்ஞானம்"**. இதனை நம் முன்னோர் காவியப் புலவரின் கற்பனை என்று கருதினார்களேயல்லாமல் உண்மை என்று கொள்ளவில்லை.

பெண்பாற் புலவராகிய கோவை நாச்சியார் எனும் ஆண்டாள் மழை பெய்வதைப் பின்வருமாறு பாடியுள்ளார்.

**"ஆழி மழைக் கண்ணா நன்று நீ கைகரவேல்**
**ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி**
**ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்துப்**
**பாழியந் தோளுடையப் பத்மநாபன் கையில்**
**ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து**
**தாழாதே சாரங்கம் உதைத்த ஆமழை போல்**
**வாழ உலகினில் பெய்திடாய்!**

கடலிலே புகுந்து நீரை எடுத்து ஊழிமுதல்வன் உருவம் போல் உடம்பு கறுத்து மேகமாகி அந்தப் பத்மநாபன் கையில் ஆழிபோல் மின்னி சங்குபோல் முழங்கி, வில்லிலிருந்து பொழிந்த அம்பு மழை போல மழை பெய்யக் கோருகிறார் நாச்சியார். என்ன இந்த விஞ்ஞான காலத்தில் அணுகுண்டு யுகத்திலே பழைய புராணங்களைப் புரட்டுகிறீர் என்று வாசகர் கருதுவது தெரிகிறது. இன்றைய விஞ்ஞான காலத்திற்கு தேவையான பல விடயங்கள் பழம்பெரும் புராணங்களில் இதிகாசங்களில் மற்றுமுள நூல்களில் பரக்கக் கிடக்கிறது. இவற்றின் பெருமையை, உட்பொருள் அறிந்து கொண்டு **"மனிதர்களாக"** வாழ முயற்சிக்க வேண்டும் என்பதே அடியேன் உளக்கிடக்கை ஆகும்.

---

*பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும்.*

உ

க.பொ.த. (உயர்தர) மாணவரின் மேலதிக வாசிப்பிற்குரியது


# பெரியாழ்வார் திருமொழிப் பாடல்களில் வெளிப்படும் கண்ணனின் திருவிளையாடல்கள்

- நீராட்டம் பகுதியை அடிப்படையாகக் கொண்டது

ச.லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

**வெண்ணெய் அளைந்த குணுங்கும்...** எனத் தொடங்கி அமையும் பெரியாழ்வார் திருமொழியின் நீராட்டம் பகுதியில் உள்ள பத்துப் பாசுரங்களில் கண்ணனின் திரு விளையாடல்கள் குறித்த செய்திகளும் வருகின்றன. அவை பற்றிச் சுருக்கமாக நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாக யாதவர் குலத்தில் கிருஷ்ணன் அவதரித்தார். தேவகியின் சகோதரனாகிய கம்சனுக்குத் தேவகியின் எட்டாவது குழந்தையால் ஆபத்து நேரும் என கிடைத்த அசரீரிக் கமைய கம்சன் தன் மருமகனாகிய கிருஷ்ணனைக் கொல்லத் துடித்தான். இதனால் வருத்தமுற்ற வசுதேவர் தனது நண்பராகிய நந்தகோபனின் தேவியாகிய யசோதையிடத்தில் கிருஷ்ணனை வளரவிட்டார். குழந்தைக் கண்ணனும் ஆயர் குலத் திலகனாகக் கோகுலத்தில் வளர்ந்தான்.



**வஞ்சகப் பேய்மகள் துஞ்ச வாய் முலை வைத்த பிரான் (பூதனை வதம்)**

தனது தங்கை தேவகியின் மகன் கண்ணனால் தனக்கு ஆபத்து நேரிடும் என்று பயந்த கம்சன் எல்லாக் குழந்தைகளையும் கொல்ல நினைத்தான். இதற்காகப் **பூதனை** என்ற அரக்கியை வரவழைத்து எல்லாக் குழந்தைகளுக்கும் நச்சுப் பால் கொடுக்குமாறு பணித்தான். அவளும் தன் கருமத்தைக் கச்சிதமாகச் செய்யத்

தொடங்கினாள். பூதனை தவிர வேறு பேர்களை ஏவியும் பச்சிளம் குழந்தைகளை வேட்டையாடும் படலம் தொடர்ந்தது.

பூதனை ஆகாயத்தில் பறந்து செல்லக் கூடியவள். வேண்டிய உருவம் எடுக்க வல்லவள். பல குழந்தைகளைத் தனது மாய விளையாட்டுக்களால் பாலூட்டிக் கொன்றாள்.

தன்னை ஓர் அழகிய பெண்ணாக உரு மாற்றிக் கொண்டு கண்ணன் இருக்கும் கோகுலத்திற்குப் பூதனை சென்றாள். கோகிலத்திலுள்ள கோபியர்கள் இவளது தோற்றத் தைக் கண்டு சந்தேகிக்கவில்லை. யாரும் இல்லாத சமயம் பார்த்துக் கண்ணனிடம் சென்ற இவள் விஷம் தடவிய தனது மார்பகங்களைக் கண்ணனின் வாயில் வைத்து அவனுக்குப் பாலூட்டத் தொடங்கினாள்.

துஷ்டரை அழிக்கும் கண்ணன் பாலை உறிஞ்சுவது போல அவளது உயி ரையே உறிஞ்ச ஆரம்பித்தான். பூதனை அலறித் துடித்தாள். அவளது மிகப்பெரும் அலறலைக் கேட்டு எல்லோரும் ஓடி வந்து பார்த்தனர். அழகிய பெண்ணாக வந்த பூதனை அரக்கிக் கோலத்தில் இறந்து கிடந்தாள். கண்ணன் ஏதும் அறியாதவன் போல அவளது பருத்த உடலின் மீது விளையாடிக் கொண்டிருந்தான். யசோதை கண்ணனைத் தூக்கி முத்தமிட்டு ஆறுதலடைந்தாள். கொல்லும் எண்ணத்துடன் வந்த வள் எனினும் கண்ணனுக்காகப் பாலை அர்ப்பணித்தவளாதலால் பூதனை சொர்க்க லோகத்திற்குச் சென்றாள்.

இந்தச் சம்பவத்தைக் குறிப்பதாகப் பெரியாழ்வார் திருமொழியில் நீராட்டம் பகுதியில் **“வஞ்சகப் பேய்மகள் துஞ்ச வாய்முலை வைத்த பிரானே** (பாடல் எண் : 04) எனவும் **“பெய்ச்சி முலையுண்ணக் கண்டு பின்னையும் செல்லாதென் நெஞ்சம்”** எனவும் (பாடல் எண் 03) பாடலடிகள் அமைகின்றன.

## கடிய சகடம் உதைத்தான் (சகடாசுரன் வதம்)

கண்ணன் ஐந்து மாதக் குழந்தையாக இருந்த போது அவனை முதன் முத லாக வீட்டைவிட்டு வெளியே கொண்டு வந்தனர். கிருஷ்ணனைக் காண கோகுலமே திரண்டு வந்தது. மந்திரங்கள் ஒலிக்க கிருஷ்ணனுக்கு நீராட்டப்பட்டது. குழந்தை பின் அசதியைப் போக்க நினைத்த யசோதை கிருஷ்ணனை ஒரு தொட்டிலில் கிடத்தி ஒரு மாட்டு வண்டியின் நிழலில் (அடியில்) படுக்க வைத்தாள்.

கோகுலத்தில் இருந்த கண்ணனைக் கொல்ல நினைத்த கம்சன் பூதனையை ஏவிப்பார்த்தான். அம்முயற்சி தோல்வியில் முடிந்தது. எனவே இரண்டாவது முயற்சி யாக சகடாசுரன் (சகடம் - வண்டில்) என்னும் அசுரனை அனுப்பி வைத்தான்.

சகடாசுரன் கண்ணன் படுத்திருந்த வண்டியின் சக்கரத்திற்குள் சென்று

கண்ணனைக் கொல்ல முயற்சித்தான். இந்த நேரத்தில் தனது காலை ஆட்டும் பாணியில் குழந்தைக் கண்ணன் தனது காலால் உதைத்தான்.

குழந்தையின் பிஞ்சுப் பாதம் பட்ட வேகத்தில் வண்டியின் சக்கரம் தூள் தூளாக நொறுங்கியது. அதனுள் இருந்த சகடாசுரன் கொல்லப்பட்டான். கொல்லப்பட்டான் என்பதை விட இவனும் இறைவனது திருப்பாதம்பட்டு முத்தி அடைந்தான் எனக் கூறுவதே பொருத்தம். இச்சம்பவத்தைக் குறிப்பதாகப் பெரியாழ்வார் **"கஞ்சன் புணர்ப்பினில் வந்த கடிய சகடம் உதைத்து"** (பாடல் எண் : 04) எனப் பாடுகின்றார்.

## நின்ற மராமரம் சாய்த்தாய்...

கண்ணனை நித்திரைகொள்ளவைத்துவிட்டு வளர்ப்புத் தாயான யசோதை தயிர் கடைந்து கொண்டிருந்தாள். கண்ணன் நித்திரை விட்டு எழுந்த போது அவனுக்கு மிகவும் பசியாக இருந்தது. தாயாரின் மத்தைப் பிடித்து இழுத்தான். குழந்தைக் கண்ணனின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட யசோதை கண்ணனுக்குப் பாலூட்ட ஆரம்பித்தாள். அந்த நேரத்தில் சமையலறையில் பால் பொங்கும் வாசனை வரவே குழந்தைக் கண்ணனை நிலத்திற் கிடத்திவிட்டு யசோதை சமையலறைக்கு ஓடினாள்.

பாதி வயிறே நிரம்பிய கண்ணனுக்குக் கோபம் வந்து விட்டது. தயிர்ப் பானையை உடைத்துவிட்டான். தன் பிஞ்சுக் கைகள் நிறைய வெண்ணெயை அள்ளி எடுத்துக் கொண்டு முற்றத்தில் இருந்த உரல் மேல் வந்து அமர்ந்தான்.

கண்ணனுக்கு மீண்டும் பாலூட்டுவதற்காக வந்த யசோதைக்குக் கண்ணனின் செயல்கள் கோபத்தை உண்டு பண்ணின. நிலத்தில் வழிந்த வெண்ணெயைக் கண்ணனுடன் சேர்ந்து குரங்குகளும் உண்டவண்ணமிருந்தன. இச்சம்பவங்களால் ஆத்திரமுற்ற யசோதை கையில் தடியை எடுத்தாள். கண்ணனைத் தண்டிப்பவளைப் போல அவனை நோக்கிச் சென்றாள். தடியுடன் தாய் தன்னை நோக்கி வருவதைக் கண்ட கண்ணன் பயந்தவனைப் போல் சிறிது தூரம் ஓடினான். கண்களில் கண்ணீர் மல்க நின்றான். இதைக் கண்ட யசோதையின் உள்ளம் இளகியது.

அடிக்கும் எண்ணத்தைக் கைவிட்டாள். கண்ணனை உரலோடு கட்டி வைத்தாள். கண்ணனின் குறும்புத்தனம் நின்று விடும் என்பது யசோதையின் எதிர்பார்ப்பாக இருந்தது. இதன்பின் யசோதை தன் வேலைகளில் கவனம் செலுத்தினாள்.

இதனையே எதிர்பார்த்திருந்தவனைப்போல மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்த கண்ணன், தூரத்தில் தெரிந்த இரண்டு மராமரங்களைப்(மருதமரங்களை) பார்த்தான். அவை இரண்டும் மிகவும் நெருங்கி அமைந்திருந்தன. அவற்றின் நடுவாகச் சென்றால் உரலுடன் கட்டப்பட்ட கயிறு அறுந்துவிடும் என எண்ணினான். தன்னுடன் கட்டப்பட்டிருந்த உரலோடு இரு மரங்களுக்குமிடையால் நுழைந்து சென்றான். இந்த நேரத்தில்

***பிறஉயிர்களைத் துன்புறுத்துவது தன் உயிருக்கே உலையாய் முடியும்.***

உரல் மரங்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டது. கண்ணன் ஓங்கி உரலை இழுத்தான். அதன்போது இரு மராமரங்களும் பேரிரைச்சலோடு வேருடன் சாய்ந்தன. நாரதரின் சாபத்தால் மராமரமாகிய குபேரனின் பிள்ளைகள் தேவ புருஷர்களாக அம்மரங்களிலிருந்து வெளிப்பட்டனர்.

கண்ணனின் கைபட்டதால் சாபவிமோசனம் பெற்ற இவர்கள் கண்ணனைத் துதித்துவிட்டுத் தேவலோகம் சென்றனர். மரம் விழுந்ததால் ஏற்பட்ட பாரிய ஓசையைக் கேட்டுப் பயந்து ஓடி வந்த யசோதையும் மற்றவர்களும் கயிறு அறுபடாமல் இருந் தமையையும் குழந்தைக் கண்ணன் மரங்களுக்கிடையில் நசிபடாமல் இருந்தமை யையும் கண்டு ஆச்சரியமுற்றனர். கயிற்றை அவிழ்த்துக் கண்ணனை மடியில் கிடத்தி ஆனந்தத்துடன் அன்பு காட்டினாள் (கண்ணனைக் கடவுள் என்று அறியாத) அந்த யசோதை. இச்சம்பவத்தைக் குறிக்கக் கருதிய பெரியாழ்வார் **“நின்ற மராமரம் சாய்த்தாய்”** எனப் பாடுகின்றார். (பாடல் எண் 02)

## அகாசுரன் வதம்

காட்டிற்குள்ளே சென்று அங்குள்ள கனிகளைப் பறித்து உண்ண வேண்டும் என்று ஆசைகொண்ட கிருஷ்ணன் ஒருநாள் தன் நண்பர்களுடன் காட்டிற்குச் சென்றான். அங்கு எல்லோரும் கூடி விளையாடினார்கள்.



பூதனைக்கும் பகாசுரனுக்கும் (இவனும் கிருஷ்ணனால் கொல்லப்பட்டவன்) தம்பியாகப் பிறந்த அகாசுரன் என்பவன் கிருஷ்ணனைக் கொல்வதற்குச் சந்தர்ப்பம் பார்த்திருந்தான். ஒரு பெரிய மலைப்பாம்பு போலத் தனது உரு வத்தை எடுத்தான். வாயைத் திறந்து வைத்துக் கொண்டு வழியில் படுத்துவிட்டான். பாம்பின் கீழ் உதடு பூமியையும் மேலுதடு வானத்தையும் தொட்டன. விளையாட்டுத் தனமுள்ள சிறுவர் கள் பெரிய குகை என நினைத்துக் கொண்டு தனது வாயின் உள்ளே நுழைவார்கள் என்பது அகாசுரனின் எண்ணமாக இருந்தது.

அவனது எண்ணம் பலித்தது. சிறுவர் கள் கிருஷ்ணன் இருக்கிறான். தமக்கு எந்த ஆபத்தும் வராது என்ற துணிவோடு இருண்ட குகைக்குள் செல்வதாக நினைத்துக்

கொண்டு பாம்பின் வாய்க்குள் சென்றனர். கிருஷ்ணன் இன்னும் செல்லவில்லை. இதனால் அகாசுரனும் வாயை மூடவில்லை. ஆனால் வந்திருப்பவன் அகாசுரன் எனப் புரிந்துகொண்ட கிருஷ்ணன் திடீரென நேரே அவனுடைய வாய்க்குள் புகுந்து கொண்டு தனது உடலைப் பெருப்பித்து விஸ்வரூபம் எடுத்தான். அகாசுரன் மூச்சுவிட முடியாமல் தவித்தான். கண்கள் பிதுங்கிச் செத்து ஒழிந்தான். இச்சந்தர்ப்பத்தில் கிருஷ்ணனின் நண்பர்களும் மயங்கிக் கிடந்தனர். கிருஷ்ணனுடைய பார்வை ஒன்றே அவர்களுக்குப் பரிகாரமாக அமைந்தது. அவர்கள் மயக்கம் தெளிந்து செத்த பாம்பில் இருந்து வெளியே வந்தனர். இச்சம்பவத்தைக் குறிப்பதாகப் பெரியாழ்வார் **"பின்தொடர்ந்தோடி ஓர் பாம்பைப் பிடித்துக்கொண்டு ஆட்டினாய் போலும்"** எனப் பாடுகின்றார். (பாடல் எண்: 08)

---

# செல்வச் சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை (9)



**அண்டர்கள்நி தம்ப ணிந்த தண்பதம்பு கன்று கெஞ்ச**
**அன்னையொடு பிள்ளை யென்று - வருவேளா!**
**அண்டியுன தன்பர் நல்ல தண்ணியுளி டம்வி ளம்பு**
**மென்னவொரி டம்பு கன்று - அருள்வேளே**
**திண்டிறல்மி குந்த தொண்டர் கொண்டபெரு மன்பில் வந்து**
**தெங்கிலைபு னைந்து தந்த - தெப்போலைத்**
**தண்டிகையி ருந்து வென்றும் தெண்டனிடு மன்பர் நெஞ்சுள்**
**தங்கவைய றிந்து ணர்ந்து - தருவோனே!**
**எண்டரும்ப தம்ம றந்து பண்டைவினை கொண்டு லைந்து**
**கண்டபடி யிங்க லைந்து - திரிவேனை**
**எண்ணரிய ருள்வ ழங்கு புண்டரிக பங்க யந்தன்**
**தொண்டுசெய வின்ன ருள்தந் - தாளாயோ?**
**தண்டையுஞ்சி மைம்புங் கொஞ்சு முன்னடிவ ணங்க வின்பை**
**தண்நதிம ருங்கி ருந்து - பொழிவோனே**
**தண்டமிழ்ப்பு கழ்வி ளம்ப கொண்டுனத ருள்சு ரந்து**
**சந்நிதியி ருந்து சிந்து - முருகோனே.**


**- இராசையா குகதாசன்,**
**நாயன்மார்க்கட்டு.**

---

மனச்சாட்சியைத் துறந்தவனிடம், மதிக்கத் தக்கது வேறெதுவும் கிடையாது.



2010ஆம் ஆண்டு கதிர்காம உற்சவத்தையொட்டிய பாதயாத்திரையில் கலந்துகொள்ள வந்த அடியார்கள் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்படும் காட்சி.



அமரர் தியாகராசா மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக 01.01.10ல் ஆச்சிரமத்தால் புதிதாக கட்டப்பட்ட வைத்தியசாலைக்குரிய கட்டடத்தை மேலே உள்ள படத்தில் காணலாம்

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத் தொடர் - 37)

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்-

தன் இயல்பு உணர்ந்த ஞானியின் செயல் வினையைக் கடிதல் ஆகும். ஞானிகள் ஐம்புல ஆசை இல்லாதவர் ஆகையால் வினைகளால் துன்பம் எய்தார். ஆன்மாக்கள் அனுபவிக்கும் கா்மவினையைச் சைவசித்தாந்தம் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என மூன்றாக வகுத்துக் கூறும். பல பிறவிகளிலும் செய்து அனுபவித்தவை போக எஞ்சியிருப்பது சஞ்சிதவினை எனப்படும். சஞ்சிதக் குவியலில் இருந்து இப்பிறவியில் அனுபவிப்பதற்கென எடுக்கப்பட்ட வினை பிராரப்தம் ஆகும். பிராரப்த வினையை நுகரும் போது நமக்கு ஏற்படுகின்ற விருப்பு வெறுப்புகளால் புதிதாக நாம் செய்கின்ற நிகழ்வு ஆகாமியம் எனப்படும். இந்த மூன்றுவகை வினைகளிலிருந்தும் விடுபட்ட ஜீவன் முத்தர்களே ஞானிகள் எனப்படுவர்.

"தன்னை அறிந்தவன் தத்துவஞானி என்றே இந்து சமயத் திருநூல்கள் அனைத்தும் கூறுகின்றன. தன்னை அறிந்தவன் தலைவனாகிய இறைவனை அறிவான். இறைவனை அறிதற்குரிய தடைகளையும் அறிவான். தடைகளைத் தாண்டி இறையருளைப்பெறும் வழிதன்னை அறிந்தவனாலேயே முடியும். இதனை நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை யாரறிவார்? என்றே மணிவாசகரின் தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. உலகியல் வாழ்க்கையிலே கூடத் தன்னை அறியாது, தனது நிலை அறியாது, தான்தோன்றித்தனமாக நடந்து தமது வாழ்வையே அழித்தவர்கள் பலரைக் காண்கின்றோம்.

தம்முள்ளே இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்த ஞானிகளுக்கு உள்ளம் கருவறையாகவும் ஊனுடம்பு இறைவன் வீற்றிருக்கும் ஆலயமாகவும் மாற்றம் பெற்றுவிடும். இவர்கள் தன் முனைப்பையும் பற்றுக்களையும் நீக்கி முன் செய்த பழவினையின் பயன்களாகிய பாவமூட்டையின் முடிச்சை அவிழ்த்து அவற்றை விலகி ஓடச்செய்து விடுவார்கள். தன்னை உணர்ந்த தத்துவஞானிகள் பழவினையின் பந்தத்தை சிவசிந்தனையால் நீக்கி விடுவார்கள். ஏறுவினையாகிய ஆகாமியவினையை நெருங்கவிடாமல் அழித்து ஒழித்து விடுவார்கள். இவர்கள் இறைவன் திருவடிகளைத் தமது தலைமேல் தாங்கி நிற்பதால் அவனருளின் துணையால் இதனைச் சாதித்து விடுகிறார்கள்.

**தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**

**முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்**

---

*ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுக்க வேண்டாமா.*

**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
**சென்னியில் வைத்த சிவனருளாலே**

பொருளின் மேற்செல்லும் ஆசையைப் போக்குதல் "அவா அறுத்தல்" எனப்படும். ஆசை பிறவிக்கு வித்தாதலால் அதனை அறுப்பது ஞானியின் கடனாகும். மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் ஆசையே ஆகும். "ஆசையை வெல்பவன் பூரண மனிதன் ஆகிறான்" என்றே பகவத் கீதையும் கூறுகிறது. இறை அநுபூதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசை எப்பொழுதும் தடைக்கல்லாக இருக்கும்.

அருணகிரிநாதர் சிறந்த முருகபக்தர். இவர் முருகன் மீது பாடிய மந்திரமாலையாகிய கந்தரநுபூதியில் ஞான நிலைக்கு ஆதாரமான மௌன நிலையை தான் பெற்ற சிறப்பினை எடுத்துக் கூறுகின்றார். ஞானபண்டிதனாகிய முருகப்பெருமானின் அன்புடன் கூடிய அருளினால் ஆசையாகிய விலங்கு தூள் தூளாக முற்றிலும் பொடியாகியது. இதனால் பேசா அநுபூதியாகிய மௌனநிலை தனக்குத் தோன்றியது என்பதை

**"ஆசா நிகளம் துகளாயின பின்**
**பேசா அனுபூதி பிறந்ததுவே"**

என அருணகிரியார் கந்தரநுபூதியில் குறிப்பிடுகின்றார். ஒருவன் எந்தப் பொருள்களில் இருந்து ஆசையை அறுத்துக்கொண்டு பற்று அற்றவனாக இருக்கின்றானோ, அவன் அந்தப் பொருள்களினால் வரும் துன்பத்தை அடைவதில்லை என்பதை

**"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்"**

என்றே தமிழ் மறையாகிய திருக்குறளும் செப்புகிறது.

தனது அடியவனுக்கு பக்தனுக்கு எதைத்தரவேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும்.

**"வேண்டத்தக்கது அறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ**

என்றே மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. வினைக்கு வித்தாக இருக்கும் ஆசையைக் களையுங்கள் என்றே திருமூலர் கூறுகின்றார். இதுவே வழி என்பதற்காக இதனை "ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்" என்று இரண்டு முறை அழுத்திக் கூறுகின்றார். ஆசைகளைத் தீர்த்துக்

கொள்ள வேறு வழிகளை நாடாமல் ஈசனையே பிரார்த்தித்துப் பெறலாம் என்று முயல்வதும் கூட ஆசைகளைப் பெருக்கும் என்கிறார். இறைவனைத் தியானிக்கும் போது, ஆசைகளைப் பிணைத்துப் பிரார்த்தனை செய்ய வேண்டாம் எனக் கூறுகின்றார். இதற்காகத்தான்,

"ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்கிறார். ஆசை பெருகப் பெருக அவற்றால் உயிர்க்குத் துன்பம் உண்டாகும். ஆசையை அறவே விட்டால் ஆனந்தம் அகத்திலே ஊற்றெடுக்கும்

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தமாமே**

அடியவர்க்கு எளியவனாகிய இறைவனின் அருளைப் பெறுவதற்கு பக்தி மார்க்கமே சிறந்தது என நாரத மகரிஷி பக்தி சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்றே திருவாசகமும் கூறுகிறது. அடியவன் இறைவனிடம் வைக்கும் அன்பின் முதிர்வு நிலையே பக்தி ஆகும். பக்தி பிரபக்தியாக மாறும் பொழுது நான், எனது என்ற முனைப்புகள் நீங்கி ஆன்மா இறைவனின் திருவடி நிழலைச் சரணாகதியாகப் பற்றிக் கொள்ளும். தேவர்களாலும் காணப்படாத பரமசிவன், தன்னை அடைந்த அடியவர்களின் உள்ளத்தில் பேரறிவாய் நின்று பிரகாசிப்பான் என்பதை,

**ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு**
**வானாடர் காணாத மன்**

எனத் திருவருட்பயன் விளக்குகிறது.

பசுவினது கன்று தாயை நாடிக் கதறி அழைப்பது போல நான் கன்றாய் இருந்து என் நாதனாகிய இறைவனை நாடி அழைத்தேன். நான் கன்றின் தன்மையில் இருந்து என் தாயாகிய சிவத்தைப் பக்தியினால் கதறி அழைத்தேன். தேவர்களாலும் காண முடியாத மறைப் பொருளாகிய சிவன் ஊன் உடம்பால் கட்டப்பெற்றிருக்கும் என்னை விரும்பி என் உள்ளத்தில் எழுந்தருளியுள்ளான்.

**ஆன் கன்று தேடியழைக்கு மதுபோல்**
**நான் கன்றாய் நாடியழைத்தேனென் நாதனை**
**வான் கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்**
**ஊன் கன்றானடி வந்துள் புகுந்தானே**

*அன்பின் உறைவிடமே அன்னை.*

பக்தியினால் ஞானிகள் சீவன் முத்தி நிலையைப் பெறுவார்கள். உடலோடு இருந்த படியே ஞானிகள் பெறும் முத்தி சீவன் முத்தி எனப்படும். சீவன் முத்தர்களாகிய ஞானிகள் மக்களை இரட்சிப்பதற்காகவே இவ் உலகில் பிறப்பது உண்டு. இவர்கள் மலங்களால் பீடிக்கப்படாதவர்கள். உடலில் இருப்பினும் இறைவனோடு ஒன்றியிருப்பர். இவர்களுடைய வாக்கு இறைவன் வாக்காகவும் இவர்களுடைய செயல்கள் இறை அருட் செயல்களாகவுமே இருக்கும்.

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அவற்றுக்கு அப்பாலுள்ள ஸ்கந்த சாயுச்சிய நிலையைப் பெறுவதற்கு தனக்கு வழிகாட்டுமாறு அருணகிரியார் முருகப் பெருமானிடம் வேண்டுவதை

**"ஆறாறையும் நீத்ததன் மேல் நிலையைப்**
**பேறா அடியேன் பெறுமாறுளதோ"**

எனக் கந்தரநுபூதிப் பாடல் குறிப்பிடுகிறது.

முத்தி நிலையில் சிவபிரானது முழு அருளையும் சீவன் பெற்றுவிடும். முப்பத்தாறு தத்துவங்களும் தனக்கு வேறெனக் கண்டு நீங்கி ஆன்மா உண்மையை உணர்ந்து கொள்ளும். தனது கடமை இறைவனை நினைந்திருத்தலாகிய தவத்தைச் செய்தல் என்பதை உணர்ந்து அதன்படியே ஆன்மா செயற்படும். வினைகள் நீங்கி உண்மையான பக்தியில் ஈடுபட்டவர்கள் மேலான சிவானந்தத்தைப் பெற்ற மெய்யறிவுடைய ஞானிகளே ஆவார்.

**முத்தியில் அத்தன் முழுத்த அருள் பெற்றுத்**
**தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி**
**மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்**
**பத்தியிலுற்றோர் பரானந்த போதரே**

குருவருளால் ஆன்மா உண்மையை உணர்தல் சோதனை எனப்படும். காண்பவன், காட்சி, காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் அற்று இறைவனுடன் அத்துவிதமாய் நிற்கும் நிலையே "சும்மா இரு" என்று முருகப் பெருமான் அருணகிரியாருக்கு உபதேசித்த உயர்ந்த நிலை ஆகும்.

**"சும்மா இரு சொல்லற என்றலுமே**
**அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"**

எனக் கந்தரநுபூதிப் பாடல் இந்த உண்மையை விளக்குகிறது. எல்லாவிதமான மாயா சம்பந்தங்களையும் கடக்கச் செய்து அவற்றினின்றும் வேறுபடுத்திச் செயலற்று

***மனச்சாட்சியைத் துறந்தவனிடம் மதிக்கத் தக்கது வேறெதுவும் கிடையாது.***

இருக்கும்படி குருதேவராகிய நந்தியெம்பெருமான் தனக்கு அருளினார் என்பதை -

**"எம்மாயமும் விடுத்து என்னைக் கரந்திட்டுச்**

**சும்மா திருந்து இடம் சோதனை ஆகுமே"**

எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

குருவின் திருவருளால் சீவபோதம் அழிந்த பின் அகத்திலே சிவம் வந்து பொருந்தும்; சிவ மணம் கமழும். சீடனிடம் அஞ்ஞானம் அகன்று விட ஞானம் தோன்றும். சோதனை செய்யப்பட்ட சீடர்களிடம் இருந்து மும்மலங்களும் நீங்கிவிடும்.

காற்றினில் இருந்து பிரிக்க முடியாது காணப்படும் பரிசமும், கரும்புள்ளே கலந்திருக்கும் இனிப்புச் சுவையும், பழத்தோடு பொருந்தியிருக்கும் தித்திப்புச் சுவை தரும் சாறும், பூவை விட்டு விலகாது அதனோடு இரண்டறக் கலந்திருக்கும் மணமும் போலச் சீவர்களின் உயிரோடும் உணர்வோடும் ஒன்றாகக் கலந்திருக்கின்ற எம் இறைவன் அவ் உயிருக்கு காவலனாய் எங்கும் நிறைந்து விளங்குகிறான்.

**காலினில் ஊறும் கரும்பினில் கட்டியும்**

**பாலின்உள் நெய்யும் பழத்துள் இரதமும்**

**பூவின் உள் நாற்றமும் போல் உளன் எம் இறை**

**காவலன் எங்கும் கலந்து நின்றானே**

திருமந்திரத்தின் எட்டாம் தந்திரம் முழுவதும் சாத்திரப் பகுதியாய் அமைந்துள்ளது. உடம்பின் கூறுகளை விளக்கி உயிரின் இயல்பைத் தெளிவித்து முத்தி நெறியை இப்பகுதி விளக்குகிறது. தத்துவமசி என்ற உபநிடத மகாவாக்கியத்தின் பொருள் "அது நீ ஆகிறாய்" என்பதாகும். குரு உபதேசித்தருளிய தத்துவமசி வாக்கியத்தால் சீடன் "நான் அது ஆனேன்" எனப் பாவிக்க சீவன் சிவமாகும். சீவன் பரமாய்ச் சிவமாதலே தத்துவமசி என்பதன் பொருள் எனத் திருமந்திரம் கூறுகிறது. பொய்ப் பொருளின் மேல் மனம் செய்வதால் ஏற்படும் ஆசையே பிறவிக்கு வித்தாகும். இதனை நீக்குவதே ஞானிகளின் முக்கியமான கடமை ஆகும். பக்தியினால் வீடு பேறு கிட்டும். குருவின் உபதேசத்தால் அழியாத உடலைப் பெறலாம் என்ற உயர்ந்த தத்துவக் கருத்துக்களை எல்லாம் எட்டாம் தந்திரப் பாடல்கள் சிறப்பாக விளக்கி உள்ளதைக் காணலாம்.

---

***வறுமையிலும் நிறைவு காணும் ஏழையே மிகப்பெரிய செல்வனாவான்.***

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று

- பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள் -

எல்லோரும் தினமும் காலையிலும் மாலையிலும் பிற நேரங்களிலும் தாமிருக்கும் இடத்திலேயே கடவுளை நினைக்கவும் வணங்கவும் செய்கின்றனர். ஆயினும் காலையும் மாலையுமாவது ஒருநாளைக்கு ஒருமுறையேனும் ஆலயம் சென்று வழிபட வேண்டும். வாய்ப்பில்லாதவர்கள் வாரம் ஒருமுறை ஆலயம் சென்று வழிபடுவதை தவறாமல் செய்ய வேண்டும்.

நம் சைவசமய நூல்கள் தினந்தோறும் ஆலய வழிபாடு செய்ய வேண்டும் என்பதையும் வாரத்திலும் மாதத்திலும் வருடத்திலும் வரக்கூடிய விசேட புண்ணிய காலங்களில் ஆலய வழிபாட்டைத் தவறாது செய்ய வேண்டும் என்பதையும் மிக வலியுறுத்தியுள்ளன.

இப்படியான ஆலய வழிபாட்டின் நோக்கம் மூன்று வகையாக உள்ளது. எமக்கு இறைவன் அருளியுள்ள நன்மைகளுக்கு நன்றியுடையவராயிருப்பதையும் நம் ஆன்ம வளர்ச்சி - தெய்வீக அநுபவம் என்பனவும் முதலாவது வகை.

முதலாவது வகையிலுள்ள நோக்கங்களுக்காகவும் எம் துன்ப நீக்கம் - இன்பப் பேறு என்பவற்றுக்காகவும் புண்ணியநாட்களில் விரதமிருப்பதும் விசேடமாக வழிபடுவதும் இரண்டாவது வகை. இது நைமித்திக வழிபாடு எனப்படும்.

எமது துன்ப நீக்கம் இன்பப் பேறு என்பவற்றையே முழு நோக்கமாகக் கொண்டு ஆலய வழிபாடு செய்வது மூன்றாவது வகையாகும். இதனை காமிக வழிபாடு என்பர்.

இன்று நம் சைவப் பெருமக்கள் மத்தியில் தினவழிபாடு பெரும்பாலானவர்கள் விடயத்தில் இல்லாமல் இருப்பதையும் பெரும்பாலானவர்கள் தம் விருப்ப நிறைவேற்றத்தைக் குறித்தே ஆலய வழிபாடு செய்வதையும் கவனிக்கக் கூடியதாக உள்ளது. இது மிகவும் வேதனைக்குரிய நிலையாகும்.

மகா கும்பாபிஷேகமும் தினவழிபாடும் நிகழும் ஆலயங்களில் உள்ள தெய்வீக வெளிப்பாட்டை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற

எதை நாம் அறியவில்லையோ, அது நம்முடையதன்று.

புனிதமான நோக்கத்தின் அடிப்படையிலேயே தினமும் ஆலய வழிபாடு செய்ய வேண்டும் என்ற கோட்பாடு உண்டானது. வருடாந்தப் பெருந்திருவிழாக்கள் - கும்பாபிஷேகம் - இலட்சர்ச்சனை வழிபாடு என்பன நிகழும் போது தினந்தோறுமுள்ள தெய்வீக வெளிப்பாட்டுக்கு வித்தியாசமாக பெருமளவில் தெய்வீக சாந்நித்தியம் இருக்கும். இதனைப் பயன்படுத்தி குறைந்த நேரத்தில் நிறைந்த தெய்வீகத்தைப் பெற வேண்டும் என்பதற்காகவே நைமித்திக விசேடதின வழிபாடுகள் வற்புறுத்தப்பட்டுள்ளன.

இன்று நாம் சமய அறிவும் உயர்ந்த நோக்கங்களும் இல்லாதவர்களாய் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்து வாழ்வில் வெற்றி பெறுதல் ஒன்றே நோக்கமாகக் கொண்டு வாழ்வதும் வழிபடுவதும் என்ற தன்மையில் உள்ளோம். இதுமட்டுமன்றி ஆலய வழிபாட்டுக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் நேரமில்லாத நெருக்கடி வாழ்வில் உள்ளோம். இந்த உண்மை நமக்கு உணர்த்தும் பரம இரகசியம் ஒன்று உண்டு. அது என்னவென்றால் கடவுள் நம்பிக்கை கடவுள் அருளால் நன்மையடைதல் - ஆன்மீக வளர்ச்சி என்பவற்றிலும் பார்க்க நாம் உலக நிகழ்வுகளில் தான் அதிக குறிக்கோளும் விருப்பமும் உடையவர்கள் என்பதேயாகும். இந்த இரகசியம் கௌரவம் இல்லாத ஒன்றாயினும் உண்மையேயாகும். உடம்பிலும் பார்க்க உயிரும் உயிருக்கு உறுதி தருவது தெய்வமும் என்ற கோட்பாடு ஆழமானதாக இருந்தால் ஆலய வழிபாட்டிற்கும் ஆன்ம வளர்ச்சி - தெய்வ அநுபவம் என்பவற்றுக்காக நேரத்தைப் பயன்படுத்த கடவுள் துணையை நாட நேரமும் செயற்பாடும் இயல்பாகவே அமையும்.

ஒரு எதிரியின் பகை உணர்வைப் போக்குவதிலும் பார்க்க ஒரு நண்பனின் அன்புணர்வைப் பேணுவது அவசியம். எங்கள் உயிர்க்கு உயிராக உள்ள உயிர நண்பனாகிய இறைவனை உணர்வதும் அவ்விறையருளை ஆதாரபூர்வமாக மீண்டும் மீண்டும் பெற்று மேன்மை அடைய உதவும் ஆலய வழிபாட்டில் அதிகம் ஈடுபடுதல் அவசியம்.

ஆலய வழிபாட்டின் அருமைப்பாடும் அவசியமும் பற்றி அறியாத பலர் தாம் கோவிலுக்குச் செல்லாமல் இருப்பதை நியாயப்படுத்த ஆசௌசம் எனப்படும் துடக்கை ஆவலுடன் பேணுகின்றார்கள். பலர் தமக்கு உரிமையில்லாத ஆசௌசங்களையும் பேணுகின்றார்கள். இவையெல்லாம் புண்ணியக் குறைவு - அறியாமை என்பவற்றின் அடையாளங்களேயாகும். புண்ணியம் புண்ணியத்தைத் தரும் என்றபடி ஆலய வழிபாடு ஆலய வழிபாட்டையும் அதுதொடர்பான பல நலன்களையும் தரும்.

*சரியான நேரத்தைத் தேர்ந்தெடுப்பது நேரத்தை மிச்சப்படுத்தும்.*



# திருவிளையாடல்

## வளையல் விற்ற படலம்

**- ஆறுமுகநாவலர் -** **படலம் - 32**

சிவபெருமான், தேவதாரு வனத்துள்ள இருடியர்களது மனைவியரின் கற்பினை அளந்து காட்டும் பொருட்டு திருவுளம் கொண்டு கௌபீனமும், திருநீற்றுப்பூச்சும், கீதம் பாடும் கனிவாயில் திருப்புன்முறுவலும் கொண்டு, கிண்கிணி பொருந்திய திருவடிகளிற் பாதுகைகளுடன், பிட்ஷா பாத்திரமும் - உடுக்கை ஏந்திய திருக்கைகளும் உடைய அழகிய பிட்ஷாடன வடிவம் உடையராகி தேவதாரு வனத்துக்கு எழுந்தருளினார். அவரது திருச்சிலம்பொலியும் கீதவொலியும் கேட்டு இருடிபத்தினிகள் விரைந்து பிட்ஷை கொண்டு வீட்டின் முன் வந்தார்கள். வந்தவர்கள் பிட்ஷாடன மூர்த்தியின் பேரழகைக் கண்டு எல்லையின்றி வளர்ந்த காமத்தால் விழுங்கப்பட்டு, கூந்தல் சோர, புடவையவிழ, வளையல் கழர பசலைகளாகி நின்றார்கள். சிவபெருமான் இவர்களை இவ்வாறு மோகித்து, பிதற்றித்திரியும் இருடியர்களின் செயலை உலகத்தார்க்கு உணர்த்தி மறைந்தருளினார்.

இருடிகள், தங்கள் மனைவியர்கள் நிற்கும் நிலைகண்டு, அவர்களுடைய கற்பைக் களைந்து கொண்டு போனவர் மதுரை சோமசுந்தரக் கடவுள் எனத் தெளிந்து அவர்களை நோக்கி, "நீங்கள் கற்புநெறி தவறியமையால் மதுரை நகரத்து வைசியப்பெண்களாகப் பிறக்கக் கடவீர்கள்" என்று சபித்தார்கள். அதற்கு அப்பெண்கள், "எங்களுக்கு இந்த சாபம் நீங்குவது எப்போது?" என்று வினாவ, "அம் மதுரை நகரத்துக்கு அரசராகிய சோமசுந்தரக்கடவுள் வந்து உங்களைக் கைதீண்டும் போது இச்சாபம் நீங்கும்" என்றார்கள்.

இருடியர் பெண்கள் மதுரைத்திருநகரிலே வைசியப் பெண்களாகப் பிறந்து வளர்ந்து பருவமடைந்திருந்த வேளை, சிவபெருமான் வளையல் விற்கும் வணிகர் வேடங்கொண்டு வைசிய வீதிக்கு வளையல் விலை கூறிக்கொண்டு எழுந்தருளி வந்தார். வைசியப்பெண்களெல்லாம் வீதிக்கு வந்து, அவ்வணிகரது பேரழகைக் கண்டு காமத்தினால் மயங்கி அவரைச் சூழ்ந்து, தங்கள் கைகளை நீட்டி வளையல் இடுவித்தார்கள். வளையல் இட்டபின் மறைந்தருளி அப்பெண்களும் பிறருங்காண திருக்கோயிலின் உள்ளே திருவுருவாய்த் தோன்றியருளினார். அதுகண்ட நகரத்தார் எல்லோரும் வளையல் விற்ற வணிகர் சோமசுந்தரக் கடவுளே என வியந்து கண்ணீர் பொழிந்து மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள். சிவபெருமான் தன் திருக்கையினாலே தொட்டு வளையல்

*உடல் அமைதிபெற மனதை அமைதியாக வைத்துக்கொள்.*

இட்டமையினாலே அவ் வைசியப் பெண்களெல்லாம் கருக்கொண்டு அளவில் லாத புதல்வர்களைப் பெற்றார்கள். அப்புதல்வர்கள் நிறைந்த வலிமையும் வீரமும் பெருமையும் பெற்று வாழ்ந்தார்கள். வைசியப்பெண்கள் சிவபெருமானுடைய அருளைப் பெற்று சிலகாலம் வாழ்ந்திருந்து சிவலோகத்தை அடைந்தார்கள்.

## அட்டமாசித்தி உபதேசித்த படலம் — படலம் - 33

சிவபெருமான், திருக்கைலாச மலையிலே ஆலமரநிழலிலே, உமாதேவியாரைத் தன் திருத்தொடைமீதிருத்தி போக குருவாய் வீற்றிருந்துகொண்டு நந்தி, பிடுங்கி, மகாகாளர் முதலான கணங்களுக்கும் சனகர் முதலான நான்கு முனிவர்களுக்கும் சிவதர்மங் களை உபதேசித்தருள்வாராயினார். அப்பொழுது, முருகக் கடவுளுக்குப் பால் கொடுத்த இயக்கப்பெண்கள் அறுவரும் வீபூதி ருத்திராட்சம் தரித்து வந்து சிவபெருமானை வணங்கி, “எம்பெருமானே! அடியேம்களுக்கு அட்டமாசித்திகளை உபதேசித்தருளும்” என்று விண்ணப்பம் செய்தார்கள். அப்பொழுது சிவபெருமான் தன் மடியில் எழுந்தருளி யிருக்கும் உமாதேவியாரைத் தன் திருக்கரத்தினாலே சுட்டிக்காட்டி, “இப்பார்வதி எங்கும் நிறைந்த பராசக்தியாவாள். இவளை நீங்கள் சிந்தித்தீர்களாயின் இவள் உங் களுக்கு அட்டமாசித்திகளையும் தருவாள்” என்று திருவாய் மலர்ந்து, எட்டுச் சித்தி களையும் அவ்வியக்கிமார் அறுவருக்கும் உபதேசித்தருளினார். அவர்கள் முன்னைய ஊழ்வினையின் காரணமாக அதனை மறந்தார்கள். சிவபெருமான் அக்குற்றம் நோக்கி அவர்களைக் கோபித்து, “நீங்கள் “பட்டமங்கை” என்னும் தலத்தில் ஆலமரத்தடியில் கருங்கல்லாய் கிடக்கக் கடவீர்கள்” என்று சபித்தருளினார். இயக்கிமார்கள் மனந்தளர்ந்து, “எம்பெருமானே! இச்சாபம் எப்போது நீங்கும்” என்றார்கள். சிவபெருமான், “நீங்கள் கருங்கல்லாய் இருக்க, ஆயிரம் வருடங்களின் பின்னர் நாம் மதுரையினின்றும் எழுந்தருளி வந்து உங்கள் சாபத்தைப் போக்கி பழைய உருவத்தைத் தந்து எட்டுச் சித்திகளையும் உபதேசித்தருளுவோம். போங்கள்” என்று திருவாய் மலந்தருளினார்.

இயக்கிமார்கள் அறுவரும், பட்டமங்கையிலுள்ள ஆலமரத்தடியிலே கருங்கல்லாய்க் கிடந்தார்கள். ஆயிரம் வருடங்கள் சென்றபின், சோமசுந்தரக்கடவுள் ஓர் ஆசாரிய வடிவங் கொண்டு எழுந்தருளி வந்து அக்கருங்கற்களின் மீது திருநோக்கஞ் செய்தருளினார். உடனே இயக்கிமார்கள் அறுவரும் கருங்கல் வடிவம் நீங்கி முன்னை வடிவங்கொண்டு எழுந்து வந்து அவ்வாசாரியரை வணங்கினார்கள். ஆசாரியார் அவர்கள் சிரசுமீது தன்திருக்கையை வைத்து எட்டுச்சித்திகளையும் உபதேசித்தருளினார். **அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்** என்பனவே இந்த எட்டுச் சித்திகளுமாம்.

இதனைக்கேட்ட இயக்கிமார்கள், உமாதேவியாரைத் தியானிக்குந் தியான பலத்தி னாலே அச்சித்திகளை நன்கு பயின்று, ஆகாயவழிக்கொண்டு சென்று, திருக்கைலாய மலையை அடைந்தார்கள்.

***பேராசை முடிகிற இடத்தில் சந்தோஷம் தொடங்குகிறது.***

அண்மையில் இடிந்து விழ்ந்தமை தூர்க்குறியாகுமா?

# திருக்காளத்தியப்பர் கோவில் கோபுரம்

- அச்சுநகர் ல.கவிதா அவர்கள் -

பாடல் பெற்ற திருத்தலமான காளத்தியப்பர் திருக்கோவிலின் (காளஹஸ்தி) இராஜகோபுரம் கடந்த 26.05.2010 புதன்கிழமை நள்ளிரவு பெரும் ஓசையுடன் இடிந்து வீழ்ந்தமை அகில உலக இந்துக்களிடையே ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நாயக்க மன்னரின் ஆட்சிக் காலத்தில136 அடி உயரமான இராஜகோபுரமாக இது அமைக்கப்பட்டது. அண்மைக் காலங்களில் கோபுரத்தில் ஏற்பட்ட சிறு வெடிப்பே கோபுரம் இடிந்து வீழும் அளவிற்குப் பெரும் வெடிப்பாக மாறியது.

இராகு கேது பரிகாரத் தலமாக இக்கோவில் விளங்குவதனால் இராகு கேது திசை மற்றும் புத்தி நடப்பவர்களுக்கு இந்நிகழ்வால் பாதிப்பு ஏற்படலாம் என்றும் இத்தகையவர்கள் இராகு கேதுவிற்கு நெய் விளக்கேற்றி வழிபாடு செய்ய வேண்டும் என்றும் தமிழகத்தின் பிரபல ஜோதிடர்கள் குறிப்பிடுகின்றனர். இந் நிலையில் காளத்தித் திருத்தலத்தின் சிறப்புக்கள் பற்றியும் கோபுரம் சரிந்து



வீழ்ந்தமைக்கான காரணங்கள் பற்றியும் சில தகவல்களைப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்..

## ஆலய அமைவிடம்


ஸ்ரீ காளத்தித் திருக்கோவில் இந்தியாவின் ஆந்திர பிரதேச மாநிலத்தில் சித்தூர் மாவட்டத்தில் காளஹஸ்தி என்ற ஊரில் பொன்முகலி ஆற்றங்கரையில் மலை மீது அமைந்துள்ளது. சீகாளத்தி என்றும் இக்கோவில் குறிப்பிடப்படுகின்றது.

---

*தன்னைச் சரிப்படுத்திக்கொள்பவனே, உலகைச் சரிப்படுத்த தகுதியானவன்.*

மூலவராக இருந்து அருள் பாலிக்கும் இறைவர் காளத்தியப்பர். இறைவி ஞானப் பூங்கோதை (ஞானப் பிரசுனாம்பிகை, ஞானசுந்தரி எனவும் அழைக்கின்றனர்). தல விருட்சம் வில்வமரம். 3000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இக்கோவில் மீது தேவார முதலிகள் மூவரும் (சம்பந்தர், அப்பர், சுந்தரர்) தம் திருப்பாடல்களைப் பாடியுள்ளனர். அதுமட்டுமல்லாது இங்கிருந்தவாறு ஏனைய வடநாட்டுத் தலங்களையும் பாடியுள்ளனர். சுந்தரர் சீபர்ப்பதம் என்ற பதிகத்தைப் பாடியது இங்கிருந்துதான் என்பது உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர்கள் அறிய வேண்டிய செய்தி.

பஞ்ச பூதத் தலங்களில் இது வாயுத்தலம் எனப் போற்றப்படுகின்றது. இதைக் குறிக்கும் முகமாக மூலஸ்தானத்தில் அமைந்துள்ள விளக்கு காற்றில் ஆடிக் கொண்டே சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது. இங்கு காளத்திநாதர் சுயம்பு மூர்த்தி (தானாகவே தோன்றியவர்) காணப்படுகின்றார்.




## ஆலயத்தின் பெருமைகள்

முன்பொரு காலத்தில் ஆதிசேஷனுக்கும் வாயு தேவனுக்கும் இடையே ஒரு போட்டி ஏற்பட்டது. தம்மில் யார் பெரியவர் என்பதே அப்போட்டியாகும். ஆதிசேஷன் வாயு தேவனிடம் சொன்னான். "வாயு தேவனே! நான் கயிலாய மலையை என்னுடைய உடம்பால் சுற்றி, இறுக்கி மூடிக்கொள்வேன்.. நீ உன்னுடைய பலத்தால் மலைச்சிகரங்களைப் பெயர்த்தெறிந்தால் நீ பெரியவன் என்பதை ஒப்புக்கொள்வேன்."

போட்டி ஆரம்பமானது. ஆதிசேஷன் தன் உடம்பாலும் வாலாலும் கயிலை மலையை இறுக்கி மூடி, மலையே தெரியாதபடி மறைத்தார். வாயு தேவன் பலங்கொண்ட மட்டும் காற்றை வீசி அசைத்துப் பார்த்தார். ஒரு

கட்டத்தில் கயிலை மலை மூன்று துண்டங்களாகப் பிரிந்து தெற்கே வந்து விழுந்தது. அதில் ஒரு சிகரம்தான் காளத்திமலை என்பது புராணங்கள் சொல்லும் சேதி. இதனால் தென்கைலாயம் (தட்சண கைலாயம்) என்ற சிறப்பும் இத்தலத்திற்கு உண்டு.

கண்ணப்பநாயனார் இத்தலத்திலேயே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். எப்போதும் இறைவனுடைய வலப்பக்கத்தில் நிற்கும் பேற்றை அடைந்தார். சிலந்தி, யானை, பாம்பு ஆகிய மூன்றும் வழிபட்டுப் பேறு பெற்ற திருத்தலம் என்ற சிறப்பும் இதற்கு உண்டு. நக்கீரர் இங்கு வந்து தொழுது வெப்பு நோய் நீங்கப் பெற்றார். இதனால் கயிலைபாதி காளத்திபாதி என்ற நூலைப் பாடினார். அருச்சுனன் தீர்த்த யாத்திரையின் போது காளத்தியப்பரை வணங்கியிருக்கிறான்.



136 அடி உயரமுடையதாக ஸ்ரீ கிருஷ்ண தேவராயரால் கி.பி. 1516 ஆம் ஆண்டில் கோபுரம் கட்டப்பட்டது. பிரதான கோபுரம் தவிர ஏனைய கோபுரங்களும் ஆலயத்தில் உண்டு. ராகு கேது தோஷ நிவாரணத்தலம் என்ற பெருமை காணப்படுவதால் நாள்தோறும் இக்கோவிலை நாடும் அடியவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகம்.

கண்ணப்பர் வாயைக் கலசமாகக் கொண்டு பொன்முகலி ஆற்று நீரை வாயில் மொண்டு கொண்டு சென்று இறைவனுக்கு அபிஷேகித்தார். இதனால் பக்தர்களுக்கு விபூதி வழங்கப்படுவதில்லை. மாறாக பச்சைக் கற்பூரத்தை அரைத்துத் தீர்த்தத்தில் கலந்து அதையே பிரசாதமாகக் கொடுக்கின்றார்கள். (திருநீற்றுப் பொட்டலம் வாங்கிக் கொடுத்தால் அதைச் சுவாமி பாதத்தில் வைத்

இடிந்து வீழ்ந்த கோபுரத்தின் ஒரு பகுதி



சோம்பேறித்தனம் மெல்லவரும்போது வறுமை ஓடி வரும்.

துக் கொடுக்கிறார்கள்) மூல வருக்குப் பச்சைக் கற்பூர நீராலே அபிஷேகம் செய்கின்றார்கள். இராகு கேது தலம் என்பதால் கோயிலை எதிர்வலமாக (இடஞ்சுழியாகச்) சுற்றி வரும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றார்கள். இறைவன் மேற்கு நோக்கியே காணப்படுகின்றார். பொன்முகலி ஆற்றில் நீராடிவிட்டுக் கிழக்கு நோக்கிப் பார்த்துக் கும்பிட வசதியாக இறைவனாரும் மேற்குத் திசையைப் பார்த்தபடி இருக்கின்றார்.

இந்த ஆலய வரலாற்றுடன் தொடர்புடைய விதத்தில் இலிங்கத்தின் அடிப் பாகத்தில் (ஆவுடையார்) சிலந்தி வடிவத்தையும் நடுவில் யானையின் இரு தந் தங்களையும் மேற்புறத்தில் - உச்சியில் ஐந்து தலைப் பாம்பின் படம்எடுத்த வடி வத்தையும் வலப்புறத்தில் கண்ணப்பர் பெயர்த்து அப்பிய கண்ணின் ஒரு வடுவையும் அழகுற அமைத்துள்ளனர்.

இத்தலம் கிரகதோஷம் நீக்கும் தலம் என்பதால் நவக்கிரக சந்நிதி இல்லை. சனீஸ்வரனுக்கு மாத்திரம் சந்நிதி வைத்துள்ளார்கள்.

## கோபுரத்தில் ஏற்பட்ட வெடிப்பு

1988 ஆம் ஆண்டிலேயே கோயிலின் கோபுரத்தில் சிறு வெடிப்பு இருப்பது அவதானிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அப்போது அதைச் சரியான முறையில் சீர்செய்ய வில்லை. ஆற்றை ஒட்டிக் கோயில் அமைந்திருப்பதால் மண் நெகிழ்ச்சித்தன்மை அடைந்து வருகின்றது. இதனால் கோபுரத்தில் வெடிப்பு ஏற்பட்டது என்கின்றனர். பூமிப்படையில் ஏற்படுகின்ற மாற்றங்களின் தாக்கத்தாலேயே கோபுரத்தில் வெடிப்பு ஏற்பட்டது எனவும் வாதிக்கின்றனர். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு கல்லின் மீது மறு கல்லை அடுக்கி மலை ஒன்றை உருவாக்குவதுபோலத்தான் இக்கோபுரத்தை யும் அமைத்திருந்தனர். கோபுரத்தில் வெடிப்பு விழுந்த சமயத்திலேயே அத்தி வாரத்திற்கு பலமான பாதுகாப்பு வழங்கியிருந்தால் மேலும் விரிசல் ஏற்பட்டிருக்காது. இதற்கும் தெய்வக் குற்றத்துக்கும் தொடர்பு இல்லை என வாதிப்போரும் உள்ளனர்.

கோபுரம் இடிந்து விழப்போகிறது என்ற முன்னெச்சரிக்கையை அடுத்து அரு கில் இருந்த கடைகள் யாவும் அகற்றப்பட்டு மக்கள் நடமாட்டத்திற்குத் தடையும் விதிக்கப்பட்டது. இதனால் கோபுரம் இடிந்து வீழ்ந்தபோது மக்கள் எவருக்கும் நேரடிப் பாதிப்பு ஏற்படவில்லை. நூற்றுக்கு மேற்பட்ட குரங்குகள் கொல்லபட்டுள்ளன. கோபுரம் வெடித்து விழும் ஓசை இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்குக் கேட்டது என்றால் கோபுரத்தின் அளவைக் கற்பனை செய்து பாருங்களேன்.

---

*நம் இன்பங்கள் அழுவில்லாதவை. துன்பங்கள் அழுமுடையவை.*

உ



# வருடாந்த வைகாசிப் பெருவிழா நிகழ்வு 2010

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடாத்தப்பட்டு வரும் வைகாசிப் பெருவிழாவானது 21.05.2010 வெள்ளிக்கிழமை அன்று அன்பர்களின் அனுசரணையுடன் வழமைபோல் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வானது ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகியது. இந்நிகழ்வுகளின் வரிசையில் வைத்திய கலாநிதியும் பேரவையினால் ஞான பண்டித சேவா சுரபி என்ற விருதினைப்பெற்ற சி. கதிரைவேற்பிள்ளை அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து இளைப் பாறிய ஆசிரியர் ஐ. சண்முகலிங்கமும் அவர்தம் மாணவர்களின் கவியரங்கமும் இடம்பெற்றது.


அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூகப் பணிகளின் வரிசையில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன் விழா இனிதாக நிறைவுற்றது.

## வைகாசிப் பெருவிழாவிற்கு அனுசரணை நல்கிய அன்பர்கள்

| | | |
|---|---|---|
| திரு. ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் | கரணவாய் | 2,000.00 |
| செ. நவரெத்தினராசா | குப்பிளான் | 5,000.00 |
| ஜெகதீஸ்வரன் தர்மவதனி | லண்டன் | 10,000.00 |
| Dr. சி. இராசலிங்கம் | தோப்பு, அச்சுவேலி | 1,000.00 |
| ந. இந்திரகுமார் | இளை. வங்கி ஊழியர் | 1,000.00 |

உயிருக்கு அறிவைத் தருவது திருவருள்.

| | | |
|---|---|---|
| V. அரியராசா | தொண்டைமானாறு | 1,000.00 |
| S.சுந்தரலிங்கம் (செல்வம்ஸ்) | சிவலிங்கப்புளியடி, யாழ். | 2,000.00 |
| வ. இராசையா | கேணியடி, திருநெல்வேலி | 2,000.00 |
| த. கணேசமூர்த்தி இளநிலை அதிகாரி, | இ.வங்கி. யாழ். | 2,000.00 |
| இ. இராசநாயகம் துர்க்கா மரக்காலை, | சண்டிலிப்பாய் | 1,000.00 |
| வை. துரைராசா | ஒஸ்காவீதி, உரும்பிராய் | 2,000.00 |
| கா. பரமானந்தம் காசிப்பிள்ளை அன் சன்ஸ் | சங்கானை | 1,000.00 |
| லிங்கம் கூல்பார் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 2,000.00 |
| மகாராணி புடவையகம் | பெரியகடை, யாழ்ப்பாணம் | 1,000.00 |
| மா. சிவஞானசுந்தரம் இளை. நில அளவையாளர், | இடைக்காடு | 2,000.00 |
| ம. ஸ்ரீகாந்தன் | அச்சுவேலி தெற்கு | 5,000.00 |
| த. சிவகுருநாதன் | துவாரகா வெதுப்பகம், நவிண்டில் | 2,500.00 |
| Dr. E. கனகரெத்தினம் | கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை | 1,000.00 |
| சுந்தர்சன்ஸ் | பிரதான வீதி, மானிப்பாய் | 3,000.00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் இளை. அதிபர் | மயிலியதனை தொண்டைமானாறு | 2,000.00 |
| பாக்கியரெட்ணம் ஹார்ட்வெயர் | பிரதானவீதி , சங்கானை | 2,500.00 |
| க. சொர்ணவடிவேல் கதிர்காமசிங்கம் அன்சன்ஸ், | அளவெட்டி | 1,000.00 |
| வ. ஆறுமுகம் இளை. அதிபர் | சிவன் வீதி, ஆவரங்கால் | 2,000.00 |
| M.S.K. மகேஸ்வரன் | சாயி இல்லம், தாவடி | 2,000.00 |
| சி. சரவணப்பெருமாள் | மாணிக்கவளவு, கரணவாய் தெற்கு | 1,000.00 |
| க. செல்வரெத்தினம் J.P. | அச்சுவேலி | 1,000.00 |
| S.S. இராமச்சந்திரன் | மாலி சந்தி, அல்வாய் | 1,500.00 |



**வைகாசிப் பெருவிழா நிகழ்வில் மாணவி ஒருவருக்கு சைக்கிள் ஒன்று வழங்கும் நிகழ்வு.....**

உ

# அருட்கவி. சீ. விநாசித்தம்பி புலவரது
# கண்ணன் வந்த வண்ணம் நூலிலிருந்து....

- செல்வி தி. வரதவாணி அவர்கள் -

ஒருமுறை கிருஷ்ணரும் பலராமரும் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். தெருவில் பழம் விற்கும் வியாபாரி "பழம் பழம்" என்று கூவிக்கொண்டு செல்வது இவர்களுக்குக் கேட்டது. பழங்களை வாங்க விருப்பம் கொண்ட கிருஷ்ணன். கையில் காசு எதுவும் இல்லாமையால் வீட்டின் ஒரு பக்கத்திலிருந்த தானியக் குவியல்களில் தம் பிஞ்சுக்கைகளால் கை நிறைய எடுத்துக் கொண்டு ஓடினான். முக்கால் பங்கு தானியங்கள் நிலத்திலே சிந்தியவண்ணம் தன்னை நோக்கி ஓடி வரும் குழந்தை கிருஷ்ணரைப் பார்த்த பழ வியாபாரிக்கு கிருஷ்ணர் மீது கருணை ஏற்பட்டது. குழந்தாய் உமக்குத் தேவையான பழங்களை நீர் கொண்டு வந்த தானியத்தை இக்கூடையில் இட்டு விட்டு எடுத்துச் செல்லும் எனக் கூறினான். அவ்வாறே பக்கத்தில் இருந்த கூடையில்த்தான் கொண்டு வந்த தானி யத்தை இட்டுவிட்டு கைகள் நிறைய பழங்களை எடுத்துக்கொண்டு கிருஷ்ணன் ஓடலானர். இச் செய்கையைப் பார்த்து ரசித்து சிரித்து விட்டு வியாபாரி வீடு சென்று தானியம் இடப்பட்ட கூடையைத் திறந்து பார்த்தால் அத்தானியங்கள் தங்கமாகவும், ரத்தினங்களாகவும், வைரங்களாகவும், மரகதமாகவும் மாறி இருந்தன. இதைக் கண்டு வியாபாரி அதிர்ச்சியும் பூரிப்பும் அடைந்து கிருஷ்ணலீலையை எண்ணி வியந்தார்.

இது இவ்வாறு இருக்க கோகுலத்தில் கண்ணனைக் கொல்ல கம்சன் முயற்சிக்கும் முயற்சிக்கு அளவே இல்லை. அடிக்கடி அசுரர் பலரையும் அனுப்பினான். இதனை இட்டு யோசித்த நந்தகோபர் யாதவர்கள் முதியவரான உபநந்தரின் ஆலோசனைக்கு இணங்க பிருந்தாவனம் செல்லத் திட்டமிட்டனர்.

பிருந்தாவனம் செல்கையில் சிறியவனான கிருஷ்ணன் சற்று வளர்ந்து பசுக் கன்றுகளை மேய்க்கின்ற பருவம் எய்தினான். அண்ணன் பலராமனுடன் கன்று மேய்க்கச் செல்வது வழக்கமாயிற்று. ஒரு தினம் யமுனைக் கரையில் கிருஷ்ணன் பலராமன், ஏனைய சிறுவர்களுடன் கன்றுகள் மேய்த்துக்கொண்டு இருக்கையில் கிருஷ்ணரைக் கொல்வதற்கு வத்சாசுரன் என்ற அசுரன் கன்று உருவம் கொண்டான். மற்றக் கன்றுகளுடன் தானும் இணைந்து கொண்டான். ஆயினும் கிருஷ்ணரது

உலகப்பற்று காரணமாக ஞானம் மயங்கிவிடுகிறது.

ஞானப் பார்வையில் இருந்து தப்பமுடிய வில்லை. பலராமனுடன் சேர்ந்து கன்றாக வந்த அரக்கனின் பின்னங்கால்களைப் பற்றி சுற்று சுற்று எனச் சுற்றி ஓங்கி ஓர் பெரிய விளாமரத்தின் மீது அடித்தான். அடிபட்ட அசுரன் சுயஉருவம் பெற்று அல றியபடி உயிர் நீத்தான். அவன் சுய உருவைக் கண்ட ஏனைய சிறுவர்கள் அலறிய வண்ணம் ஓட்டம் பிடித்தார்கள்.

*"கன்றான வரக்கனை விளவுக் கெறிந்தான்*
*கருநாரை வடிவான பகனைப் பிளந்தான்*
*நின்றாடும் பாம்புருவ அகாசுரன் தன்னை*
*நெடுமாயன் வதை செய்து புகழ்மாலை கொண்டான்"*

இன்னொருநாள் கன்றுகளை நீர் ஏரியில் தண்ணீர் குடிக்க கிருஷ்ணரும் பலராமனும் அவர்கள் தோழர்களும் அழைத் துச் சென்றனர். அவைகள் குடித்த பின் னர் தாமும் நீர் அருந்திவிட்டு ஏரியில் இருந்து மேலேறிக் கரைக்கு வந்தனர். அங்கே ஓர் பயங்கரமான கொக்கு ஒன்று நின்றது. கிருஷ்ணரைப் பார்த்ததும் ஓடிச் சென்று விழுங்கிவிட்டது. இதைக் கண்டு ஏனையோர் நினைவு இழந்துவிட்டனர். ஆனால் கிருஷ்ணரோ நெருப்புப் பந்த மாக மாறி விழுங்கிய கொக்கின் தொண் டையை எரிக்க ஆரம்பித்தார். வேதனை பொறுக்கமுடியாமல் அக்கொக்கு கிருஷ் ணரை உமிழ்ந்துவிட்டது. பின்னர் தன் கூரிய அலகுகளால் கொத்தியது. கிருஷ் ணர் தன் இரு கைகளால் அதன் அலகு கள் இரண்டையும் பிளக்கும் வண்ணம் வாயைக் கிழித்தார். உடனே அக்கொடிய கொக்கானது தனது இயல்பான அசுரவடி வைப் பெற்றது. அப்பொழுது தான் தெரிந் தது கம்சனால் கிருஷ்ணரைக் கொல்ல அனுப்பப்பட்ட பகாசுரன் என்னும் அசுரனே அக்கொடிய கொக்கு.

(தொடர்ந்து வரும்)

# ஆடிமாத குருபூசை தினங்கள்

*22.07.2010 ஆடி 6 வியாழன் – கலியர், கோட்புலியர் குருபூசை*
*04.08.2010 ஆடி 19 புதன் – மூர்த்தியர் புகழ்ச்சோழர் குருபூசை*
*07.08.2010 ஆடி 22 சனி – கூற்றுவர் குருபூசை*
*15.08.2010 ஆடி 30 ஞாயிறு – பெருமிழலைக் குறும்பர் குருபூசை*
*16.08.2010 ஆடி 31 திங்கள் – சுந்தரமூர்த்தி, சேரமான் பெருமான் குருபூசை*

**ஒருவன் தன்னைத்தானே காக்கவேண்டுமானால் சினத்தினைக் காக்க வேண்டும்.**

உ

# கற்புக்கரசி

- S.Sறஜீந்திரன் அவர்கள் -

கற்புக்கரசிகள் வரிசை கண்ணகி, சீதை, நளாயினி என்று நீண்டு கொண்டே செல்லும். ஒவ்வொரு காவியத்திலும் புராணக்கதைகளிலும் ஒவ்வொரு கற்புக்கரசியின் சரிதம் அவர்களின் சிறப்புப்பற்றியும் மிக விரிவாகக் கூறப்படுகிறது. அந்த வகையில்,

சிலப்பதிகாரம் என்றால் கற்புக்கரசி கண்ணகி பற்றியது என்பது யாவரும் அறிந்ததே. அதுபோல் இராமாயணம் என்றால் கற்புக்கரசி சீதை என்றாகும். ஆனால் இராமாயணத்தில் மிகவும் சிறப்பிக்கப்படாத மற்றுமொரு உயர்ந்த சிறந்த கற்புக்கரசி ஊர்மிளையாவாள். பல நூல்களில் சீதாபிராட்டியாரைப் பற்றித் திறம்படக் கூறி யிருக்கின்றார்களே தவிர ஊர்மிளையைப் பற்றி ஒரு சிறு பகுதி மட்டுமே எடுத்துக் கூறப்படுகிறது. அது கூட காவியத்தின் துணைக்கதைகளிலேயே காட்டப்பட்டுள்ளன.

இராமபிரான் ஏன் காட்டிற்குச் சென்றார், தந்தையின் உத்தரவு. தந்தை ஏன் அவ்வாறு உத்தரவிட்டார், கைகேயி கேட்ட வரத்தினால். கைகேயி ஏன் அவ்வாறு கேட்டார், பரதனை முடிசூட்டுவதற்கு கூனி செய்த சதி. இவைகள் தான் இராமன் காட்டிற்குச் செல்லவேண்டிய முதற்காரணங்கள் ஆயிற்று.

இராமபிரான் காட்டிற்குச் செல்லும்போது சீதையிடம் கூறினான், "நீ அரச மாளிகையில் தங்கியிரு. யாம் 14 வருடங்கள் வனவாசம் நிறைவு செய்தபின் உம் மோடு இணைவோம்" என்று. அதற்கு விடை பகர்ந்த சீதாபிராட்டியார் "என்னை மன்னிக்க வேண்டும் நாதா" ஏனெனில், "முதலும் இறுதியுமாக எனது கணவனின் வார்த்தைகளுக்கு மறுவார்த்தை பேசுவதற்கு" என்று கூறித் தொடர்ந்தார்.

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்கக்கூடாது.

ஒரு பெண்ணானவளுக்கு திருமணம் நடைபெறும்வரை அவள் தனது தாய் தந்தையருக்கு சிறந்த மகளாக நடக்கவேண்டும். மணம் கண்டவுடன் அவள் தனது கணவனுக்கு சிறந்த மனைவியாக நடக்க வேண்டும். அவ்வாறு செய்வதே ஒரு புண்ணிய ஸ்திரியின் கடமையாகும். அந்த வகையில் யாமும் தங்களுக்கு சிறந்த மனைவியாக இருந்து எனது தாய் தந்தையருக்கு, எனது குலத்திற்கு, எமது நாட்டிற்கு, பெண்குலத்திற்கு பெருமை சேர்க்க வேண்டாமா என்ற கேள்வியைக் கேட்டு மேலும் தொடர்ந்தாள்.

"மணமுடித்த பெண்ணுக்கு கணவன் இருக்கும் இடமே சொர்க்கம். கணவன் மனம் சிறிதும் புண்படாமல் அவனுக்கு சேவை செய்வதே அவளின் கடமை. அவ் வாறில்லாமல் நீங்கள் காட்டில் துன்பத்தை அனுபவிக்கும் போது நான் இங்கு அரண்மனையில் சுகபோகங்களை அனுபவிப்பதா? ஆகவே என்னைத் தங்களுடன் காட்டிற்கு வருவதைத் தடுத்து நானும், என்னைச் சார்ந்த எமது பெண்குலமும் இழிவுபடுவதற்கு காரணமாக இருந்து விடாதீர்கள்" என்று கூறியே இராமருடன் காட்டிற்குச் சென்றார் பதிவிரதை சீதாபிராட்டியார்.

இராமபிரானுடன் காட்டிற்குச் சென்றவர்களில் இலக்குவனும் ஒருவன். அவன் ஏன் காட்டிற்குச் சென்றான்? தனது கடவுளான தமையனுக்கு பணி செய்வதற்குச் சென்றான். இராமபிரானின் மூன்று தம்பிமார்களாகிய பரதன், இலக்குவன், சத்துருக்கன் இவர்கள் மூவருமே கடவுளாகிய இராமபிரானுக்குச் சேவை செய்ய காட்டிற்கு அவருடன் கூடச் செல்வதற்கு விரும்பினார்கள். ஆனால் இலக்குவனுக்கு மட்டுமே அந்தப் பாக்கியம் கிடைத்தது. அதாவது நாம் தெய்வத்தைக் கூட வணங்குவதாயினும் அவருக்குப் பணிவிடை செய்வதாயினும் அதற்கு இறையருள் இருக்க வேண்டும். அந்த வகையில் யாம் பேறு பெற்றவர்கள்.

இராமர் காட்டிற்குச் செல்ல ஆயத்தமானவுடன் இலக்குவன் தனது மனைவி (சனகனின் இரண்டாவது மகளாகிய) ஊர்மிளையைக் காணச் செல்கின்றான். இதனை அறிந்த ஊர்மிளை தானும் காட்டிற்குச் செல்லத் தயாராக இருந்தாள்.

தந்தை தசரதரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு தனயன் இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டியது கடமை. கணவன் காட்டிற்குச் செல்லும் போது மனைவி சீதாபிராட்டியார் செல்வது சரி, இலக்குவன் தனது தமையனுடன் காட்டிற்கு செல்வது கூட சரி என்றாலும் ஊர்மிளை ஏன் செல்ல வேண்டும். தசரதன் இலக்குவனைக் காட்டிற்குச் செல்லச் சொன்னானா? இல்லையே. ஆனால் ஊர்மிளை எதுவித கேள்வியின்றியும்

காட்டிற்குச் செல்லத் தயாராகின்றாள் என்றால் அவளின் கணவன் மீதுள்ள பற்றுத்தான் என்னே! ஆனால் அவள் காட்டிற்குச் செல்லவில்லை. ஏன்? அவ்வாறு காட்டிற்குச் செல்ல நின்ற ஊர்மிளையைப் பார்த்து, "நான் எனது கடவுளான அண்ணன் இராமனுக்கு சேவை செய்ய அவருடன் காட்டிற்குச் செல்கிறேன். அவ்வாறிருக்கையில் நீ என்னுடன் வந்தால் நீ எனக்கு பணிவிடை செய்வாய். அதனால் நான் சீதா இராமனுக்குச் செய்யும் சேவையில் களங்கம் வந்துவிடும். ஆகவே நீவிர் அங்கு வரவேண்டாம்" என்றார். அத்துடன் முடிந்ததா? கணவனுடன் சேர்ந்து வரவேண்டாம் என்று கணவனே கூறுவது, அதுவும் 14 வருடங்கள், திருமணம் செய்த சில நாட்களில் ஒரு பெண்ணுக்கு கொடிய தண்டனை. அதைவிட மிகக் கொடிய தண்டனைகளை இலக்குவன் ஊர்மிளைக்குத் தந்தான். அவை என்ன?

- நீர் எதுவித கலக்கமும் இன்றி அரச சுகபோகங்களை அனுபவிக்க வேண்டும்.
- என்னை வழியனுப்பும்போதும் நான் வரும்போதும் புன்னகை பூத்த முகத்துடன் என்னை உபசரிக்க வேண்டும் என்றும் கூறினான்.

இவை சாதாரண பெண்களால் இயலுமா? ஆனால் அவை எல்லாவற்றையும் பிழையின்றி நிறைவேற்றினாள் ஊர்மிளை. எந்தப் பெண்ணுக்கும் கிடைக்காத தண்டனை கணவன் காவியோடு காட்டில் முள்ளின் மேல் நடக்கிறான். மனைவியோ பட்டாடையுடன் பல்லக்கில் திரிய வேண்டும். அதுவும் மனங்கலங்காது புன்னகை பூத்த முகத்துடன். இவற்றைவிட ஒரு பெண்ணுக்குக் கொடிய தண்டனை தான் என்னே? இவற்றை எல்லாம் ஒழுங்காகக் கடைப்பிடித்த ஊர்மிளையின் பதிபக்தியை மிஞ்சி ஒரு கற்புக்கரசிதான் உண்டா?

சீதாபிராட்டியார் கணவன் பேச்சுக்கு மறுவார்த்தை கூறாமல் கணவனுடன் சென்றாள். மாயமானுக்கு ஆசைப்பட்டு கணவனைப் பிரிந்தாள். அது அவளின் கணவனின் பிரிவை ஏற்பதற்கு ஒரு காரணமாயிற்று.

ஆனால் ஊர்மிளையோ கணவன் சொன்ன வார்த்தை ஒன்றைக்கூடத் தட்டவில்லை. கணவனுடன் சேர்ந்திருப்பதைவிட சுகபோகங்களை அனுபவித்து பட்டாடைகள் அணிந்து களிப்புறத்தான் முடியும். ஆனால் இவை எல்லாவற்றையும் கணவன் மீது கொண்ட பக்திக்காகச் செய்தாள். இவள் கணவனைப் பிரிவதற்கு காரணந்தான் கூறமுடியுமா? ஊர்மிளைக்கு நிகரான கற்புக்கரசியைத்தான் பார்க்க முடியுமா?



அமரர் தியாகராஜா மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக ஆச்சிரமத்தால் கட்டப்பட்ட புதிய வைத்தியசாலைத் திறப்புவிழா நிகழ்வில் பேரவையின் முன்னாள் தலைவர் திரு. சி. நாகலிங்கம் அவர்கள் மங்கள விளக்கேற்றும் நிகழ்வு.



கட்டடத் திறப்புவிழாவின் போது வருகை புரிந்த மகேஸ்வரன் குடும்பத்தினருடன் ஏனைய பிரமுகர்களும் காணப்படுகின்றனர்.

# பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே

– சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர் அவர்கள் –

"எண்ணரிய பிறவிதனில் மானுடப்பிறவியாதினும் அரிது அரிது காண் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்ற தாயுமான சுவாமிகளின் அருள் வாக்கையும், அரிது அரிது மானுடராதல் அரிது என்ற ஔவை மூதாட்டியின் திருவாக்கையும் கருத்திற் கொள்ளும்போது மானுடப்பிறவியின் மகத்துவம் நன்கு புலனாகின்றது. இப்பிரபஞ்சத்தில் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவர்கள் ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு, ஆறறிவு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில் மானுடப் பிறவி ஆறறிவு உள்ள பிறவியாகப் போற்றப்படுகின்றது. நன்மை தீமை, இன்பம் துன்பம், பாவம் புண்ணியம், சிற்றின்பம், பேரின்பம் என்பவற்றைப் பகுத்து அறியக்கூடிய மேலான பகுத்தறிவை மானுடப் பிறவிக்கு இறைவன் வழங்கியுள்ளான். இது இறைவனால் மானுடப் பிறவிக்கு வழங்கப்பட்ட கொடையாகும்.

இப்பிரபஞ்சத்தில் தோன்றிய பூச்சி புழுக்கள், பட்சிகள், மிருகங்கள் போன்றவை பிறக்கின்றன; உண்ணுகின்றன; உறங்குகின்றன; இனத்தைப் பெருக்குகின்றன; முதுமை அடைகின்றன; பின் இறக்கின்றன. இதே காரியங்களை ஞானியர்களினால் போற்றப்பட்ட ஆறறிவு படைத்த மானுடப்பிறவியினரும் செய்து தங்கள் வாழ்வை நிறைவு செய்தால் மேற்கூறிய பிறவிகளுக்கும் இம் மானுடப்பிறவிகளுக்குமிடையில் என்ன வேறுபாடுள்ளது? அப்பொழுது மானுடப்பிறவியினரும் மாக்கள் தானா? அப்படியானால் ஞானியர் மானுடப்பிறவியை வியந்து போற்றியது பொய்மையா?

மானுடப்பிறவி அதிமகத்துவமானது தான், அதே வேளையில் மிக அநித்திய மானது. கடுங்காற்றில் எடுத்துச் செல்லும் தீபத்தையும், நீர்க்குமிழியையும் போன்றது. எந்நேரம் இவ்வாழ்வு முடியும் என்பது எமக்கே தெரியாது.

---

கடன் ஏழைக்குப் பிறக்கும் முதற் குழந்தை.

**"நீர்க்குமிழி யாமுடலை நித்தியமா யெண்ணுதே**

**ஆர்க்கு முயராசை யழியேனே யென்குதே"**

எனப் பட்டினத்தடிகள் தமது அருட்புலம்பலில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். ஆகையினால் மானுடப் பிறவியின் மகத்துவத்தையும் அநித்தியத்தையும் (நிலையாமையை) உணர்ந்து பிறப்புக்கும் இறப்புக்குமிடையில் இறைவனால் வழங்கப்பட்ட மிகக் குறுகிய கால எல்லைக்குள் நாங்கள் எடுத்த இப்பிறவியின் பயனை அடைய வேண்டும். இல்லாவிடில் இப்பிறவி எடுத்ததின் நோக்கம் அர்த்தமற்றதாகிவிடும். எமது அறிவைப் பிரயோகித்துப் பகுத்தறிந்து உண்மை எது? பொய் எது? என்பதை நாம் முதலில் உணர்ந்து கொண்டு செயற்படவேண்டும். இப்பிரபஞ்சத்தில் பொய்களை மெய்யென நம்பி வாழ்கின்றோம். எம்மோடு எது கூடவரும் எது கூடவராதுஎன்பதைப் பற்றி நாம் சிந்திப்பதில்லை. இதைநன்குணர்வதற்கு ஒரு சம்பவத்தை உற்று நோக்குவோம்.

ஒரு கிராமத்தில் கணவன், மனைவி ஒரே மகன் அடங்கிய குடும்பம். கணவன் நிறைய நகை நட்டுகளையும் இலட்சக்கணக்கான பணத்தையும் தன்னிடமுள்ள இரும்புப் பெட்டியில் சேமித்து வீட்டுக்குள் உள்ள அறையின் மத்தி யில் வைத்து, காலை மாலை மஞ்சள் நீர் தெளித்துப் பூ வைத்துத் தூபங்காட்டித் தமக்குப் "பின்னடிக்கு உதவும்" என்று கூறிப் பெட்டியைத் தொட்டுக் கண்ணில் ஒற்றி அங்குமிங்கும் பார்த்து விட்டு ஒரு சரிகைப் பட்டால் மூடிவைப்பான். எச்சில் கையால் காகம் துரத்தாத கஞ்சன். தானதர்மம் செய்யமாட்டான். பிச்சைக்காரர்களைக் கண்டால் நாயை விரட்டிவிடுவான். வீட்டுச் செலவுக்குப் போதிய பணம் கொடுக்க மாட்டான். ஆனாலும் மனைவி இவர் மண்டையைப் போட்டால் இச்செல்வம் எல்லாவற்றிற்கும் தாமே அதிபதியென நினைந்து கணவன் மீது அன்பு செலுத்தி வந்தாள். "உங்கள் உயிருக்கு ஏதாவது நடந்தால் மறுகணம் என்னுயிரை விட்டுவிடுவேன் என்று அடிக்கடி கணவனுக்குக் கூறி வந்தாள். கணவனும் இதை மெய்யென நம்பி இன்ப சாகரத்தில் மூழ்கினான். மகன் இன்னும் ஒரு படி தாண்டி இவர்கள் இருவரும் மண்டையைப் போட்டால் தாமே இச்செல்வங்களுக்கு அதிபதியென நினைந்து "அப்பா தங்கள் உயிருக்கு ஏதாவது ஏற்பட்டால் அம்மாவுக்கு முன் நான் என்னுயிரை விட்டுவிடுவேன்" என்று கூறினான். இவைகள் எல்லாவற்றையும் உண்மையென நம்பிக் குடும்பத் தலைவனும் மெய்மறந்து நின்றான்.

இப்படிக் காலம் கழிந்துகொண்டு போகையில் ஒருநாள் கணவனும் மனைவியும் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் "இடப்பக்கத்து நெஞ்சுவலிக்கின்றது" என்று கூறிய வண்ணம் மனைவியின் மடியில் சாய்ந்தான். உயிர்பிரிந்துவிட்டது. மறுநாள் கமுகு

வெட்டிப் பிளந்து கட்டவேண்டியதைக் கட்டி உரிய இடத்துக்குக் கொண்டு போவதற்கு நான்குபேர் தூக்கிவிட்டார்கள். இவர் தமது பின்னடிக்கு உதவும் என்று கூறிப் பூஜை செய்த இரும்புப்பெட்டி ஒரு இஞ்சி கூட நகர்ந்து வரவில்லையாம். உயிர் விடுவேன் என்று கூறிய மனைவி வீதி மட்டும்தான் வந்தாளாம். அன்பு மொழிபேசிய மைந்தனும் விம்மி விம்மி அழுது மயானம் மட்டுந்தான் வந்தானாம். இவர் தமக்கு உதவும் எனச் சேமித்த பொன்னும் பொருளும் அன்பு மொழி பேசிய மனைவி மக்களும் இங்கேயே தங்கிவிட்டார்கள். அவர் பொய்களை மெய்யென நம்பி வாழ்ந்தாரேயன்றி உண்மையை உணர்ந்து வாழவில்லை. எம்முடலை விட்டு உயிர் பிரியும் பொழுது மாடு கன்று பணம் பண்டம் காணி பூமி எதுவுமே ஏன் அரைஞாண் கயிறுமே கூடவரா. ஆனால் நாம் இப்பிரபஞ்சத்தில் வாழும் பொழுது நாம் செய்த நல்வினை தீவினைக் கேற்ப அதற்குரிய புண்ணிய பாவங்கள் சுடு காட்டையும் தாண்டி நாம் எடுக்கும் பிறவிகள் தோறும் தொடர்ந்து வருமென நிலையாமையை நன்குணர்ந்த பட்டினத் தடிகள் இப்படிப் பாடுகின்றார்.

**அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக**
**மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு**
**கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே**
**பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே**

இவைகளை நாம் கருத்திற் கொண்டு எடுத்த இப்பிறவியின் மகத்துவத்தையும் நிலையாமையையும் நன்குணர்ந்து எமது வாழ்வைத் தெய்வீகமான வாழ்வாக மாற்றியமைக்கவேண்டும். பற்றித் தொடருமே இருவினைப் புண்ணிய பாவமுமே என்று அடிகளார் கூறும் இடத்தை நாம் நன்கு சிந்திக்கவேண்டும். இங்கே இருவினையென்பது நல்வினை தீவினையென்பதைக் குறிக்கிறது. தீவினை புரிவதனால் பாவம் எம்மைப் பற்றிக் கொள்கிறது. ஆகவே பாவம் எம்மைத் தொடராமலிருக்க வேண்டுமானால் முற்று முழுதாகத் தீவினை புரிதலை நிறுத்திவிட வேண்டும். தீவினை யென்பது செயல் மட்டுமன்றிச் சிந்தனையில் இருந்தே ஆரம்பிக்கப்படுகின்றது. இன்னா செய்யா மைக்குச் சிந்தனை அடித்தளமாக இருக்க வேண்டும். தூய சிந்தையுடன் செய லாற்றுதலே தீவினைகளை முற்றுமுழுதாக அகற்றும் வழியாகும்.

புண்ணியம் என்பதை நாம் கருத்திற் கொள்ளும் போது, சாதாரண வாழ்விய லில் பொன் பொருள் என்பன மக்களுக்கு அத்தியாவசியமாகின்றது. ஆனால், நிலை இல்லாத பொன் பொருளை ஒருவகையில் நிலையுள்ளதாக்கிக் கொள்ளலாம் என்ற சிந்தனைக்கமைவாக நாம் தேடும் தேட்டங்களை அறவழியில் தேடி அறவாழ்வு

வாழ்வதுடன், இத்தேட்டங்களைக் கொண்டு பசிப்பிணிபோக்குதல், தாகசாந்திசெய்தல், நலிவுற்றவர்களுக்கு உதவுதல், நோயாளருக்குதவுதல், தர்ம சத்திரங்கள் ஆலயங்கள் போன்றனவற்றின் புனித பணிகளுக்குதவுதல் போன்ற சற்காரியங்களுக்கு உதவுவதால், இத்தேட்டங்கள் அருளாகப் புண்ணியமாக மாற்றப்படுகிறது. இவ்வகையில் நிலையில் லாத செல்வங்களை (நிலையாமையை உணர்ந்து) நிலையான செல்வங்களாக மாற் றப்படுவதை எமது பகுத்தறிவின்மூலம் உணர்ந்துகொள்ளலாம். இதன் பயன் பிறவிதோறும் தொடர்ந்து வரும் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை. நாம் செய்யும் புண்ணிய காரியங்களினால் இறைவனின் துணை எமக்கு மெய்த்துணையாக விளங்குவதுடன் நாமும் என்றும் தெய்வீக வாழ்வு வாழ இறைவனின் பெருங்கருணை வழிவகுக்கும்.

**ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற**
**பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுஞ்**
**சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே**
**யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே**

(சதம் - துணை)

என்பதற்கு அமைவாக இறைவனின் பொற்பாத கமலங்களைச் சரணடைந்து மானுடத்தை மேன்மைப்படுத்துவோமாக.

---

## ஆவணி மாத ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய

### விசேட உற்சவ தினங்கள்

| | |
|---|---|
| *09.08.2010 ஆடி 24 திங்கள்* | – *ஆடி அமாவாசை விரதம்* |
| *10.08.2010 ஆடி 25 செவ்வாய்* | – *காலை 9.30 மணிக்கு கொடியேற்றம், மாலை 2ஆம் திருவிழா* |
| *13.08.2010 ஆடி 28 புதன்* | – *காலைத் திருவிழா ஆரம்பம்* |
| *18.08.2010 ஆவணி 2 புதன்* | – *பூங்காவனம்* |
| *19.08.2010 ஆவணி 3 வியாழன்* | – *கைலாய வாகன உற்சவம்* |
| *22.08.2010 ஆவணி 6 ஞாயிறு* | – *சப்பற உற்சவம்* |
| *23.08.2010 ஆவணி 7 திங்கள்* | – *தேர் உற்சவம்* |
| *24.08.2010 ஆவணி 8 செவ்வாய்* | – *காலை – தீர்த்தோற்சவம், மாலை மௌனத் திருவிழா* |
| *30.08.2010 ஆவணி 14 திங்கள்* | – *பிராயச்சித்த அபிஷேகம்* |
| *31.08.2010 ஆவணி 15 செவ்வாய்* | – *கார்த்திகை தின உற்சவம்* |

---

**இறைவனை மையமாகக் கொண்டு வாழும் வாழ்க்கை அர்த்தமுடையது.**

# வாசகர் உள்ளத்திலிருந்து...

## ஆச்சிரம அன்னப்பணி, சமுதாயப் பணி

மேற்படி ஆச்சிரமத்தின் பணிகள், செயற்பாடுகள் பற்றி "ஞானச்சுடர்" வெளியீட்டின் மூலம் அறிந்து அகமிக மகிழ்கிறது. அந்நியர் ஆட்சியின் சவால்கட்கு முகங்கொடுத்து காக்கப்பட்ட எமது சமயம் இன்று செல்லும் பாதை வேதனையூட்டும் வேளையில் ஆச்சிரமப் பேரவையின் பணிகள் கண்டு ஓரளவு மன அமைதி பெறமுடிகிறது. "ஞானச்சுடர்" வெளியீட்டில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்து தரப்பினரும் வயதினரும் படித்து சமய அறிவை மெருகூட்ட, சமயவாழ்வு வாழ பேருதவி புரிவதனை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

இப்பணிகளில் பங்குபற்றும் அனைவருக்கும் சைவசமய சமுதாயம் நன்றிகூறி பேரவையைப் போற்றிப் பேணிப்பாதுகாக்க வேண்டிய கடப்பாடுடையது.

சந்நிதியான் அருட்பார்வை என்றும் இப்பணிகட்கு உதவட்டும்.

நன்றி

இப்படிக்கு,
திருமதி. ர. சோதிலிங்கம்
கொழும்பு - 06 (02.06.2010)

---

## "என் கடன் பணி செய்து கிடப்பதே"

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற, உயரிய சிந்தனையுடன் செயற்படும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றி வருகின்ற வைத்தியசேவை, அன்னதானப்பணி, கல்விப்பணி, வலதுகுறைந்தோருக்கென செய்துவருகின்ற உதவுதொகை, சமூகப்பணி இவை எல்லாவற்றுக்கும் மேலாக மாதந்தோறும் வெளிவரும் ஞானச்சுடர் மலர் வெளியீடு என்பவற்றை யாராலும்நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத அரும்பெரும் செயல்களாகும்.

தற்சமயம் மாதாமாதம் வெளிவரும் மலருக்கு அதிகமான இளைஞர்களும் யுவதிகளும் விடயதானங்களை வழங்கி மலரை அழகுறச் செய்து வருவதை, மலரினை வாசிப்பதனூடாக அறியக் கூடியதாக உள்ளது. மலருக்கு விடயதானம் வழங்குவது என்பது அவ்வளவு சுலபமான காரியமன்று

ஏனைய மலர்களைப் போலல்லாது, ஆன்மீகம் சம்பந்தமான - இறை சம்பந்தமான அரிய கருத்துக்களையெல்லாம் இளைஞர்களும் யுவதிகளும் இம்மலருக்கு வழங்கிவருவதையிட்டு சைவ உலகம் மகிழ்ச்சியடைவதோடு, ஆன்மீக ஈடுபாட்டிற்கு இவர்களுடைய ஆக்கங்கள் வழி சமைக்கின்றன என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

ஆகவே வருடாவருடம் மலருக்கு விடயதானங்கள் வழங்கும் பெருமக்களை கௌரவித்து, பொன்னாடை போர்த்தி, கேடயங்கள் வழங்கி வருவதை யாமறிவோம். எதிர்காலத்தில் இப்பணி தொடரும்போது, தற்சமயம் விடயதானங்களை வழங்கிவரும் இளைஞர் யுவதிகளுக்கு, மேற்கூறிய கௌரவிப்புகளுடன், ஒவ்வொரு சான்றிதழும் வழங்கினால், அது அவர்களுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்பது எனது ஆதங்கம். எதற்கும் முருகன் திருவருள் கிட்டினால், இது சாத்தியமாகும் என்பது எனது நம்பிக்கை.

நன்றி

இப்படிக்கு,
ஆ. மகேசு,

---

*தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியையே தரும்.*

உ

# திடமாக உறையும் திருக்கேதீச்சரநாதர்

- செ. பாலச்சந்திரன் (ஆசிரியர்) அவர்கள் - யா/வைத்தீஸ்வரக் கல்லூரி -

திருச்சிற்றம்பலம்

**சுடுவார் பொடி நீறுந் நல்ல துண்டப் பிறை கீழும்**
**கடமார்களி யானையுரி யணிந்த கறைக் கண்டன்**
**படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**திடமாயுறை கின்றான் திருக்கேதீச்சரத்தானே.**

திருச்சிற்றம்பலம் (சுந்தரமூர்த்தி நாயனார்)

## உண்மைச்சம்பவம்

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாரும், ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் அகக் காட்சியாக எம்பெருமானின் திவ்ய தரிசனத்தைத் தரிசித்து, அதன் பயனாகத் தேவாரப்பாடல் அருளப் பெறக் காரணமான திவ்விய ஷேத்திரம் திருக்கேதீச்சரம் ஆகும். இன்று வரை எம்பெருமானின் திருவருட் பிரகாசம் அங்கே வீசிக் கொண்டிருப்பதை, அவரின் அற்புதத் திருவிளையாடல் மூலம் உணர முடிந்தது.

கடந்த மாதம் (21.05.2010) வெள்ளிக்கிழமை அன்று யா/ வைத்தீஸ்வரக் கல்லூரியின் இரவுத் திருவிழா உபயம். வருடா வருடம் திருக்கேதீஸ்வரத்தில் நான்காம் திருவிழாவைத் (இரவு) திருவருட் துணையுடன் செய்ய நியமம். ஆனால் கடந்த பல வருடங்களாக இவ்விழாவிற்கு மாணவர்கள் ஆசிரியர்கள் சென்று வர முடியாத அசாதாரண சூழ்நிலை நிலவியது. விழாவுக்குரிய பணத்தை மட்டும் கல்லூரி நிர்வாகம் அனுப்பிக் கொண்டிருந்தது.

கடந்த பல வருடமாக யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய சிறியேன் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு 2009இல் இடமாற்றலொகி

**அறிவின் முதற்பாடம் செல்வத்தை வெறுப்பது.**

வந்தேன். இவ்வருடம், அதாவது 2010முதல் இந்துமன்றப் பொறுப்பாசிரியராகக் கடமை ஆற்றும் சந்தர்ப்பமும் இறைவன் திருவருளால் நிர்ணயிக்கப்பெற்றது.

எமது கல்லூரி அதிபராகிய மதிப்பிற்குரிய திரு. நா. வன்னியசிங்கம் அவர்கள், நாட்டில் போக்குவரத்து நிலமைகள் சுமுகமாக இருப்பதால் இம்முறை எமது கல்லூரித் திருவிழாவிற்குப் பிள்ளைகளையும் அழைத்துச் செல்லலாம் எனப் பச்சைக் கொடி காட்டினார். அது மட்டுமல்லாது அன்னதானத்திற்குத் தாமும் ஒரு மூடை அரிசியை வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். க.பொ.த உயர்தர மாணவர்களும், ஆசிரியர்களும் அன்னதானத்திற்குப் பொருள், பணம் என்பவற்றை வழங்கி ஆலயம் செல்வதற்கு ஆயத்தமாகினர்.

21.05.2010 அன்று வெள்ளிக்கிழமை காலை 6.50 மணியளவில் கல்லூரி அதிபர், சக ஆசிரியர்கள் வழியனுப்ப சாந்தையர் மடம் விநாயகர் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்தவாறு எமது ஆலயப்பயணம் ஆரம்பமாகியது. ஒரு பெரிய தனியார் பேருந்திலும், ஒரு சிறிய தனியார் பேருந்திலுமாக நூற்றிருபது பேர் பயணம் செய்தோம். இதில் மாணவர்கள் நூற்றுப்பத்துப்பேரும், ஆசிரியர்கள், உப அதிபர், பெற்றோர் எனப் பத்துப் பேருமாக இருந்தோம். தரம் ஆறு தொடக்கம் தரம் பதின்மூன்று வரையான மாணவ, மாணவியர் இப்பயணத்தில் பங்கேற்றனர்.

நாம் பயணம் ஆரம்பிக்கின்றவேளையில் சிறிய பிள்ளைகளின் பெற்றோர் பலரும் தமது பிள்ளைகளை அனுப்ப வந்திருந்தனர். அவர்களில் சிலர் "சேர், பிள்ளைகள் கவனம், கவனமாகக் கூட்டிச் சென்று கூட்டி வாருங்கள்" என்றனர். அப்போது நான் எனக்குள்ளே வைத்தீஸ்வரப் பெருமானே என் செயல் எதுவும் இல்லை. எல்லாம் உன் செயலே. நீயே துணையாக நின்று இப்பிரயாணத்தை நல்லபடி பூர்த்தி செய்ய அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்தேன். எமது பிரயாணம் மிகவும் சந்தோஷமாக இருந்தது. கைதடி விநாயகர், முறிகண்டி விநாயகர் ஆகிய தலங்களைத் தரிசித்து அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், முளங்காவில் ஊடாக சரியாகப் 11.45 மணிக்குத் திருக்கேதீஸ்வர ஆலயத்தைச் சென்றடைந்தோம்.

அன்னதானத்திற்குரிய பொருட்களை மடத்திற் கையளித்து விட்டுப் பாலாவியில் தீர்த்தம் ஆட எனப் புறப்பட்டோம். அப்போது மணிவாசகர் மடத்துத் திருத்தொண்டர்கள் "நீங்கள் இப்போது களைத்துப்போய் வந்துள்ளீர்கள். உடனே கை, கால்களைக் கழுவி விட்டு திருவமுது செய்யுங்கள், பின்னர் ஆறுதலாகத் தீர்த்தமாடிவிட்டுப் பின் திருவிழாவிற்குப் போய் சங்கற்பம் செய்யலாம் என்றனர். எல்லாம் திருவருளே என நினைந்து மதிய

உணவை அத்திருமடத்திலே முடித்துச் சிறிது இளைப்பாறிய பின்னர் 'பாவம் வினை யறுப்பார் பயில் பாலாவிக்குச்' சென்றோம்.

"எம்பெருமானே சிறுவனாக என் ஐயாவுடன் வந்தபின் இப்போது தான் வரவழைத் திருக்கிறாய் என்னை; எனப் பழைய நினைவுகளைச் சுமந்தபடி பாலாவித் தீர்த்தத்திலே நீராடினேன். அங்கே முதல் நாள் நல்ல மழையும் பெய்து கோயில் சூழல் மனதுக்கு மிகவும் மனோரம்மியமாக இருந்தது.

தீர்த்தமாடி நாம் வெளியே ஆலயம் செல்ல ஆயத்தமானபோது மாலை 3.30 மணி யாகும். அப்பொழுது திருவிழா உபயகாரரை தர்ப்பை அணிந்து சங்கற்பம் செய்ய வருமாறு ஓர் அடியவர் வந்து அழைத்தார். உப அதிபருடன் சக ஆசிரியர்கள் மாணவர்கள் என்பவர்களுடன் ஆலயத்துள் சென்றோம். மிக அமைதியாகப் பூசை ஆராதனைகள் இடம் பெற்ற வண்ணம் இருந்தது.

"தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்..." என்ற அப்பர் பெருமான் பாடலுக்கு ஒப்ப எம்மை மறந்த நிலையில் பூசையுடன் இரண்டறக் கலந்திருந்தோம். அப்பொழுது தரம் 7 'A' வகுப்பு மாணவர்களில் ஒருவன் வந்து "சேர், எங்கடை வகுப்பு மாணவன் லக்சன் கோயிலுக்கு வெளியே அழுது கொண்டு நிற்கிறான்" என்று கூறினார். உடனே எனக்கரு கில் இருந்த ஆசிரியரிடம் கூறிவிட்டு வெளியே வந்தேன். அம்மாணவன் இராச கோபுரத்துக் கும் வெளிப்பிரகாரத்தில் அமைந்திருந்த முருகன் ஆலயத்திற்கும் இடையில் தலையைக் குனிந்தவாறு இருந்தான். நான் போய் அவன் முகத்தை நிமிர்த்திப் பார்த்தேன். இரு கண்களிலும் தாரை, தாரையாகக் கண்ணீர். "ஏன் என்ன?" என வினாவினேன்.

"சேர் என்னால முடியவில்லை. தலை தூக்க முடியாமல் இருக்கின்றது" எனக் கூறினான். உடனே மேலைத் தொட்டுப் பார்த்தேன். சூடாக இருந்தது. உடம்பில்சிறிது நடுக்கமும் காணப்பெற்றது. இவன் திருக்கேதீஸ்வரம் வரும் பொழுதே இருமல் இருந்ததை நான் பஸ்ஸினுள் கவனித்தேன். உடம்பு இயலாது என்று கூறினால் பெற்றோர் மறித்து விடுவார்கள் என எண்ணி, ஆலயம் வரும் ஆவலில் பிள்ளை வந்துவிட்டான். அது மட்டு மில்லாமல் பாலாவியில் நன்கு தோய்ந்து நீராடியும் விட்டான். "பாலாவியில் தீர்த்தமும் ஆடினாயா?" என்று கேட்டேன். "ஓம் சேர்" என்றான். சரி என்ன செய்வது என்று யோசித்து விட்டு, எமது ஆசிரியர் ஒருவரிடம் இருந்து ஒரு பனடோல் குளிசையைப் பெற்றுக் கொடுத் தேன். அப்போது "சேர் நான் படுக்கப் போகிறேன்" என்றான். "சரி, இங்கே வா எனக் கூறி இரண்டாம் பிரகாரத்திலே முருகன் ஆலயத்துக்குப் பக்கமாக, நந்திக்கு வடக்குப் புறமாக இருந்த மண்டபத்தில் படுக்க வைத்துவிட்டு நான் பூசையில் கலந்து கொள்ளச் சென்றேன்.

---

*தனக்குச் சரிப்படாத எதையும் அசட்டுத்தனம் என்று சொல்வதுதான் உலகவழக்கு.*

அபிடேகத்தைத் தொடர்ந்து கொடித் தம்பபூசை இடம்பெற்றது. அப்போது என் மனம் ஒரு நிலையில் நிற்காது இப்பையனுக்கு எதுவும் நேரக் கூடாது என வேண்டியது. அந்நேரம் அம்மாணவனின் வகுப்பில் உள்ள சகமாணவனான கோகுலன் என்பவன் வந்தான். அவனிடம் 'லக்சன்' படுத்திருக்கும் இடத்தைக் கூறி என்ன செய்கிறான் எனப்பார்த்து வரும்படி கூறினேன். அவனும் சென்று பார்த்துவிட்டு "சேர், அவன் நல்ல நித்திரை" எனக் கூறினான். அதற்குப் பிறகு மனத்திலே ஒரு தெம்பு ஏற்பட்டாலும் உள்ளூரக் கட வுளை வேண்டினேன். வசந்த மண்டபப் பூசை நிறைவுற்று, திருவுருவங்கள் வாகனங்களில் ஆரோகணித்து உள் வீதி வலம் வந்தன. கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நாமும் சுவாமியுடன் வந்து வெளிப்பிரகாரம் வந்தடைந்தோம். அப்போது வாசலின் நந்திக்கு அருகே லக்சன் தன் நண்பர்களுடன் சிரித்தபடி எதுவுமே நடக்காதது போல் நின்றான். எனக்கு மகிழ்ச்சி ஒருபுறம். ஆச்சரியம் ஒருபுறம். அந்தளவிற்கு எனது மனம் பேதலித்திருந்தது. சரி "என்னப்பா எல்லாரையும் பயப்படுத்தி விட்டாயே" எனக் கேட்டேன்.

"சேர் நான் படுத்திருக்க எனக்குப் பக்கத்தில் யாரோ இருப்பது தெரிந்தது. யார் என்று பார்த்தேன். ஒரு அண்ணா சோறு சாப்பிட்டுக் கொண்டு இருந்தார். "நீயும் சாப்பிடு கிறாயா?" என என்னைக் கேட்டார். ஏன் படுத்திருக்கிறாய்? எனக் கேட்டார். நான் சுகமில்லை என்றேன். நீ பயப்படாதே! என்றார். அப்போது நான் எழுந்து இருந்தேன். எனக்கு அருகில் இருந்த சுவருக்கு மேலாலே ஒரு மயில் வந்து இறங்கி அந்த அண்ணாவின் அருகில் போய் நின்றது. அவர் அதன் முதுகைத் தடவியவாறே சாப்பிட்டார். சிறிது நேரத்தால் மயில் வந்த வழியே போனது. நான் எனக்கு இவ்வளவு பக்கமாக மயில் வந்தபோது பயந்தேன். மயிலின் பின்னே அந்த அண்ணாவும் சென்றார். மயில் பறந்து சென்றது நான் அண்ணா வின் பின்னால் என்னையும் அறியாமல் சென்றேன். ஓர் அளவு தூரத்தின் பின் அவரை என்னால் பார்க்கமுடியவில்லை. நான் பயந்துவிட்டேன். அத்துடன் எனக்கு எல்லாம் சுகமாக இருந்தது" எனக் கூறினான்.

இவன் கனவுதான் கண்டானோ? என ஐயமுற்றநான் திருவிழா முடிந்தபின் எதற் கும் கதைப்போம் என எண்ணியவாறு சுவாமியுடன் வீதி வலம் வந்தேன். பின்னர் மீளவும் அப்பையனைக் கூப்பிட்டு நீ நித்திரை செய்த போது கனவு கண்டாயா? அதைத் தான் சொல்கிறாயா? எனக் கேட்டேன். அதற்கு அவன் "இல்லை சேர் அவர் என் அரு கில் இருந்து கதைத்தபடி சாப்பிட்டவர். மயில் என் அருகில் நின்றது. நான் அவர் பின்னே சென்றேன்" இவை நிஜமாக நடந்தது என்றான். அவ்வாறு அவன் கூறும்போது அவன் முகத்தில் ஓர் மகிழ்ச்சியின் பிரகாசமும் அவசரமும் தொனிப்பதை என்னால் பார்க்க முடிந்தது. என்னுடன் வந்த இன்னொரு ஆசிரியராகிய செல்வி த. சிவப்பிரகாசம் அவர்களும்

*மனஅமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.*

அவனுடன் உரையாடினார். பிறகு "சேர் அவன் இப்போது இருக்கும் உசாரையும் மகிழ்வை யும் பாருங்கள். உண்மையான தெய்வச் செயல் இங்கு இடம்பெற்றுள்ளது, நாம் சந் தேகப்படுவதற்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை" என்றார்.

நான் வரும்போது வைத்தீஸ்வரனிடம் வேண்டியதை நினைந்தேன். நோயுற்ற பைய னுக்கு வைத்தியனாக வந்தாய். பாளும் என் மனத்தில் ஏன் இப்படிச் சந்தேகத்தைக் கொடுத் தாய் என என்னுள் எண்ணிக் கவலைப்பட்டேன். மறுநாள் அதிகாலை 4.30 மணியளவில் பாலாவியில் இருந்து நாமெல்லோரும் தீர்த்தக் காவடி (ஈர ஆடையுடன்) எடுத்து மஹா லிங்கத்திற்கு அபிடேகம் செய்தோம் .அப்பையனும் தீர்த்தமாடி அபிடேகம் செய்தான். அதன் பின் வெளிவாசலில் வந்து நின்று வழிபட்டேன். அப்போது க.பொ.த. (உயர்தர) மாணவர்களில் ஒரு சிலர் வந்து "சேர், திருமுறை பாடியபடி வெளிவீதியை வலம் வரு வோமா? என்றனர். எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. உடனே எல்லாம் இறைவன் திருவருள் என நினைத்தபடி ஞானசம்பந்தப் பெருமானின் "விருது குன்றமா..." என்ற கேதீச்சரப் பதிகத்துடன் ஆரம்பித்துச் சிவபுராணம் பாடியவாறு வீதியை வலம் வந்தோம். மேற்கு வீதியில் நாம் வந்தபோது எமக்கு முன்னே ஒரு மயில் நடந்து நடந்து சென்றபடி இருந்தது. வடக்கு வீதியில் வந்த பின் அம்மயில் பறந்து சென்றது. லக்சனிடம் வந்த மயில் இதுவோ? என எண்ணியபடி நாம் எமது வழிபாட்டைப் பூர்த்திசெய்தோம். பயணம் முடிந்து பஸ்ஸில் ஏறித் திரும்பும் போது அம்மயில் முன்னே வந்து காட்சி தந்தது.

நான் சந்தேகப்பட்டதற்கு ஒரு தண்டனை தரப்பட்டு அதற்குப் பரிசும் வழங்கப் பட்டது. அது எதனை எனக்கு ஞாபகப்படுத்தியது என்றால் திருப்பல்லாண்டில் வரும்...' பாதகத்துக்குப் பரிசு வைத்தானே" என்ற அடியை ஆகும். சம்பவம் வருமாறு.

மஹோற்சவம் இனிதே நிறைவுற்று காளாஞ்சி வழங்கப் பெற்று நாமும் தெட்சணை வழங்கிக் குரு ஆசீர்வாதம் பெற்று உட்பிரகாரத்தை வலம் வந்தோம். அங்கே விபூதி, பிரசாதம் எல்லாம் வழங்கப்பெற்றது. அப்போது நாம் அர்ச்சனை செய்த தட்டில் பலருக்கும் விபூதி, நூல் என்பவற்றைப் பெற்றுக் கொண்டுபோக வேண்டும் என்ற எண்ணத்தில் வைத்திருந்தோம். எல்லோர்க்கும் பிரசாதம் கொடுக்கவேண்டும் என்ற அவசரத்தில் காளாஞ்சி மாலை, பிரசாதம் என்பவற்றுடன் அர்ச்சனைத் தட்டை வசந்த மண்டபவாசல் ஓரத்தில் வைத்து விட்டு மறந்துபோய் நாம் தங்குமிடத்துக்கு வந்துவிட்டோம். எல்லோர்க்கும் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு அர்ச்சனைத் தட்டைத் தேடினேன். காணவில்லை. எனது மனைவியிடம் கேட்டேன். அப்போது அவர் தான் அர்ச்சகருக்குத் தெட்சணை வழங்கும் போது கீழே வைத்துவிட்டு எடுக்கவில்லை என்றார். நான் உடனே திரும்ப ஆலயத்துக்கு வந்தேன். அங்கே வசந்தமண்டபம் பூட்டப்பெற்றிருந்தது. வாசல் படியில்

என் மனைவியின் கைக்குட்டை மட்டும் இருந்தது, அர்ச்சனைத் தட்டு இருக்கவில்லை. எனக்கு மனத்தில் பெரிய கவலை ஏற்பட்டது. இரவு முழுவதும் நித்திரையும் வரவில்லை.

மறுநாள் தீர்த்தக் காவடி முடித்து, காலை ஏழு மணியின் பின்னரே வசந்த மண்டபம் திறக்கப்படும் என ஒரு அன்பர் கூறக் கேட்டுத் திரும்பவும் எமது தங்குமிடம் வந்து பயணத்துக்கு ஆயத்தமானோம். மீளவும் ஆலயம் வந்தேன். ஓர் அர்ச்சகரிடம் கேட்டேன். "இப்படி இரவு நாம் செய்த ஓர் அர்ச்சனைத் தட்டை இங்குவிட்டு விட்டுப் போய்விட்டோம் கண்டீர்களா? என" அப்போது அவர் இல்லை எனக் கூறினார். அப்போது என்மனம் மேலும் வாடியது. இதைக் கேட்டவாறு உள்ளே இருந்த ஓர் அர்ச்சகர் வந்து "சற்று நில்லுங்கள் பார்த்துச் சொல்லுகிறேன்" என்று கூறிச் சென்றவர் கையில் அர்ச் சனைத் தட்டுடன் வந்தார். எமது அர்ச்சனைத் தட்டிலே எமது திருவிழாவன்று பவனி வந்த மூர்த்தங்களின் திருமுடி மீது சாத்தப்பெற்ற "இண்டை மலர்மாலை' ஐந்தும் வைக் கப்பெற்று வழங்கப்பெற்றேன்... எம்பெருமானே எனக்கு.. சோதிமணி முடித் தாமத்தை கொடுத்து என் சந்தேகப் பாதகத்துக்குப்பரிசு தந்தானே என்று கண்ணீர் மல்கினேன்.

அவ்வர்ச்சனைத் தட்டை எனது மனைவியிடம் கொண்டு சென்று கொடுத்தேன். அவருக்கும் மிகுந்த திருப்தி. இன்றும் அந்த மாலையில் ஒன்று எனது வீட்டு விநாயகர் திருமுடியில் காய்ந்தும் காயாமல் உள்ளது. உண்மையிலேயே சுந்தரமூர்த்தி சுவாமிகள்... "திடமாயுறை கின்றான்" எனவும், திருஞானசம்பந்தப் பிள்ளையார்... "கருத நின்ற கேதீச்சரம்" எனவும் திருவாய் மலர்ந்த வார்த்தைகள் சத்தியமானவையே.

... "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே

மாதொரு பாகனார் வருவார்" என்ற சிவஞானசித்தியார் வாசகம் உளங்கொள்ளத் தக்கது.

திருச்சிற்றம்பலம்

**வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி**
**வையம்மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்**
**பையெரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்**
**செய்ய சடை முடியான் திருக்கேதீச்சரத்தானே.**

திருச்சிற்றம்பலம்

---

**ஒருவரின் பேச்சிலிருந்து உள்ளப் பண்பை அறியலாம்.**





நூற்றைம்பதாவது சுடரென ஒளிரும் — உன்

மதுரகவி. காரை, எம்.பீ. அருளானந்தம் J.P.

நூற்றைம்பதாவது சஞ்சிகையாய் மலரும் – உன்
நூதனத்தை யாரறிவார் பராபரமே!
நீற்றினைச் சுமந்தே வீட்டுக்கு வருவாய்
நீதியைச் சொல்லிடும் நேர்த்தியைச் செய்வாய்
போற்றிடும் வேலவன் அருளினைப் பெற்றே
புதுமைகள் சுமந்தே மாதத்தில் வருவாய்
சாற்றிடும் சேதிகள் நூறினை சொல்லி
சந்நிதிப் புகழினைப் பேசிட வருவாய்
மோகன சுவாமியின் ஆசியைப் பெற்று
சாதனை மலரென நூற்றைம்பதாய் மலர்ந்தாய்
ஞானமும் கல்வியும் நயம்பட உரைத்தே
ஞாலம் போற்றிடும் பக்தியாய் விரிந்தாய்
பேணிடும் அற்புதம் விளைக்கும் ஆற்றங்கரைப்
பெம்மான் முருகன் பேரருள் சொல்வாய்
தேனினுமினிய தெய்வீக ஞானத் தமிழாய்
தேசமெங்கும் ஆயிர மாயிரமாய் விரிய வேண்டுகிறேன்

## நூதனத்தை யாரறிவார்....!

ஓர் அவமானத்தைப் பொறுத்துக்கொள்வது அதற்குப் பழிவாங்குவதைவிட மேலானது.



திறப்பு நிகழ்வில் போது மகேஸ்வரனின் பிள்ளைகளோடு விழாவிற்கு சமூகமளித்தோரும் காணப்படுகின்றனர்.



திறப்புவிழா நிகழ்வின் போது ஆலயத்தில் தங்கியுள்ள முதியோருக்குரிய உடுபுடவைகள் பேரவை உறுப்பினர் அ. அரசபிள்ளை வழங்கும் நிகழ்வு.

# செய்திச் சிதறல்கள்

- நெடுந்தீவு நடுக்குறிஞ்சி பெருக்கடி சித்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக மணிக் கூட்டுக் கோபுரம் அமைக்கப்படவுள்ளதாக ஆலயத்தின் புனரமைப்பு கும்பாபி ஷேக சபையின் பொருளாளர் சு. தியாகலிங்கம் தெரிவித்தார். சுமார் 21 அடி உயரமான இந்தக் கோபுரத்தின் கட்டுமானப்பணிகள் தற்சமயம் நடைபெற்று வரும் உற்சவத்தின்போது ஆரம்பிக்கப்படும் எனவும், 15 லட்ச ரூபா செலவில் இது அமையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா ஆவணி மாதம் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளமையால் இவ்விழாவை சிறப்பிக்கும் முகமாக நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர் வெளியிட இருப்பதால், பாடசாலையுடன் தொடர்புடைய வர்களிடம் இருந்து ஆக்கங்களையும், கருத்துக்களையும், ஆதரவுகளையும் இம்மாத இறுதிக்குள் எதிர்பார்ப்பதாக பாடசாலையின் அதிபர் ந. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
- உடுப்பிட்டி அருள்மிகு பத்திரகாளியம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 11.06.2010 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெற்று 25.06.2010 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெற்றது.
- சரித்திரப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர் வரும் ஜுலை 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலையில் சுவாமி வீதி உலா இடம்பெற்று ஜுலை 26ஆம் திகதி தீர்த்த உற்சவம் மாணிக்க கங்கையில் நடைபெற்று நிறைவுபெறும்.
- அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 17.06.2010ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஜுலை மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா வும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
- நேபாள நாட்டின் தலைநகர் காத்மண்ட் அருகே உள்ள சாங்கா நகரத்தில் 4 லட்சம் சதுரஅடி நிலப்பரப்பில் பூங்கா ஒன்று அமைத்துள்ளனர். யோக நிலையங்கள், தியான மையங்கள், உளநல மையங்கள் என அழகுற வடிவமைக்கப்பட்ட இப் பூங்காவில் 143 அடி உயரத்தில் மிகப் பிரமாண்டமான சிவன் சிலை உருவாக் கப்பட்டுள்ளது. இந்த சிலையானது சீமெந்தினால் தயாரிக்கப்பட்டு துத்தநாகம் மற்றும் செப்பு உலோகத்துடன் இரும்புத் தாது கலந்து அதன் மீது பூசப்பட்டுள்ளது. இந்த சிலைத்திறப்பு விழா 21.06.2010 இல் வெகு விமர்சையாக நடந்தேறியது.

***உன் நாவைக் காப்பாற்று உன் நண்பனைக் காப்பாற்றுவாய்.***

சந்நிதியான் ஆச்சிரமசைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வைகாசிப் பெரு விழாக் கவியரங்கில் இடம்பெற்ற திரு. ஐ. சண்முகலிங்கத்தின் (குப்பிளான் ஐ. சண்முகன்) கவிதையின் தேர்தெடுத்த சில பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன.

# ஒரு திருமுருகன் வந்தான்

எங்கள் திருமுருகன் - தமிழ்க் கடவுள்
தந்தைக்கு உபதேசம் செய்த தனயனவன்;
ஔவைக்கு அருள் செய்து அருங்கவிகள் பாடுவித்தான்.
ஆறுபடை வீட்டில் அருளாட்சி செய்கின்றான்
வள்ளி தெய்வானையுடன் ஒருங்கிணைந்து உறைகின்றான்.
தில்லைச் சிவனின் சிந்தைக்கினிய மகன்;
தீராத விளையாட்டு மாயோனவன் மருகன்;
கார்த்திகைப் பெண்களின் பாச வளர்ப்பு மகன்;
அழகன் - அசகாய சூரன் - அடங்கா அசுரரை அழித்த பெருவீரன்
தேவரைச் சிறைமீட்ட தேவசேனாதிபதி - கருணைக் கடவுள்
தன்னை எதிர்த்து நின்ற அசுரத் தலைவனுக்கும்
அருட்பெருவடிவம் காட்டிய அருளாளன்
மலையாய் - கடலாய் - மாமரமாய் நின்று
மாயங்கள் காட்டி மருள் செய்த சூரபத்மன்
உடல் பிளந்து - உடல் பிளந்து - சேவற்கொடி உடையோனாய்
மயில் ஏறும் பெருமானாய்
அடக்கி - அரசாண்டு - அருளாட்சி செய்வானாய்
ஒரு திருமுருகன் வந்தான்; - உலகம் உய்ய, உதித்தோனாய்
ஒரு திருமுருகன் வந்தான்.

* * * *

எங்கே சென்றான் அவன்? - ஒரு திருமுருகன் வந்து
எங்கே சென்றான் அவன்?
வன்னியில் எங்கள் தமிழ்சாதி வதைபட்டபோதுகளில்
எங்கே சென்றான் அவன்?
கையறுந்து - காலறுந்து - கண்புதைந்து - தலை பிளந்து

புத்திசாலி எதையும் உபயோகமில்லாததாக நினைப்பதில்லை.

உடல் சிதறி எங்கள் தமிழ்சாதி வதைபட்டபோதுகளில்
எங்கள் திருமுருகன் – தமிழ் கடவுள்
எங்கே சென்றான் அவன்?
தாய் ஒரு பக்கமுமாய் – தந்தை ஒரு பக்கமுமாய்
சேய் ஒரு பக்கமுமாய் – அண்ணன் ஒரு பக்கமுமாய்
தம்பி ஒரு பக்கமுமாய் – தங்கை ஒரு பக்கமுமாய்
தாத்தா ஒரு பக்கமுமாய் – பாட்டி ஒரு பக்கமுமாய்
எங்கள் தமிழ்சாதி சிதைந்து அழிந்து போகுகையில்
எங்கள் திருமுருகன் – தமிழ் கடவுள்
எங்கே சென்றான் அவன்?
போரின் கொடுஞ் சூழலில் – ஷெல் மழையில்
வட்டவட்டமிட்டு பொழியும் குண்டுச் சிதறல்களில்
எங்கெங் கெல்லா மிருந்தும் –
துப்பாக்கிச் சன்னங்கள் பாயும் பெருவெளியில்
சிக்கித் தவித்து தட்டுத் தடுமாறி – எங்கள் தமிழ்சாதி ஓடுகையில்
எங்கள் திருமுருகன் – தமிழ் கடவுள்
எங்கே சென்றான் அவன்?

* * * *

தாகத்தால் தவித்தும்
ஒருவாய் உணவிற்காய் ஏங்கித் தவமிருந்தும்
பால் மணம் மாறாப் பச்சிளம் பாலகர்கள்
பாலுக்காய் கதறியமும் பரிதவிக்கும் குரல் கேட்டும்
பற்கள் விழுந்த படுகிழவர் – பொல் ஊன்றி – பொல் ஊன்றி
நடந்து செல்லும் காட்சி கண்டும்
எங்கள் திருமுருகன் –தமிழ் கடவுள்
எங்கே சென்றான் அவன்?

* * * *

சாகும் தறுவாயிலும் – தப்பி ஓடிப் பிழைத்தவர்கள்
தங்கித் தேறி வாழ்வதற்காய்
ஒப்பாரி வைத்த சோகக் குரல் கேட்டுத்
தடுப்பு முகாங்களிலே – தடுத்து வைத்து – தடுத்து வைத்து

கொடிய வெஞ்சிறையில் வாடி வதங்கி
வசமிழந்து போகையில்
எங்கள் திருமுருகன் – தமிழ் கடவுள்
எங்கே சென்றான் அவன்?

* * * *

போரதனில் தப்பி புலம்பெயர்ந்து சென்ற
எங்கள் மூதாதையருடன் சேர்ந்து
மேற்குத் திசை நோக்கிச் சென்றானோ?
இலண்டனிலும் – பாரிசிலும் – ஜேர்மன் – சுவிஸ் நாட்டினிலும்
கோவில்கள் கண்டு குடியிருந்து விட்டானோ?
அமெரிக்கப் பெருநாட்டின் – பெரிய நகரங்களில்
எங்கள் சனங்கள் அடர்ந்து வாழும் கனடாவில்,
இனிதே நிரந்தரமாய் குடியிருந்து விட்டானோ?
சமாதானப் பேச்சென்று அங்குமிங்கும் திரிந்தானோ?
அல்லது கண்டும் காணாது கண்மூடி நின்றானோ?
நல்ல குருநாதன் நம்மை வருத்துவது?
பொல்லா வினை போக்க வென்று
அவனும் நினைத்தானோ?
எங்கள் திருமுருகன் – தமிழ் கடவுள்
எங்கே சென்றான் அவன்?
வன்னியில் எங்கள் தமிழ்சாதி வதைபட்ட போதுகளில்
எங்கே சென்றான் அவன்?

* * * *

எங்கேயும் செல்லவில்லை! எங்கேயும் செல்லவில்லை
எங்கேயும் செல்லவில்லை! எங்கேயும் செல்லவில்லை
எங்கள் தமிழ்சாதி உடனிருந்தே உறைகின்றான்
செல்லச் சந்நிதியில் – சீர் கதிர்காமத்தில்
மாவிட்டபுரத்தினில் – நல்லூர் திருநகரில்
மட்டக்களப்பில் – மண்டூர் திருப்பதியில்
திருக்கோவில் ஊரில் – பொலிகண்டிக் கடற்கரையில்
கப்பூதுப் பெருவெளியில் – பனியடர்ந்த மேல்நாட்டு

அதிக ஓய்வு அதிக வேதனையைத் தரும்.

நகரங்களில் எல்லாமே
எங்கள் தமிழ்சாதி வாழ்ந்திருக்கும் இடமெல்லாம்
எங்கள் திருமுருகன் – தமிழ் கடவுள்
கோவில் கொண்டு உறைகின்றான் – எழுந்தருளி அருள்கின்றான்

* * * *

முன்னொரு காலத்தில் – மாயங்கள் காட்டி மருள் செய்த சூரபத்மன்
உடல் பிளந்து – உடல் பிளந்து – சேவற் கொடி உடையோனாய்
மயில் ஏறும் பெருமானாய்
அடக்கி – அரசாண்டு – அருளாட்சி செய்வோனாய்
ஒரு திருமுருகன் வந்தான் – உலகம் உய்ய உதித்தோனாய்
ஒரு திருமுருகன் வந்தான் – இன்னொரு காலத்தில்
எங்கள் தமிழ்சாதி உய்தி பெறுதற்காய்
ஒரு திருமுருகன் வருவான்.
மாயங்கள் காட்டி மருள் செய்யும் சூரபத்மன்
மனம் மாறும் குணம் அழித்து – மனம் மாறும் குணம் கொடுத்து
எங்கள் தமிழச்சாதி உய்தி பெறுதற்காய்
ஒரு திருமுருகன் வருவான் – ஒரு திருமுருகன் வருவான்
எமக்கெலாம் விழவு தருவான் – புவிக்கெலாம் பொலிவு அருள்வான்.

---

கதிர்காம கொடியேற்ற
உற்சவத்தையொட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி
முருகன் ஆலயத்திலிருந்து
பாரம்பரியமாக நடைபெற்றுவரும்.
வேல் அனுப்பும் வைபவம் எதிர்வரும்
12.07.2010 திங்கட்கிழமை அன்று
மாலை ஆலயத்தில் பக்தி பூர்வமாக
இடம்பெறும்.



உ

(தொடர்ச்சி...




காங்கேசந்துறை கொல்லங்கலட்டியிலிருந்து நீண்ட காலத்தின் முன்னரே இடம்பெயர்ந்து தற்போது உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் கணபதி களஞ்சியம், வெதுப்பகம் எனும் வர்த்தக நிலையங்களை நடாத்தி வருகின்ற அன்பர்தான் திரு. செ. தவேந்திரநாதன். அவரது துணைவியார் திருமதி தவேந்திரநாதன் வசந்தகுமாரி குப்பிளான் உப-அஞ்சல் அலுவலகத்தில் உபதபாலதிபராக கடமை புரிந்து கொண்டிருக்கின்றார். சந்நிதிவேலவன் மீது அக்குடும்பத்திலுள்ள அனைவரும் மிகுந்த பக்தி பூண்டவர்கள். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாடுகளால் ஆச்சிரமத்துடனும் இணைந்து கொண்டவர்கள். மாதமொருமுறை வரும் பூரணை தினத்தில் முருகப் பெருமானுக்கு அபிடேகம் செய்வித்து வருகின்ற குடும்பம். தாங்கள் வர இயலாத நேரத்திலும் ஆச்சிரம சுவாமிகள் மூலம் சந்நிதியானுக்கு தமது நேர்த்திக் கடனை நிறைவு செய்வார்கள். அவர்களோடு சந்நிதியான் நடாத்திய விளையாடலை வைகாசி மாத ஞானச்சுடரின் தொடராக நாம் இப்போது வாசகராகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஆச்சிரம சுவாமியவர்கள் வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னதானச் செயற்பாட்டிற்கு அமைவாக வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சென்று பொருட்கள்

கொள்வனவு செய்துவிட்டு வரும் வழியில் உரும்பராய் கணபதி களஞ்சியம் அமைந்த பலாலி வீதியூடாக பல அடியார்கள் தரும் பொருட்களையும் பெற்று வருவது வழக்கம். அவ்வகையில் திரு. தவேந்திரநாதனும் அவர் துணைவியாரும் ஆச்சிரமத்தில் இருந்து தொண்டு செய்யும் தொண்டர்களுக்கு அன்றைய இரவு உணவாக தங்களது வெதுப்பகத் தில் விற்பனைக்காக விஷேசமாக தயாரிக்கப்பட்ட றொட்டியினைச் சுவாமி அவர்களிடம் கையளிப்பார்கள். அதனை ஆச்சிரம தொண்டர்கள் அன்றைய இரவு உணவாகப் பயன் படுத்துவார்கள். இதுவும் தவேந்திரநாதன் குடும்பத்தினரின் நீண்ட கால செயற்பாடு.

சில நாட்களில் நேர காலம் கருதி சுவாமி அவர்கள் றொட்டி எடுக்க இயலாத சமயத்தில் அவர்களே அவ் இரவு உணவினை (றொட்டியை) மோட்டார் சைக்கிளில் ஆச் சிரமத்திற்கு அனுப்பி வைப்பார்கள். றொட்டி தயாரித்துக் கொடுப்பதில் ஏதேனும் தடங்கல் ஏற்பட்டு ஆச்சிரமத்திற்கு வழங்காவிட்டால் அவ்வாரம் முழுவதும் றொட்டித் தயாரிப்பு சித்திக்காது. ஏதாவது தடங்கல்கள் வந்து றொட்டி வியாபாரம் நின்றுவிடும். மறுவாரம் சுவாமி அவர்கள் வழமை போன்று றொட்டியைப் பெற்றபின்தான் அச்செயல் சீர்படும். இதனைக் கருத்தில் கொண்டே தாங்கள் எவ்வித வேலைப்பளுவிருந்தாலும் வியாழன் இரவு ஆச்சிரம உணவு வகையில் தாம் கூடிய கவனம் எடுத்து அதனை செயலாற்றி வருவதாக வும் இதுவும் சந்நிதியானின் வேலை என்றும் இதன் மூலம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் சகல செயற்பாடுகளுக்கும் மூல காரணம் சந்நிதியான் என்று உணர்வு ததும்பிய நிலையில் என்னிடம் நேரில் அத் தம்பதியினர் தெரிவித்தார்கள்.

இச்செயற்பாட்டின் அடிப்படையில்தான் சந்நிதி ஆலயத்தில் தங்கியுள்ள சுமார் அறுபது முதியோருக்கு மூன்றுவேளை உணவு ஆச்சிரமம் வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. அதனை நாம் கடந்த மாத ஞானச்சுடர் மலரில் குறிப்பிட்டிருந்தோம். வியாழக் கிழமை ஆச்சிரம தொண்டர்களுக்கு இரவு உணவாக றொட்டி தயாரித்து தரும் தவேந்திர நாதன் குடும்பத்தினர் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் அம்முதியோருக்கு உணவாக தங்களது வெதுப்பகத்தில் உற்பத்தி செய்யும் பாணில் இருபது றாத்தல் பாணை ஆச் சிரமத்திற்கு அவர்களே நேரில் கொண்டு வந்து சுவாமி அவர்களிடம் கொடுப்பார்கள். சுவாமியும் அன்று இரவு உணவாக முதியோருக்கு வழங்குவார்கள். பாண் கொண்டு வருவதன் செயற்பாட்டின் ஊடாக பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சுவாமிகளோடும் அளவளாவிச் செல்வது வழக்கம், சுவாமி அவர்களும் அவர்களை உபசரித்து அன்போடு வழி அனுப்பி வைப்பார்கள்.

மேற்கூறிய இரு சம்பவங்களும் வாரத்தில் வியாழன் வெள்ளி நாட்களில் அவர்களது கடமை தவறாத காரியமாகும். இவ்வகையில்தான் 14.05.2010வெள்ளிக்கிழமை தவேந்திரநாத னின் பாண் வழங்கும் செயற்பாட்டினூடாக சந்நிதிவேலவன் அக்குடும்பத்தினரோடு நடாத் திய சம்பவத்தை அடுத்த மலரில் நாம் பார்ப்போமே.

ஓம் முருகா!

---

**ஒழுக்கம் தீமையை மறைக்கிறது.**

உ

தமிழகத் திருக்கோயில் வரிசை: தொடர்ச்சி....

# திருவக்கரை

## (அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில்)

**- வல்வையூர் அப்பாண்ணா அவர்கள் -**

ஊரின் பெயர் : **வக்கரை**

திருக்கோயில் பெயர் : **திருவக்கரை**

வடக்கு நோக்கிய காளி **வக்கிர காளி** எனப்படுகிறாள்.

மேற்கு நோக்கிய லிங்கம் **வக்கிர லிங்கம்** எனப்படுகிறது.

சிவலிங்கம் பார்த்திருக்கிறோம். சோமாஸ்கந்தர், பிட்சாடனர், நடராஜர் திருமேனிகள் பலவற்றையும் தரிசித்திருக்கிறோம். முகத்தோடு கூடிய மூலவரான லிங்கம் பார்த்திருக்கிறீர்களா? அதுவும் ஒன்றல்ல.... இரண்டல்ல.... மூன்று முகங்கள். இந்த அற்புத தரிசனம் வேண்டின் வாருங்கள் வக்கரை போவோம்.

திருச்சி - சென்னை நெடும்பாதையின் நடுவே திண்டிவனம் வருகிறது. திண்டிவனம் சந்தியில் கிழக்கே திரும்பி புதுச்சேரி பாதையில் "மயிலம்" தாண்டி "பெரும்பாக்கம்" வந்ததும் மீண்டும் தெற்கே திரும்பி 7 கி.மீ. தொலைவில் வருவது **வக்கரை**. தெரிவது **திருவக்கரை** திருக்கோயில். திண்டிவனம் விழுப்புரத்திலிருந்து அடிக்கடி பேருந்து வசதியுண்டு.

முற்றுமுழுதாக கிராமிய மணம் பரப்பி நிற்கும் இந்த ஊரை பற்றிய ஒரு சுருக்கமான தகவல். பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பு பூமியில் புதைந்த மரங்கள், அதே தோற்றத்தோடு, இங்கே கல்லாக - கல்மரங்களாக மாறியுள்ள இடம் இது. (விஞ்ஞான விளக்கங்கள் நீங்கள் அறிந்ததே) இந்தக் கிராமத்தின் அருகே உள்ள நெய்வேலியில் இதேமுறையில் மரங்கள் உப்பு நீரில் புதைந்ததால் நிலக்கரியாக மாறி, இன்று அந்த இடம் "நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்" எனப் பிரபலமாகியுள்ளது. ஆனால் இங்கே இத்தகைய மரப்படிவங்கள் வெள்ளையாக மாறியுள்ளமை அறிவியல் ஆய்வுக்குரியது. இந்த இடம் "தேசிய புதை படிவப் பூங்கா" என இந்திய அரசாங்கத்தால்

அறிவிக்கப்பட்டு தொல்பொருள் ஆய்வுகள் நடைபெறுகின்றன. மேடும் பள்ளமும், குன்றும் குழியுமாகக் காணப்படுகின்ற இடங்களில் மரப்படிவ எச்சங்களைக் காண முடிகிறது.

சிவனை எண்ணிக் கடும்தவம் செய்து பெறற்கரிய பல வரங்களைப் பெற்றான் வக்கிராசுரன். வரங்கள் பெற்ற மமதையில் கொடுமைகள் பலவுஞ் செய்தான். அனைவரும் சிவனிடம் முறையிட்டனர். வரம் கொடுத்தவரே வாழ்வை முடிக்க முனைவது நியாய மல்லவே! அதனால், மகா விஷ்ணுவை அழைத்து, வக்கிராசுரனை வதஞ் செய்யச் சொன்னார் பரமன். வக்கிராசுரனைத் தேடிச்சென்று சக்கராயுதத்தைப் பிரயோகித்து அவனை வதஞ் செய்தார் மகா விஷ்ணு. (1)

வக்கிராசுரனின் சகோதரி பெயர் துன்முகி. அண்ணனின் அதிகார பலத்தால் ஆணவம் தலைக்கேறி கொடுஞ்செயல் பலவுஞ் செய்தாள். இறைவன் பார்வதியை நோக்கினார். திருக்கைலையிலிருந்து அம்பிகை புறப்பட்டாள். துன்முகி அப்போ கருவுற்றிருந்தாள். சிசு என்ன பாவம் செய்தது? அதனால், சிசுவைக் கவனமாக எடுத்துத் தன் காதில் மாட்டிக்கொண்டு அவளை வதம் செய்தாள் பார்வதி. **வக்கிரன்** வாழ்ந்த இடமென்பதால் **வக்கரை** ஆகிவிட்ட அவ்வூரில் அம்பிகை காளியாக நின்று காட்சி கொடுத்ததால் **"வக்கிர காளி"** யானாள். (2) இந்த இரு செய்திகளும் ஸ்தல வரலாற்றினில் தெளிவுபட உள்ளது.

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஆதித்த சோழனால் கட்டப்பட்ட பழமையான கோயில் இது. ஆனால், அதற்கு முன்னரே இக்கோயில் இருந்ததற்கான சான்றுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். கிழக்கு நோக்கி ஏழு நிலைகள் கொண்ட "கண்டாராதித்தன் கோபுரம்" கம்பீரமாகக் காட்சி தருகிறது. கோபுர வாயிலின் கணபதியை வணங்கி உள்ளே நுழைந்தால் நேராக வடக்கு நோக்கிய **வக்கிரகாளி** அம்மன் சந்நிதி, பக்கத்திற்கு இருவராக பெரிய நான்கு துவார பாலகியர் நமது கவனத்தைக் கவருகிறார்கள். உள்ளே பெரிய **வக்கிர காளியம்மன்** நம்மைப் பயமுறுத்துகிறது. லேசாக இடதுபக்கம் சாய்ந்துள்ள தலை. தலையில் உள்ள கிரீடத்தில் மண்டை ஓடு. வலது காதில் சிசுக் குண்டலம். (சிசுவைக் காதில் புனைந்த வரலாறு ஏற்கனவே பார்த்தோம்) இடது காதில் ஓலைச் சுருள். பெரிய விழிகளுடனும் கோரைப் பற்களுடனும் பயம் காட்டி நிற்கும் முகம் அச்சத்தை ஏற்படுத்தினாலும் ஒரு வசீகரப் புன்னகை.

எட்டுத் திருக்கரங்கள். வலது கரங்களில் பாசம், சக்கரம் (திருமாலின் தங்கையல்லவா!), வாள், கட்டாரி. இடது கரங்களில் மேற்கரத்தில் உடுக்கை, அடுத்த இரு கரங்களிலும் கேடயமும் கபாலமும். கீழ்க் கரத்தின் ஆள்காட்டி விரல்,

---

*மரணத்திற்கு அஞ்சாதவனே வாழத் தகுதி பெற்றவன்.*

"வந்தடைந்தால் அபயம் அளிப்பேன்" எனக் காண்பிக்கும் பாணியில் இடது காலைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. காளிதேவியை வலம் வரும் பக்தர்கள் வலப் பக்கமாக 5 முறையும், இடப் பக்கமாக நான்கு முறையும் (அப்பிரதட்சணமாக) வலம் வருகிறார்கள். அப்பிரதட்சணத்திற்கான காரணம் நமக்கும் தெரியவில்லை. அவர்களுக்கும் புரியவில்லை. நவக்கிரகங்களில் ராகு - கேது இருவருக்கும் அதி தேவதையாக காளியே இருப்பது ஒரு காரணமாயிருக்குமோ? வக்கிரகாளியம்மனைக் கைதொழுது வெளியே வருகிறோம். அருகிலேயே ஒருபுறம் யோகேஸ்வர லிங்கமும் மறுபுறம் வலம்புரி விநாயகரும் உள்ளனர். வலம்புரி விநாயகரின் தரிசனம் கிடைத்தற்கரிய பேறாகும்.

**வக்கிரகாளி** அம்மன் திருக்கோயிலை அடுத்துள்ள தீபலட்சுமி கோயில் பக்கமாக **வக்கிராசுரன்** பூசித்த லிங்கம் உள்ளது. **வக்கிரன்** பூசித்ததால் **வக்கிரலிங்கம்** என்று பெயர்கொண்டு அனைவருக்கும் அபயம் தருகிறார். கோடை காலத்தில் குளிர்ச்சியாகவும், மழை காலத்தில் லிங்கத்தின் மேற்பகுதியில் முத்துமுத்தாக நீர்த்துளிகளும் காணப்படு வதான ஒரு விசேட குறிப்பு வரலாற்று நூலில் உண்டு.

இப்போது நாம் உட்கோபுரம் நோக்கி நடக்கிறோம். நமக்கு இடப்புறமாக மரத்தடியில் புற்றும், சுற்றிலும் நாகராஜர் கல் விக்கிரகங்களும் நிறையவே காணப்படுகின்றன. அங்கு பலபேரும் பொங்கல் செய்து தமது நேர்த்திகளை நிறைவு செய்வதைக் காணமுடிந்தது. வலதுபுறம் நூறு கால்களை உடைய "நூற்றுக்கால் மண்டபம்" சக்கரங்களும் குதிரைகளும் பூட்டிய தேர் அமைப்பில் உள்ளது. மண்டபத்தின் சிம்மத் தூண்கள் அழகானவை. சிங்கம் அமர்ந்த நிலையில் மேல் உத்தரத்தைத் தாங்குவது போன்று இத்தூண்கள் உள்ளன. பிரம்மோற்சவத்தின் போது சுவாமி - அம்மன் திருக்கல்யாணம் இங்கு நடைபெறுவதால் இதனைத் "**திருக் கல்யாண மண்டபம்**" என்றும் அழைக்கிறார்கள்.

திருக்கல்யாண மண்டபம் அருகே உள்கோபுரத்தை நோக்கியபடி கழுத்தை மேலே தூக்கிக் கொண்டு காட்சி தருகிறது பெரிய நந்தி, அருகே கொடிமரம். ஆனால் ராஜகோபுரம், தம்பம், நந்தி, கருவறை ஆகியவை ஒரே நேர்கோட்டில் இல்லாமல் ஒன்றைவிட்டு ஒன்று விலகி **வக்கிரமாகி** உள்ளது. "கிளிக்கோபுரம்" எனப்படுகின்ற உட்கோபுரம் ஒரு காலத்தில் ராஜகோபுரமாக இருந்திருக்க வேண்டும். மூன்று நிலை களுடன் காணப்படும் இக்கோபுரத்தின் மேற்பகுதி பழுதடைந்த நிலையில் உள்ளது. கிளிக்கோபுர வாசலிலுள்ள துவார பாலகர்களிடம் அனுமதி பெற்று உள்நுழைந்தால் இரண்டாம் பிரகாரம் வருகிறது. இங்குள்ள கொடிமரமும் நந்தியும்கூட மூலவருக்கு நேராக இல்லாமல் சற்று விலகியே உள்ளது. இந்த ஸ்தலத்திலேயே வாழ்ந்து மறைந்த

"குண்டலினி முனிவரின்" ஜீவ சமாதி மீது லிங்க பிரதிஷ்டை செய்து "தியாகலிங்கச் சந்நிதி"யாக அழகுற அமைத்துள்ளார்கள். தெற்குச் சுற்றில் நந்தவனம். மேற்கே எதுவுமில்லை வடக்கே தனிக் கோயிலாக ஒரு அழகிய சந்நிதியில் வக்கிராசுரனை வதம் செய்த **வரதராஜப் பெருமாள்** அமர்ந்துள்ளார். ஆறடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் அருள் பாலிக்கும் நந்தகோபன் வக்கிராசுரனுடன் போருக்குப் புறப்பட்ட கோலத்தில் உள்ளார். வரதராஜருக்கு எதிரில் கருடாழ்வார். அருகிலேயே ஆஞ்சநேயர் சந்நிதியும் நவக்கிரக சந்நிதியும் காணப்படுகிறது.

நவக்கிரகங்களில் தலையாயவரான சனி காக்கை வாகனத்தோடு இங்கு வக்கிரச் சனியாகக் காட்சியளிக்கிறார். பொதுவாகக் காக்கை வாகனத்தின் தலை சனீஸ்வரனுக்கு வலப் பக்கமாகத் தெரியும். ஆனால், இங்கு காக்கையின் தலை இடப்பக்கமாக உள்ளது. திசைமாறிய சனியின் வக்கிரம் இது. நவக்கிரக சந்நிதியும் கிழக்கு நோக்கிய சகஸ்ர லிங்கமும், தெற்குப் பார்த்தபடியுள்ள ஆறுமுகரும் தனிக் கோயில்களில் அமர்ந்துள்ளனர். லிங்கபாணம் நீண்டுள்ள ஒரு லிங்கத்தில் 1008 சிறிய லிங்கங்கள் செதுக்கப்பட்டுள்ள அற்புத லிங்கம் மேற்கூறிய சகஸ்ர லிங்கம்.

இரண்டாம் பிரகாரத்து வட கிழக்கு மூலையில் அம்பாள் சந்நிதி. அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்கள் கொண்ட மண்டபத்துடன் கூடிய சந்நிதியில் தெற்கு நோக்கியபடி வடிவுடையம்மன் (அமிர்தேஸ்வரி) நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். இரண்டாம் பிரகார சுற்றினை நிறைவு செய்து சில படிகள் ஏறி உட்பிரகாரத்துக்கு வருகிறோம். கருவறை வாசலருகே நாம் வந்துவிட்ட போதும் முதலில் உட்பிரகார வலத்தினை முடித்துக் கொண்டு மூலவரைத் தரிசிப்போம்.

வாசலின் அருகே ஒரு புறம் துர்க்கையம்மன், மறுபுறத்தில் வீரபத்திரர், விநாயகர், மகாலெட்சுமி, சண்முகர், பைரவர், நாகர், காளி எனப் பற்பல திருமேனிகள். வைரவர் சந்நிதியில் வாகனத்துடன் வழமைபோல நின்ற திருமேனி ஒன்று - அருகில் இன்னொரு வைரவர் இருந்த கோலத்தில் - இரண்டுமே அழகானவை. மூலவரின் கோஷ்ட மூர்த் தங்களாக சனகாதி முனிவர்களுக்கு உபதேசிக்கும் தெட்சணாமூர்த்தி, மகா விஷ்ணு, பிரம்மா, துர்க்கை உள்ளனர். சண்டிகேஸ்வரருக்குத் தனிச் சந்நிதி உண்டு.

உட்பிரகார வலத்தை நிறைவு செய்யும் வேளையில் நாம் நடராஜர் சபைக்கு எதிரில் வந்து நிற்கிறோம். தென்முகம் நோக்கித் திருப்பாதம் தூக்கி ஆடும் கூத்தனின் தரிசனம். ஆனால்... ஏதோ ஒரு மாறுபாடு... வழமையாக இடப்பாதம் தூக்கி ஆடும் நடராஜப் பெருமான் இங்கே வலது பாதம் தூக்கி ஆடுகிறார். தூக்கிய திருவடி இடுப்புக்கு மேலாக வரும் ஆவேச நடனம். நடராஜரின் சடாபாரம் விரிந்து பறக்காமல்

கூட்டிக் கட்டிய கொண்டை போன்று முடிந்தபடி உள்ளது. எங்குமே காண முடியாத இந்த வித்தியாசமான தாண்டவத்தை **வக்கிர தாண்டவம்** என்கிறார்கள்.

கருவறையின் உள்ளே அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் தரிசனம் கிடைக்கிறது. சதுரமான அடிப்பாகத்தில் வட்டமான ஆவுடையார் மேலே மூன்று முகங்களைக் கொண்ட கம்பீரமான முகலிங்க திருவுருவம். இது வேறெங்குமே காணமுடியாத அதிசயம். இந்த முகலிங்க மூலவரான சந்திரமௌலீஸ்வரர், கிழக்கு நோக்கிய தத்புருட முகம் - வடக்கு நோக்கிய வாமதேவமுகம் - தெற்கு நோக்கிய அகோர முகம் என மும்முகங்களுடன் அருள் பாலிக்கிறார். வாயின் இரு ஓரங்களிலும் நீட்டிக் கொண்டிருக்கும் கோரைப் பற்கள் அகோர முகத்துக்கு அழகு சேர்க்கிறது. அதிகாலையில் தத்புருட முகத்துக்கு மஞ்சள் பூசியும், உச்சிக் காலத்தில் வாமதேவ முகத்துக்கு சந்தனம் அணிவித்தும், மாலையில் அகோர முகத்துக்கு குங்குமத்தையும் அப்பி விடுகிறார்கள்.

கருவறை வாசலிலிருந்தபடி கிழக்கு நோக்கிய தத்புருட முகத்தை நேராகப் பார்க்க முடிந்தாலும், மற்ற இரு முகங்களையும்) வடக்கு - தெற்கு நோக்கிய) எப்படித் துல்லியமாகப் பார்க்க முடிந்தது என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. இரு முகங்களுக்கும் நேராக கருவறையின் உட்புறச் சுவரில் இருபக்கமும் பெரிய நிலைக்கண்ணாடிகளை (கருவறை வாசலில் நின்றபடி பார்க்கக்கூடியதாக) சரியான பாகையில் பொருத்தியுள்ளனர். அச்சகரின் அடுக்குத்தீப ஒளியில் முகங்கள் நிலைக் கண்ணாடியில் மிகத் துல்லியமாக - மிகத் தெளிவாகத் தெரிகிறது. மதியத்துக்கு - முந்தியதாக நமது தரிசனவேளை அமைந்ததால் சந்தனம் அப்பியிருந்த தத்புருடமுக தரிசனம் மன நிறைவைக் கொடுத்தது. அதேபோல தீபஒளியில் தெற்கு நோக்கிய அகோர முகத்து கோரைப்பற்கள் மனதில் ஒரு வித அச்சத்தை ஏற்படுத்துகிறது. முகலிங்க மூலவரின் அற்புத தரிசனம் கண்ட நிறைவுடன் வெளியே நகருகிறோம்.

இத்திருத்தலத்திற்கு வருகை தந்து **வக்கிர காளி, வக்கிர லிங்கம், வக்கிரச்சனி, முகலிங்க மூலவர்** முதலானோரைத் தரிசித்து கோயிலை வலம் வந்தால், வக்கிர கிரகங்களின் தொல்லைகளும் துன்பங்களும் நீங்கி நிறைந்த வாழ்வு பெறுவர்.

**"கார்மலி கொன்றையோடும் கதிர்மத்தமும் வாளரவும்**

**நீர்மலியுஞ் சடைமேல் நிரம்பா மதிசூடி நல்ல**

**வார்மலி மென்முலையாளொடும் வக்கரை மேவியவன்**

**பார்மலி வெண்டலையிற் பலிகொண்டுழல் பான்மையனே"**

- சம்பந்தர் தேவாரம் -

2010 150 ஞானச்சுடர் மலர் ஆனி

உ

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

**02.07.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "அம்மா ஒருபொருளும் அறிந்திலேனே"

வழங்குபவர் :- சுவாமி சித்ருபானந்தா [ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்] அவர்கள்

**09.07.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை" [பக்கவாத்திய சகிதம்]

வழங்குபவர் :- S. தயாபரநாதன் [நுண்கலைமாணி]

**16.07.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"பாடசாலை மாணவர் நிகழ்வு" [தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.]

**23.07.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

**30.07.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர்
## 151 ஆவது
## மாத வெளியீடு

## ஆடி 2010

வெளியீட்டுரை :- சைவப்புலவர் செல்வி. க. சசிலேகா அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி கௌரி சுரேசன் (ஆசிரியர்) அவர்கள்

பதிவு இல. Q.D/46/NEWS/2010

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

